512

காவேரி

சர்வஜித் – கார்த்திகை

தீபாவளி
வெளியீடு
பக்ஷிராஜாவின்
கன்னிகா
டைரக்ஷன்-ஸ்ரீராமுலு நாயுடு
ஸரோஜினி ★ வரதன் B.Sc. ● காளி N. ரத்னம்
ஸந்தானலக்ஷ்மி ● ஹரிணி ● லலிதா
ஹேமமாலினி ● கிருஷ்ணன் ● பத்மினி
பாலசுப்ரமணியம் ● மதுரம்
NARAYANAN Co Release

Picture courtesy Kodak Ltd.

நறு மணத்திற்கும்
புதுமைக்கும்

ப்ரூக் பாண்ட் தேயிலை



இரு இலையும் ஒரு மொட்டும்

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்: மதுரை

●

சிறந்த சேவை செய்து வருகிறது

நெருப்பு, மோட்டார், விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.

மொத்த ஆஸ்திகள் ரூ. 62,00,000

●

கிளைகள்: பம்பாய், அகமதாபாத், கல்கத்தா, ராவல்பிண்டி.

●

பிரதம ஏஜண்டுகள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரை Etc.

நான் ஜீவித் திருப்பேன்
மற்ற மருந்துகளால் குணம் படுத்த முடியாதென அபிப் பிராயப்பட்ட பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் இவ்வபூர்வ மருந்தினால் காப் பாற்றப்பட் டிருக்கின்றனர்.
ஹம்மிஸ்
லிவர் க்யூர்
லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்
பெரியதெரு
கும்பகோணம்.
LIVER CURE Branch Office
Parekh Mansion
Sandhurst Road. (West)
BOMBAY 4.

அடுத்த விளையாட்டுப் பந்தயத்தில்
அம்ருதா
ரத்த சுத்தி
திராவகம்..
கலக்கம், ஆயாச மில்லாமல் நன்கு விளையாடி வெற்றி பெறச் செய்கின்றது.
நரம்புகளை முறுக்கேற்றுகிறது
கேசரி குடீரம் லிட், மதராஸ்
ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு
ஏஜண்டுகள்:-
சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்
பேர்ஹாம்பூர், செகந்திராபாத், பெஜவாடா, மதுரை.

மிகவும் ருசிகரமானது மாத்திரமல்ல- இது நல்லது !

தவிர ஜீவசக்தியளிக்கும் விடமின்கள் நிறைந்தது

போர்ன்-வீட்டாவிலுள்ள நேர்த்தியான சாக்லெட் வாசனை இளையோர் முதியோர் அனைவராலும் விரும்பப்படுவது. அதிலுள்ள கால்ஷியமும் விடமின்களும் உங்கள் எலும்புகளை நன்கு வளரச்செய்து புதிய ஆரோக்யமும் ஜீவசக்தியும் ததும்பச் செய்கின்றன.

காட்பரீஸ்

போர்ன்-வீடா

கால்ஷியம், விடமின்கள் நிறைந்தது.

KB37M

காட்பரி என்பது சிறந்த ரகத்துக்கு அறிகுறி

சப்ளைகள் கிடைக்காவிட்டால் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்:—
காட்பரி-ப்ரை(எக்ஸ்போர்ட்) லிட், (Dept "16") தபால் பெட்டி 1417-பம்பாய்.

உட்குடைந்து தீட்டப்பட்டவை பால் பிளேடுகளில் விசேஷம் இதுதான்



பால் பிளேடுகள் உட்குழிவோடு உள்ளன - அதனுல்தான் ரேஸர்களில் உபயோகிக்கும் பொழுது வளைந்து கொடுக்கும் தன்மையன - மற்ற வைகளைப் போல மடங்காத கடினமானவையல்ல.

உட்புறம் குடைந்துள்ளதால் பிளேடுகள் லேசாக வளைந்து கொடுத்து க்ஷவரம் செய்யும் முனைகள் குறையாதபடி அனுகூலம் செய்கின்றது. மெல்லிய தோல்களுக்கும் சவுகரியமானவை: பால் பிளேடுகளை ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள்.



இரண்டு முனையுடையது 4க்கு 5 அணு

PAL

அமெரிக்காவில் கண்டு பிடிக்கப் பட்டது.

PBC-1A

உட்குடைந்து தீட்டப்பட்ட ரேஸர் பிளேடுகள்

எல்லா சாதாரண ரேஸர் மிஷின்களிலும் சரியாக பொருந்துகின்றன.

சோல் விநியோகஸ்தர்கள்: இந்தியன் கமர்ஷியல் கம்பெனி லிட்.

45-47, அப்போலோ தெரு, போர்ட், பம்பாய்

தென்னிந்தியாவிற்குப் பூரண வினியோகஸ்தர்கள் :-

M/s. பாரி & கம்பெனி லிமிடெட், தபால் பெட்டி No. 12, மதராஸ்.

(& கிளை ஆபீஸ்கள்)

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.

உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக நாள் உழைக்கும்.

மைசூர் சில்க்

மைசூர்
கவர்ன்மென்ட்
தயாரிப்பு

கவர்ன்மென்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

★ ★

உண்மையான நீம் ஆயில் சோப் இதுதான்

சருமத்தைப் பாதுகாக்க அவசியமென்று நிபுணர்கள் கருதும் நீம் எண்ணெயினின்றும் தயாரிக்கப்படுவது **மார்கோ** ஒன்றுதான்.

தினசரி **மார்கோ** உபயோகித்து உங்கள் மேனியைப் பாதுகாருங்கள்.

மார்கோ சோப்

டாய்லட் & மெடிஸினல்

கல்கத்தா கெமிகல்

CALCUTTA CHEMICAL

BITA CAFFIN

பிடாகாபின்

(தலைவலி மாத்திரைகள்)



தலைவலி, பல்வலி, கால்களிலும் மூட்டுகளிலும் வலி, சூதகத்தின் போதுள்ள வலி முதலிய சகல வலிகளையும் நீக்கும். தூக்கமின்மை, மலேரியாசுரம் இவைகளையும் கண்டிக்கும். இருதயத்துக்கோ, குடலுக்கோ எவ்வித தீங்கும் செய்யாது.

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்

மூன்று மாத்திரைகள் கொண்ட பாக்கெட் அணா 1

BITA LAX

பிடாலாக்ஸ்

(இனிப்பான சாக்லெட் சுகபேதி)

இலேசாகவும், சுகமாகவும், மலச்சிக்கலை போக்க வல்ல குணமுள்ளது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

Stockist:—

M/s DADHA & Co., P. T. Madras

Manufactured by:—

BOMBAY TABLET MANUFACTURING COMPANY,

Post Box 2092, 176, Zaveri Bazaar, BOMBAY 2

இன்றுவரை நிகரற்றது.

கிடைக்கக்கூடிய சந்தன அத்தர்களில் மைசூர் சந்தன அத்தர்தான் மிக உயர்ந்ததும் சுத்தமானதும் ஆகும். வைத்திய உபயோகத்திற்கோ அல்லது சோப், இதர வாசனை திரவியங்கள் தயார் செய்யவோ 'மைசூர்' பெயர் கொண்ட சந்தன அத்தருக்கு மிஞ்சியது ஒன்றுமில்லை.

மைசூர்

சந்தன அத்தர்

மைசூர் கவர்ன்மென்ட் தயாரிப்பு. MSK/GTM

ஐந்து வருடங்கள்
பயிற்சி பெற்றதற்கு
பிறகு தான் ஒரு
டாக்டர் ஆகமுடியும்.
அதே போல ஒரு முக்கிய
விமான நிலயத்திலுள்ள
பர்மா - ஷெல் ஏவியேஷன்
சர்விஸ் ஸூபரின்டென்டெண்ட்
ஆகவும் ஐந்து வருடங்கள்
நீடித்த கடினமான பயிற்சி தேவை.
அவர்களையும் சர்வீஸைப்போலவே
நம்பலாம் . . .

**பர்மா-ஷெல்
ஏவியேஷன்
சர்வீஸ்**

விமான கம்பெனிகளால்
SHELL
நம்பப்படும் சர்வீஸ்

பர்மா-ஷெல் ஆயில் ஸ்டோரேஜ் அன்டு டிஸ்டிரிபியூடிங்
கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.

(இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்பெற்றது) ஏஜன்டுகள்.



ரஸாயன

வர்ண விசித்திரங்கள்

''பட்டினிலாடையும் பஞ்சில் உடையும் பண்ணி மலைகளென வீதி குவிப்போம்''—இது பாரதியார் வாக்கு.

நவீன ஸ்வதந்திர இந்தியாவில் நவ நவ கோல வேலைப்பாடுகளுடன் விதவித வண்ணங்களில் நூதன ஆடைகள் இனி தயாரிக்கலாம். பண்டைய காலத்தில் கண்டிராத வகையில் ஆடைகளும் அவற்றிற்கு சாயக் கலவைகளும் தயாரிப்பது ரஸாயனத்தின் உதவியால் இன்று சாத்தியமாகியுள்ளது. ஆடை நூல் உற்பத்தி, சாயத் துவைப்பு, கோலங்கள் அச்சிடல் வேலைகளில் வெகுவாக உபயோகப்படுவது ப்ளீச்சிங் பவுடர். காஸ்டிக் ஸோடா, குளோரின் திரவம் இவையே.

மேட்டூர் கெமிகல் இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் இப்பொருள்கள் உற்பத்தியில் தலை சிறந்து விளங்குகிறது.

CAUVERY BRAND

Mettur Chemicals
VITAL TO INDUSTRY

Issued by:
வெளியிடுவோர்:

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை, சேலம்

மானேஜிங் ஏஜெண்டுகள்:

சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட், திருச்சினுப்பள்ளி.

பூரண விற்பனை ஏஜெண்டுகள்:
அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிபியூடர்ஸ் லிமிடெட்
120, அரமனைக்காரத்தெரு, மதராஸ் 1

கிளை ஆபீஸ்கள்:

பெஜவாடா, கோயம்புத்தூர், கள்ளிக்கோட்டை, கும்பகோணம், மேட்டூர் அணை, சேலம், திருச்சினுப்பள்ளி, திருவனந்தபுரம், ஹைதராபாத்.

MADRAS

குழந்தைப்பருவத்தில்

முக்கியமான சுகத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்



WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND

Agent:—T. T. KRISHNAMACHARI & Co.

12A Lingha Chetty Street, — G. T. MADRAS.

– நிச்சயமாகத் தவறாது பலனளிக்கும் –
சில மருந்துகளை அறிமுகப்படுத்துகிறோம்

விமலா மாத்திரைகள் நெ. 1:

பலவீனம், நரம்புத் தளர்ச்சி இதர நரம்பு, மனக் கோளாறுகள், ஸ்பெர்மடோரியா, தூக்கமின்மை, ஸ்வாசகாசம், மூல ரோகம், ரத்தக் கட்டிகள், கிரந்தி வீக்கம், புண், படை, ஸ்திரீகளின் மர்ம வியாதிகள், அஜீரணம், பிளவை முதலியவற்றை நிவாரணம் செய்யக்கூடியவை.

விமலா மாத்திரைகள் நெ. 1 (ஸ்பெஷல்):

க்ஷயரோகத்தை நிவர்த்திக்கும்.

விமலா மாத்திரைகள் நெ. 2:

சகலவிதமான ஜ்வரங்கள், சூதக வாயுவுகள், கீல் வாய்வுகள், கபம், இடுப்புப் பிடிப்பு, குஷ்டம், துர்நாற்றத்துடன் கூடிய ரணங்கள், காதில் சீழ் வடிதல், பீனிசம், வீக்கம் முதலியவற்றிற்கு.

விமலா மாத்திரைகள் நெ. 2 (ஸ்பெஷல்):

கப சம்பந்தமான எல்லா நோய்களுக்கும் நலமளிப்பவை.

'எலீஷியம்' பாம்:

மெல்லியலாருக்கு ஏற்படக்கூடிய எல்லா நோய்களுக்கும் உபயோகிக்கப்படுவதால் இதை ஸ்திரீகளின் உற்ற நண்பர், தோழன் என்று இதற்குச் சொல்லலாம்.

காச (ஆஸ்த்மா) நிவாரணி:

குறித்த காலங்களில் வருகிற காசநோயைக் கண்டிக்க இருவேளை மருந்தே போதும்

அக்னி எண்ணெய்:

கீல்வாதம், சூலைக்கட்டு, தீவிரமான பக்ஷவாதம் முதலிய தீராதெனக் கருதப்படும் வியாதிகளை நிரந்தரமாக அக்னி எண்ணெய் நிவர்த்திக்கும்.

கபக் கோளாறுகளுக்கு 'பேடண்ட்' மாத்திரைகள்:

இருமல், மார்ச்சளி, காசம் (ஆஸ்த்மா) முதலிய வியாதிகளை உடனே போக்கடிக்கும். தீங்கற்றவை ஆகையால் எந்நேரமும் எந்நிலையிலும் உபயோகிக்கலாம்.

இன்னும் அநேக அற்புதத் தயாரிப்புகள் உள. எங்கள் கேட்லாக்குக்கு எழுதவும். பிரதிநிதிகள் இல்லாத பிரதேசங்களில் ஏஜண்டுகள் தேவை.

KAVIRAJ N. C. MUKHERJI, Baidyasastri,
10, Fakir Haider Lane, Kalighat, Calcutta 26.

பொருளடக்கம்

சர்வஜித்து மலர் 7 | கார்த்திகை இதழ் 4

பாஷாவாரிப் பிரிவினை 12

சோகத்தின் உயிர் 13
கி. ஸந்தானம்

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் 17
ராமய்யா

அணைந்த விளக்கு 24
வே. ரங்கராஜன்

நடன கலா 33
கே. சுந்தரம்மாள்

ஞானியின் மகள் 44
"ஆத்ரேயி"

பந்திக்கு முந்திக்கொள் படைக்குப் பிந்திக்கொள் 49
டீ. எஸ்.

சுயேச்சை மணம் 51
எம். எஸ். கமலா

ஏரி காத்த பெருமாள் 60
கலாதாஸன்

அன்புத்தளை 66
ஆர். எஸ்.

இந்திய விஞ்ஞானம் அன்றும் இன்றும் 72
ரா. ஸ்ரீ. சிந்தாமணி

ஆர்டிக் வீரன் அமண்ட்ஸன் 78
யோகி சுத்தானந்த பாரதியார்

கொலையாளி 82
க. கணபதி

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையவே, அவைகளுக்குப் பத்திராசிரியர் பொறுப்பாளியல்ல.

காவேரி

சர்வஜித்து
மலர் 7

"சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார்

கார்த்திகை
இதழ் 4

பாஷாவாரிப் பிரிவினை

இன்று நாட்டில் நடக்கும் கொலை, கொள்ளை, வகுப்புக் கலவரம், இவைகளுக் கெல்லாம் அடிப்படைக் காரணம் நாட்டுப் பிரிவினை என்பது எல்லோரும் அறிந்த விஷயம். முஸல்மான்கள் வேற்றுமை உணர்ச்சியைக் கிளப்பி விட்டார்கள். அவர்கள்விதைத்த விதையின் பலனை இன்று அனுபவிக்கிறார்கள். இந்த வேற்றுமை மனப்பான்மை மதத்தின் பெயரால் எழுப்பப்பட்டது. அதன் காரணமாக நாடு துண்டாடப்பட்டது.

இன்றுள்ள மாகாணங்களைத் திருத்தி, பாஷாவாரியாகப் பிரிக்கப்பட வேண்டும் என்ற கிளர்ச்சி வலுத்து வருகிறது. சமீபத்தில் கூடப்போகும் அரசியல் நிர்ணய சபையில் இது விவாதிக்கப்படும் என்று அறிகிறோம். காங்கிரஸ் பழைய காலத்தில் பாஷா—வாரி மாகாணப் பிரிவினைத் திட்டத்தை ஒத்துக்கொண்டது என்னவோ உண்மை. ஆனால் பாகிஸ்தான் பிரிவினைத் திட்டத்தின் பயனாக நாட்டில் உண்டாயிருக்கும் பேத உணர்ச்சியையும் வகுப்பு உணர்ச்சியையும்,கலவரங்களையும் சீர் தூக்கிப் பார்த்து இத்தகைய பாஷாவாரிப் பிரிவினை நன்மை பயக்கக்கூடியதா, இந்திய மக்களை ஒன்றுபடுத்தக்கூடியதா என்று தீவிரமாக ஆலோசனை செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

மத வேற்றுமையின் காரணமாக நாட்டுப் பிரிவினையை ஆதரித்தவர்கள்கூட இன்று நாட்டுப்பிரிவினை ஓர் பெரிய தவறு என்பதை உணர்கிறார்கள். தனித் தொகுதி ஏற்பட்ட பொழுது அதைச் சிலர் ஆதரித்தனர். பிறகு காலக்கிரமத்தில் அது விளைவித்த பேத உணர்ச்சியைக் காணும்போது அத்தகைய தொகுதிதான் வகுப்புவாத மனப்பான்மைக்கு அடிப்படை என்பதைக் கண்டு கொண்டனர். அதே முடிவுக்குத்தான் இந்நாட்டுப் பிரிவினையை ஆதரித்தவர்களும் வந்திருக்கக்கூடும்.

பாஷாவாரியாக மாகாணங்களைத் திருத்தி அமைத்தவுடன் இதே கதைதான் என்பதை வற்புறுத்த விரும்புகிறோம். இயற்கையில் ஒரே பாஷை பேசுகிறவர்களுக்கிடையே ஓர் வாஞ்சையோ ஒற்றுமையோ இருப்பதுஇயல்பு. அம்மாதிரியே ஒரே மதத்தினருக்குள் வாத்சல்யம் இருக்கிறது. தேசம் என்பது பல மதத்தினர், பல பாஷையினர்களைக்கொண்டதாகையால் இவர்கள் அனைவரையும் ஒருமனப்படுத்த அரசாங்கம் பாடுபட வேண்டும். இயற்கையாயுள்ள பேத உணர்ச்சிகளை அடியோடு மறக்கச்செய்து அப் பந்தங்களினின்று மக்கள் விடுபட்டு, 'தேசமக்கள் அனைவரும் ஒன்று, அவர்களுக்குள் எவ்வித பாகுபாடும் இல்லை' என்ற மனப்பான்மைக்கு அவர்களைக் கொண்டுவரவேண்டியது அரசாங்கத்தின் கடமை.

இந்திய யூனியன் புதிதாக அமைக்கப்பட்டது. அதன் மக்கள் அனைவரும் ஐக்கிய மனதோடு கூடி நின்றாலன்றி அது முன்னேற முடியாது. பண்டைக்காலத்தில் நம்நாடு பல சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்து ஒருவருக்கொருவர் போட்டியிட்டு மக்கள் மனம் பேதலித்து நாட்டை இழந்தனர் என்பது சரித்திர பூர்வமான உண்மை. அதேவிதமாக, இன்று நாட்டை நாம் பாஷாவாரியாகப் பிரித்தோமானால் மாகாணங்களுக்குள் போட்டி மனப்பான்மையும் விரோத-பாவங்களும் அதிகரித்து ஒற்றுமையின்றி நாடு குலைந்துவிடும்.

(16-ஆம் பக்கம் பார்க்க)

சோகத்தின் உயிர்

கி. ஸந்தானம்

"நண்பா! என் இதயம் உடைந்துவிடும் போலிருக்கிறது. மனித ஜன்மம் எடுத்து என்ன பிரயோஜனம்? மதம் காரணமாக மனிதனை மனிதன் கொல்வதா—ஆம் அவர்களுக்கு மதம்தான் பிடித்திருக்கிறது—நீயும் நானும் இருந்து என்ன உபயோகம்—பேர் பெத்தண்ணுதான்—அந்த மகான் செய்யும் காரியங்களில் ஆயிரத்தில் ஒரு பங்காவது நம்மால் செய்ய முடிகிறதா?"

"என்ன விஷயம்?"

"என்ன விஷயமா? நீ தினசரிச் செய்திகள் படிக்கிறதில்லையா? எந்த உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறாய் நீ?"

"ஓ! அதுவா?"

"என்ன அப்படி அலக்ஷியமாய்ப் பேசுகிறாய்? நீ கல்நெஞ்சு படைத்தவண்டா. ஊர் பற்றி எரிந்தபோது ஒருவன் வாத்தியம் வாசித்தானாம். அந்தக் கதைதான்."

"இருக்கலாம். பெருவாரியான விபத்துகளும், துன்பங்களும் என்னை அவ்வளவாகப் பாதிப்பதில்லைதான். இயற்கையின் சேஷ்டைகளால் ஏற்படும் கஷ்டநஷ்டங்கள்—பூகம்பம், வெள்ளம், போர் இவைகளால் உண்டாகும் உயிர்ச்சேதம்—பயங்கரமானவைதான். அவைகளைக் கண்டு மனிதன் பயங்கரக் கூச்சலிடலாம், கோபம் கொள்ளலாம். பெருமுயற்சி செய்து அதோடு போராடலாம். ஆனாலும் அவை மனிதனுடைய இதயத்தை முறுக்கிப் பிழிவதில்லை. அற்பமென்று கருதப்படும் சிற்சில சிறிய விஷயங்களைப்போல் நமக்குக் குலை நடுக்கம் உண்டாக்குவதில்லை.

"ஓர் குழந்தையைப் பறிகொடுத்த தாயாரின் துக்கம் வரம்பு கடந்ததுதான். தலைதூக்க முடியாத ஓர் பேரிடிதான். இருந்தாலும், ஆழமான இரணகாயமும் ஆறி விடுவதுபோல, அவளும் காலத்தின் உதவியால் தன்னைத் தேற்றிக்கொண்டு விடுகிறாள். அவள் வாழ்க்கைப் பயிருக்கு ஓர் வடிகால் இருக்கிறது—கண்ணீர். அது கருகிவிடாமல் இருப்பதற்கு ஓர் பாய்காலும் இருக்கிறது—அதுதான் காலம். ஆனால் வாழ்க்கையில் நேரும் சிற்சில சம்பவங்கள்—மனிதர்களிடத்திலே நாம் காணும் அல்லது ஊகிக்கும் சில துயரங்கள் நம் மனத்தின் ஆழத்திலே பதிந்து விடுகின்றன. அவை அட்டையைப்போல் நம் இதயத்தைப்பற்றிக் கொண்டு விடுகின்றன. அவ்வித துக்கங்கள் ஆழத்திலே கிடப்பதால், மேல்மட்டத்திலே அலை வீசுவதில்லை. இன்னதென்று பிடிபடாததால் மனதை விட்டு அகலுவதுமில்லை. துக்கத்தின் ஓர் சரடு மனதைச் சுற்றிச் சுற்றிச் சுருக்கிடுகிறது. ஓர் பிராணியின் உடலில் வளைந்து கொண்ட ஓர் பாம்பு நன்றாய்ச் சுற்றிக் கொண்ட பின் அதை இறுக்குவதுபோல, காலம் செல்லச் செல்ல கயிற்றின் சுருக்கு நெருக்குகிறதே யொழியத் தளர்வதில்லை.

நான் சொல்வது ஒருவேளை உனக்குப் புரியாதிருக்கலாம். பல வருடங்களுக்கு முன் நான் கண்ட ஓர் காட்சி இன்னும் என் மனதைவிட்டு அகலவில்லை. நாகரிகத்தின் பெயரால் நாம் இழைக்கும் கொடுமைகள் கணக்கில் அடங்கா என்பது என் அபிப்பிராயம்.

"இருக்கட்டும் உன் கதையைச் சொல்லேன்"

"நான் சொல்லப்போவது கதையல்ல. உண்மைச் சம்பவம்தான். எனக்கு அப்போது சிறுவயது. என் சுபாவம்தான் உனக்குத் தெரியுமே. ஒருவரோடும் அதிகமாகப் பழகமாட்டேன். கூட்டமும் கும்மாளமும் எனக்குப் பிடிப்பதில்லை. ஓர் இயந்திரம்போல் இயங்கும் நகர வாழ்க்கையில் என்ன இருக்கிறது?

விடுமுறை நாட்களை நிம்மதியாய்க் கழிப்பதற்காக நான் கிராமத்திற்குச் சென்றிருந்தேன்,

கிராமவாழ்க்கை! அக்காலங்களில் அது எவ்வளவு நிம்மதியா யிருந்தது. கற்புள்ள ஓர் புனிதையின் புன்முறுவல் போல எவ்வளவு ரம்மியமாயிருந்தது! அப்போதே க்ஷீணதசை ஆரம்பமாய் விட்டது. ஆனல் இப்பொழுது நாம் பார்ப்பதைப்போல் அவ்வளவு மோசமில்லை.

காலையில் எழுந்து காலைக்கடன் முடித்து ஸ்நாநம், சந்தி செய்து பழையது உண்டு, வயல் பக்கம் செல்வது என் வழக்கம். அங்கே ஒரு தோட்ட மிருந்தது. அங்கேபோய் நிம்மதியாய் ஓர் மரத்தின் நிழலில் உட்கார்ந்து கொள்வேன். சிற்சில சமயம் கம்ப ராமாயணம், வில்லிபாரதம் அல்லது நளவெண்பா ஏதாவது ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டு வாசிப்பேன். சிற்சில சமயம் வண்டுகளின் சங்கீதத்திற்குச் செவிசாய்த்துக் கனவு உலகத்தில் சஞ்சரிப்பேன். கைப்புத்தகம் என்னை யறியாமலே என் மடிக்கு நழுவி விடும். வேறு சமயங்களில் இயற்கையின் சோபையிலே சொக்கி இருப்பேன். கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் ஜரிகைக் கம்பளம்போல் விரிந்திருந்த நெற் பயிர்களைக் காண என் மனம் குதிகொள்ளும். இலேசாக வீசிய மென்காற்றில் வளைந்து கொடுத்த கனக் கதிர்கள் மஞ்சள் பட்டாடை யணிந்த மெல்லியலாள் ஒருத்தி என் காலடியிலே நமஸ்கரித்ததுபோலக் காட்சியளிக்கும். சலசலவென்று அரித்தோடிய வாய்க்கால், குளிர்ந்த நிழல், பூங்காற்று இவைகளெல்லாம் என் மனக் குதிரையைத் தட்டி விடும். இன்பத்திலே திளைத்து எழுந்த என் சொற்களும் கவியால் வெளிவரும்— கருணரஸம் பொங்கி வால்மீகி வாக்கிலே கவிதை பெருகியதுபோல். ஆம் இயற்கை நமக்குப் போதிக்கிறது. அதை யறிந்து நாமும் பிறருக்குப் போதிக்கும் தொழில் தான் உயர்ந்தது, புனிதமானது என்கிற எண்ணம் அப்போதெல்லாம் எனக்கு உண்டாயிருக்கும் என்று நினைக்கிறேன்.

நான் அத்தோட்டத்திற்கு அநேகமாய்த் தினமும் செல்வேன். அதன் ஒரு கோடியில் சென்று ஓர் மர நிழலில் உட்கார்ந்து கொள்வேன். அந்த இடத்திற்கு வேறு ஒருவரும் வந்துகொண்டிருந்தார் என்பது எனக்குப் பலநாள் வரை தெரியாது. எனக்குப் பின்னுலிருந்த மற்றொரு கோடியில் அவர் தங்கிவிட்டுச் சென்றதாலோ அல்லது என் சிந்தனைகளிலேயே நான் மூழ்கியிருந்ததாலோ நான் அவரைக் கவனிக்காதிருந்திருக்கலாம். அவரும் என்னைப்போல் சாது போலும். பலநாளாகியும் அவரும் என்னிடம் வந்து குசலப் பிரச்னம் செய்ததில்லை. ஒரு நாள் நான் அங்கே செல்வதற்குக் கொஞ்சம் நேரமாகிவிட்டது. தோட்டத்திற்குள் புகுந்ததுமே அவரைக் கண்டுவிட்டேன். என் சுபாவத்தை யொட்டி அங்கு நில்லாமல் அவரைத்தாண்டி என் இடத்திற்குச் சென்றுவிட்டேன்.

அவர் ஒரு கிழவர். அவர் உடலம் வற்றிப்போயிருந்தது. தோலும் நரம்பும் தான் என்று சொல்லவேண்டும். கன்னங்கள் குழிவிழுந்திருந்தன. இரு பள்ளங்களுக்கு நடுவே பாலமிட்டதுபோல் நின்றது அவர் நாசி. அதன் ஒரு கோடியில் இருபக்கமும் அமைந்திருந்த விழிகள் இந்நாட்களில் இருப்புப் பாதையில் போடப்பட்டிருக்கும் பலகைகளின் அடியில் கவிழ்ந்து கிடக்கும் இருப்புச் சட்டிகளை ஞாபகப்படுத்தின. மேலே எடுப்பாயிருந்த நெற்றி, உழப்பட்ட நிலம்போல் பள்ளங்கள் விழுந்திருந்தது. அவர் வழுக்கைத்தலை உச்சியில் சப்பளங் கூட்டி உட்கார்ந்திருந்தது ஓர் முண்டாசு. இன்னதென்று விவரிக்கமுடியாத ஒரு சோகத்தின் சாயை அவர் முகத்திலே படர்ந்திருந்தது.

மறுநாளும், பின் பல நாட்களும் அவரைப் பார்த்தேன். அவர் அங்குவந்து என்ன செய்கிறர் என்று பார்க்கவேண்டும் என்ற ஓர் ஆசை எனக்குண்டாயிற்று. தூரத்திலிருந்தே ஒரு மரத்திற்குப் பின் மறைந்துகொண்டு கவனித்தேன்.

அவர் கையில் ஓர் குட்டைப் பிரம்பு வைத்திருந்தார். சிறிதும் பெரிதுமான பல செடிகள் வளர்ந்திருந்த இரு வரிசைகளுக்கு நடுவில் அவர் சிற்சில சமயம் உலாவினர் பிரம்பை வீசிக்கொண்டு. இவ்விரு வரிசைகளுக்குத் தலைப்புறத்தில் ஓர் மணல்மேடிருந்தது. அநேகமாய் அங்கேதான் அவர் உட்கார்ந்துகொள்

வார். கைப்பிரம்பை அழுத்தம் திருத்தமாய் ஆட்டிக்கொண்டே ஏதேதோ ஜாடை காட்டியது தெரிந்தது. ஒருநாள் இன்னும் கொஞ்சம் நெருங்கிக் கவனித்தேன். அவர் முக பாவம் அடிக்கடி மாறி வந்தது. முதலில் விநோதமாகத் தோன்றிய அவர் செய்கையில் எனக்கு ஓர் கவர்ச்சி பிறந்தது. இன்னும் சமீபத்தில் அணுகி, அவரறியா வண்ணம் மறைந்து கொண்டு கவனித்தேன் ஓர் நாள். கால்கள் தள்ளாடிய போதிலும் அவர் நடையிலே ஒரு முறுக்கு இருந்தது போல் தோன்றியது. அவர் வந்த வேகமும், முகத்தில் பிரதிபலித்த கடுகடுப்பும் மண் முட்டில் ஏறி அவர் உட்கார்ந்து கொண்ட ஜோரும் என்னைத் திகைக்கச் செய்தன. தம் குட்டைப் பிரம்பை மண் முட்டில் ஓங்கி ஒரு அடி அடித்துவிட்டு, தம் முன்னால் இருந்த செடிகளின் மேல் அவர் தம் திருஷ்டியைச் சுழற்றினார். வீசிய ஓர் மெல்லிய காற்றில் அவை நடுங்கின. சின்னஞ்சிறு செடிகள் காற்றில் வளைந்து ஒன்றையொன்று தழுவிப் பேசிக்கொண்டன. திடீரென்று கிழவர் எழுந்தார். விர்ரென்று சென்று உயரமாய்த் தலை வணங்காது நின்ற ஓர் செடியிடம் சென்றார். பிரம்பை ஓங்கினார். ஓங்கிய வேகத்தையும், அது இறங்கிய வேகத்தையும் கண்டால், ஏது அந்தச் செடி அதோடு தொலைந்தது என்று நான் எண்ணமிட்டேன். ஆனால் என்ன ஜாலம்! பிரம்பு செடியைத் தொட்டபோது அது அதைத் தழுவிற்று என்றுதான் சொல்லவேண்டும். அவ்வளவு மென்மையாய் விழுந்தது அடி! ஏதோ ஓர் பெரிய காரியத்தைச் சாதித்து விட்டவர்போல முகத்தை வைத்துக் கொண்டு அவர் தம் பீடத்திற்குத் திரும்பினார். மறுபடியும் அவர் முகபாவம் மாறியது. அன்பெனும் ஆறு கரைபுரண்டதுபோலக் கருணை அவர் முகத்தில் பொங்கி வழிந்தது. தம் கைப் பிரம்பால் வெட்ட வெளியில் ஏதேதோ வரைந்தார். கையோட்டத்திற்குத் தக்கபடி அவர் தலை சாய்ந்து கொடுத்தது. அவர் விழிகள் ஒரு கோடியிலிருந்து மற்றொருகோடிக்குத் துள்ளின. இந்த மௌனப் பிரசங்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்ததுபோல் அவர் முகத்தில் புன்னகை அரும்பியது. மறுபடி செடிகளிடத்தில் ஓர் சலசலப்பு எழுந்தது. பிரம்பைக் கீழே வைத்துவிட்டு, கைகளை மார்பிலே மறித்துக் கொண்டார். கண்கள் சொருகின. இமைகள் தாமாக மூடிக்கொண்டன......சற்று நேரம் சென்றது. திடீரென்று விழித்துக் கொண்டு பிரம்பைக் கையில் எடுத்தார். அதை நேராகப் பிடித்து ஓர் செடியைக் குறிப்பிட்டு நீட்டினார். பிரம்பு மேலும் கீழும் ஆடிற்று. குறித்த செடி விறைப்பாய் நின்றது. அவர் முகத்தில் ஈயாடவில்லை. உதடுகள் துடித்தன, புருவங்கள் மேலேறின. பிரம்பை ஆட்டிக்கொண்டே பாதி எழுந்தவர் மறுபடி உட்கார்ந்தார். விறைப்பாய் நின்ற செடிக்கு இரண்டு செடிகள் தாண்டி நின்ற ஓர் 'வாண்டு'ச் செடி சலசலவென்று ஆடிற்று. கிழவர் சரியென்று சொல்வதுபோல் தலையை ஆட்டினார். இந்த நாடகம் சற்றுநேரம் நடந்தது. நான் கண் கொட்டாமல் என் மறைவிடத்திலிருந்து பார்த்துக்கொண்டு நின்றேன். கோவிலில் அர்த்த ஜாமத்தைக் குறிக்கும் மணியோசை மெதுவாகக் காற்றில் மிதந்து வந்தது. காற்றுச் சற்று வேகமாய் வீசியதாலோ என்னவோ, செடிகளிடை ஓர் பெரும் சலசலப்பு எழுந்தது. இந்த இனிய கீதத்தில் நான் சொக்கி நின்றிருந்தேன். நான் மறுபடி அந்த மண் மேட்டை நோக்கியபோது கிழவர் அங்கில்லை. தூரத்தில் அவர் தள்ளாடிக் கொண்டு செல்வது தெரிந்தது.

மறுநாள் நான் அவரைச் சந்தித்து குசலப் பிரசன்னம் செய்தேன். என் நமஸ்காரத்தைத் தெரிவித்துவிட்டுப் பேச்சுத் தொடங்கியபோது அவர் முகத்தில் இலேசாக ஓர் புன்முறுவல் படர்ந்தது. ஆனால் அந்த முறுவலின் ஆழத்தில் ஒளிந்திருந்த சோகச் சாயை ஒன்றை நான் கண்டேன். அவர் கதையைச் சுலபமாய்ச் சொல்லிவிடலாம். அவர் ஒரு ஆரம்ப ஆசிரியர்! அவர் வாழ்வெல்லாம் திண்ணையில் கழிந்து விட்டது. அவரைத் திண்ணையில் கிடத்தும் காலமும் நெருங்கி விட்டது. ஆனால்.........ஆனால்............ அவர் மனதைக் கவர்ந்திருந்த வாழ்வு அவரை விட்டு அகலவில்லை. திண்ணைப் பள்ளிக்கூடத்திலே தாம் தனியரசு செலுத்திய காலம் இனி வருமா என்று அவர் விழிகளில் எழுந்த சோகக் கேள்விக்கு நான் எப்படிப் பதில்கூற முடியும்!

பழையன கழிதலும் புதியன புகுதலும்—இதுதான் கால இயல்பு! மகா விஷ்ணு பத்து அவதாரங்கள் எடுத்ததாக நம் புராணங்கள் இயம்புகின்றன. பாவம்! ஓர் ஆரம்பப் பள்ளி ஆசிரியன் அக்காலத்தில் எடுக்க வேண்டியிருந்த அவதாரங்களுக்குக் கணக்குண்டோ? அவர் செல்வக் குழந்தைகள் அவருக்கு இட்ட செல்லப் பெயர்களுக்குத்தான் ஓர் சங்கியை உண்டோ? இப்படி அன்யோன்ய அன்பிலே எழுந்த கல்விக் கட்டிடம் எங்கே—இந்நாளில் அஸ்திவாரமின்றி எழுப்பும் கல்கோபுரம் எங்கே!

சில தினங்களுக்கெல்லாம் நான் மறுபடி வேலைக்குச் சென்று விட்டேன். நான் அந்தக் கிழவரை மறுபடி பார்க்கவில்லை. சென்ற வருடம் அக்கிராமத்திற்குச் சென்றிருந்தேன். எனக்குப் பழக்கப்பட்ட தோட்டத்திற்கு என் கால்கள் இட்டுச் சென்றன. வரிசைவரிசையாய் நின்ற செடிகளுக்குப் பதில் இங்கொன்றும் அங்கொன்றுமாய், சில மரங்கள் வளர்ந்திருந்தன. மணல் முட்டுக்கரைந்துவிட்டது. அச்சிம்மாசனத்தில் வீற்றிருந்த அந்தக் கிழவரும் அவ்வூரை விட்டு அகன்று விட்டார். எங்கே சென்றாரோ? அதோ விழுந்து கிடக்கும் அவர் வீட்டுக் குட்டிச் சுவர்கள்—கரைந்தும், விழுந்தும், சிறிதும் பெரிதுமாய் நிற்கும் மண் சுவர்கள்—இவைகளுக்கிடையே அவர் ஆவி இன்னும் உலாவுவது போல் எனக்குத் தோன்றுகிறது கையில் பிரம்போடு!

நகரத்தின் வீடுகளில் திண்ணையைக் காண்பது என்பது குதிரைக் கொம்பல்லவா? அபூர்வமாய் நான் ஒரு திண்ணையைக் கண்டுவிட்டால் என் கால்கள் மேலே செல்ல மறுக்கின்றன—இந்த ஞாபகம் என் மனதை அடிக்கடி வதைக்கிறது. உள்ளூரக் கிடக்கும் ஊமைக்காயம் போல அடிக்கடி உபத்திரவிக்கிறது.

உனக்கு இதெல்லாம் சிரிப்புக்கிடமாயிருக்கும் இல்லையா? இதெல்லாம் ஜ்வர வேகத்தில் எழும்பிய என் மனோகற்பனை என்று உனக்குத் தோன்றும். அப்படித் தானே?

அவன் நண்பன் பதில் ஒன்றும் சொல்லவில்லை. கொந்தளிப்பிலே எழுந்த மனம் மௌனத்திலே முடிந்துவிட்டது!

12-ஆம் பக்கத் தொடர்ச்சி

ஐக்கிய இந்தியாவில் இரண்டு ஆதிக்யங்களுக்கு மக்களை வணங்கச் செய்தால் காலக்கிரமத்தில் ஒரு ஆதிக்யம் அடிபட்டுப் போவது திண்ணம்.

பாஷாவாரிப் பிரிவினைக் கொள்கை அமுலுக்கு வரக்கூடும் என்ற செய்தி கேட்ட உடனேயே தெலுங்கு ராஜ்யம், தமிழ் ராஜ்யம், கேரள ராஜ்யம், மஹாராஷ்டிர ராஜ்யம் என்ற பாகு பாடுகள் தோன்றி, பலத்த போட்டா போட்டியில் மக்களை இறக்கிவிட்டது. ஒரு பாஷை பேசுகிறவனைக் கண்டு அடுத்துள்ள வேறு பாஷைக்காரன் என்ன உணர்ச்சியோடு அவனை நோக்குகிறான் என்பதைச் சற்று ஆராய வேண்டுகிறோம். இன்று வரை தமிழருக்கும் ஆந்திரர்களுக்குமுள்ள நேசபாவம் பிரிவினை ஆனவுடன் சீர்குலைந்து போகும் என்பது திண்ணம். பிரிந்த இரண்டு சகோதரர்களுக்குள் ஒற்றுமை ஏற்படுவது என்பது சரித்திரம் காணாத விஷயம். ஒரே குடும்பத்தில் சகோதரர்களுக்குள் சச்சரவு வேண்டாம் என்று பிரிவினை ஏற்படுகிறது. பிறகு அவர்கள் கூடுவதுமில்லை; காலக்கிரமத்தில் அவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற மனப்பான்மை கூட, இப்பிரிவினையினால், மறைந்துவிடுகிறது. இந்திய யூனியனுக்கும் அதே கதிதான் நேரிடும் பாஷாவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டால். அதோடு நில்லாது, பாஷைக்குப் பாஷை விரோத மனப்பான்மையையும் அம் மக்களிடையே போட்டி மனப்பான்மையையும் வேற்றுமை உணர்ச்சியையும் அது வளர்க்கும்.

இந்திய யூனியன் மக்கள் அனைவரும் ஒன்று என்ற மனப்பான்மையை வளர்க்க வேண்டுமாயின், அதன் மக்களைப் பாஷை, மதம், இவ்வடிப்படை வித்யாசங்களைக் கொண்டு பிரிக்கலாகாது என்று வேண்டிக்கொள்கிறோம். ஒரு பிரிவினையினால் ஏற்பட்ட நன்மைகளை மக்கள் கண்டு விட்டனர். இனியும் இத்தகைய தவறுகளைச் செய்ய வேண்டாம் என்று நமது தலைவர்களை வேண்டிக்கொள்கிறோம்.

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமய்யா

சென்ற மாதம் துணி நெருக்கடியைப் பற்றி நான் எழுதினேன் அல்லவா. மலர் வெளிவந்த சுமார் ஒரு வாரத்திற்குள் மத்திய சர்க்கார் அறிவிப்பு ஒன்று பத்திரிகைகளில் வெளியிட்டதை நேயர்கள் கவனித்திருக்கலாம். என்னவெனில், துணிப்பங்கீட்டை இலவசப்படுத்துவதற்காகவும் நெருக்கடியைக் கூடிய மட்டும் லேசுபடுத்துவதற்காகவும் மாகாணங்களிலுள்ள மில்லுகள், தற்சமயம் தயாரித்துக் கொண்டிருக்கும் துணி ரகங்களில் அனாவசியமானவைகளை நிறுத்தி வைத்து நாடோடி ஜனங்களுக்கு முக்கியமாக வேண்டியவைகளையே அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும் என்று விதித்துள்ளனராம். சென்ற மாதம் அம்மாஞ்சி அபிப்பிராயப்பட்டதும் இதுவே. பல மாதங்களுக்கு முன்பே இதை விதித்திருந்தால், துணிப்பங்கீடு எடுத்து இருக்க வேண்டிய காலம் வந்திருக்கலாம். பத்திரிகைகளில் அடிக்கடி நீங்களே கவனித்திருக்கலாம். காக்கி கார்டுராய் என்றும் காக்கிட்ரில் என்றும் காக்கி பாப்ளின் என்றும் லினன் கோட்டிங்ஸ் என்றும் பல விதமான உயர்ந்த விலையுள்ள ரகங்கள் வியாபாரிகளிடத்தில் மிஞ்சிப் போனதால், பங்கீடு ஜாப்தாவிலிருந்து அவைகள் எடுக்கப்பட்டதாகவும், யார் வேண்டுமென்றாலும் அவைகளை வாங்கிக் கொள்ளலாமென்றும் மாதம் தோறும் மூன்று அல்லது நான்கு முறை பத்திரிகைகளில் பார்க்கிறோம். இதனால் விளையும் அனுகூலம் யாருக்கு, பிரதி கூலம் யாருக்கு, அசந்தர்ப்பம் யாருக்கு என்பதை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். அனுகூலமாவது புதுப்பணப் பெருக்கு உள்ள வெட்டியாட்களுக்கு மாத்திரமே; அவர்கள் லினன் சூட்டுகளும் கார்டுராய் ப்ரீச்சஸ்களும் அணிந்து கொண்டு உலாவுவதற்கு வசதிகள் ஏற்படுகின்றன. ப்ரதிகூலமோ சாமான்ய ஜனங்கள் எல்லோருக்கும்; ஏனென்றால் ஒவ்வொரு முறையும் பங்கீட்டிலிருந்து எடுக்கப்பட்ட வஸ்துக்கள் ஏதாவது தங்களுடைய உபயோகத்திற்கோ அல்லது சக்திக்கோ அனுசரணையாக உள்ளது எப்பொழுதும் காணப்படாதது.

“செடி போயினதி பாபனவாரிக்கி பெட்டு” என்று கோமுட்டி சொல்லுவானாம்; அதாவது ஒரு பழம் அழுகிப் போயிற்றோ அல்லது பால் திரிந்து போயிற்றோ அப்பொழுது மனைவியிடம் தான் ஏதோ வெகு அருமையாகச் செய்வது போல, ‘அதை எடுத்து நம்ம வீட்டுப் புரோகிதர் வருவார், அவரிடம் கொடுத்துவிடு’ என்று சொல்லுவானாம் கோமுட்டி. அது போலவே சில மாதங்களாகத் துணி கண்ட்ரோல் என்பதிலிருந்து விலக்கப்படும் வஸ்துக்கள் எல்லாம் சாதாரணமாக ஒருவருக்கும் சாமான்யமாக ப்ரயோஜனப் படும்படியானதல்ல. ஆகவே இத்தகைய ரகங்களை உற்பத்தி செய்வதால் பருத்தி நஷ்டம், நூல் நஷ்டம், தொழிலாளர்களின் சிரம நஷ்டம்; ஆகவே தேசத்திற்குப் பொதுச் செல்வ நஷ்டம்.

பெங்களூரிலும் சென்னையிலும் பின்னி அண்டு கம்பெனி ஆதரவில் இரண்டு மில்லுகள் வேலை செய்கின்றன. இவைகளில் நெய்யப்படும் துணி ரகங்கள் ஏறக்குறைய எல்லாம் சுதேச பாணியை வழுவிச் சட்டையிடும் ஜனங்களுக்கு உபயோகமானவை. சுதந்திரம் வந்தபின் ஆங்கிலேயர் மாதிரி உடுப்புகள் இட்டு வரும் நம் மக்களைப்பற்றி நாம் என்ன அபிப்பிராயப் படவேண்டுமென்று முந்தியே அம்மாஞ்சி தெரிவித்திருக்கிறான். எவ்வித தௌர்ப்பாக்கியத்தினாலோ அவர்கள் தம்முடைய உடைகளின் தோரணையை இந்திய ஸம்பிரதாயப் பிரகாரம் மாற்றிக் கொள்ளச் சௌகரியப் படாவிட்டாலும், அவர்களுக்கு வேண்டிய துணி ரகங்களைப் பற்றி, மாகாண ஸர்க்காரோ, மத்திய ஸர்க்காரோ அனுதாபப்பட வேண்டியது முற்றிலும் அனாவசியம். ஆகையால் மேற்கூறிய இரண்டு மில்லுகளுக்குப்

புதிய விதிகள் ஏற்படுத்த வேண்டுமென்கிறான் அம்மாஞ்சி. அவர்கள் நெய்யும் அனாவசிய ரகங்கள் எல்லாவற்றையும் நிறுத்தி வைக்க வேண்டும்; உதாரணமாக வெள்ளைட்ரில் இஜிப்ஷன் லஸ்டலின், ஸ்ட்ரைப்டு ஷர்டிங், டர்க்கி டவல்ஸ், ஸில்க்ஸூட்டிங்ஸ்.

இவைகளுக்குப் பதிலாகச் சாமான்ய ரகங்களில் வேஷ்டிகளுக்குத் தகுந்த வெள்ளைத் துணிகளும்; சட்டைகளுக்குத் தகுந்த வெள்ளையோ அல்லது வர்ணமுள்ள துணிகளோ இந்த இரண்டு மில்லுகளும் நெய்து தள்ளுவார்களேயானால் பட்டணத்தில் பங்கீட்டிற்கு அவசியமே போய்விடும்,

* * *

நேற்றையதினம் சென்னைச் சட்டசபையில் ஒரு அங்கத்தினர் சர்க்காரை ஒரு நுட்பமான கேள்வி கேட்டார். என்னவென்றால், கவர்மெண்டு உத்தியோகஸ்தர்கள் பொது ஜனங்களிடமிருந்து பண வசூல் செய்வது, எத்தகைய பொதுநல காரியத்திற்காக இருந்தபோதிலும், தவறானதல்லவா?, ஆகவே கல்வி இலாகா மந்திரி தமிழ் சகல கலா நிகண்டு விஷயத்தில் ஈடுபட்டு மும்முரமாக வசூலிக்கிறாரே, அது மாத்திரம் தவறன்றோ? என்று கேள்வி கேட்டார். அதற்குப் பதில் சர்க்கார் அளித்தது நாம் எதிர்பார்த்தமாதிரியே ஆயிற்று; என்னவென்றால் கவர்மெண்டு உத்தியோகஸ்தன் என்பது மந்திரி ஸ்தானத்திற்குக் கீழ்ப்பட்டு உள்ளவர்களுக்கே குறிப்பிடத் தகுந்தது என்றும், அவர்களுடைய நடவடிக்கைகளை விதித்துள்ள சட்டங்கள் மந்திரி ஸபையோரில் உள்ளவர்களுக்கு வழங்காது என்றும் சொல்லிவிட்டனர். இது இதோடு போகிறது. ஆனால் ஒவ்வொருமுறையும் இத்தகைய கேள்வி கேட்கும்போதெல்லாம் நம்முடைய ஞாபகங்கள் பலவருஷங்களுக்கும் பல விஷயங்களுக்கும் ஓடுகின்றன. உத்தியோகத்திலும் செல்வாக்கிலும் இருப்பவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு விஷயத்தில் அதிப்ரேமை ஏற்படுவது ஸகஜம். ஒருவருக்குச் சங்கீதம் பிடிக்கும்! இன்னொருவருக்குச் சீட்டாட்டத்தில் ஏக பைத்தியம் இருக்கும்; மற்றொருவருக்குக் கோவில் குளம் சுற்றிப் பார்ப்பதில் ஒரே பித்தாக இருக்கும்; நான்காவது ஒருவருக்கு ஒரு லேடிஸ்க்ளப் கட்டிவைத்து, தம் மனைவியை அதில் அக்ராஸனர் ஆக்குவது ஜீவ காரியமாக இருக்கும். இதுபோல் பிரபஞ்சத்தில் பிரகிருதிகள் எத்தனை விதமோ அத்தனை வித அபூர்வ அபிலாஷைகளுமுண்டு.

சாமான்யன் ஒருவன் ஏதாவது ஒரு விஷயத்தில் அதிப்ரேமை வைத்திருந்தால் அது முன்னுக்கு வராது. உத்தியோக தோரணையிலும் செல்வாக்கிலும் இருக்கும் ஒருவன் சிறிது மும்முரமாக ஈடுபட்டால், அதைத் தன்வரையில் வைத்திருப்பதும் கஷ்டம், தன்னை மீறி, தன் ஆதீனத்தில் சிக்குப்படும் ஆட்களிடத்தில் பரவிவிட்டால் அதனால் விளையும் ஆபத்து, கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது மாதிரியாகும். நம்முடைய புது ஸப்ஜட்ஜூக்கு ஸங்கீதமென்றால் உயிரை விட்டுவிடுவாராம் என்று ஒருவன் கிளப்பிவிட வேண்டியதுதான்; உடனே ஸப்கோர்ட்டில் பெரிய தாவாக்கள் உள்ள சௌக்கார்கள் எல்லோரும் ஏதாவது ஒரு புண்யாஹவாசனமோ ப்ராயச்சித்தமோ சாக்கை வைத்துக்கொண்டு மதராஸிலிருந்து ம. ஷ. சுப்பலக்ஷ்மி அம்மாளையோ அல்லது D. K. பட்டம்மாளையோ பாடச் செய்து, ஸப்ஜட்ஜை வரவழைத்து மேடைக்கருகில் நாற்காலியிலமர்த்தி, அவர் தலையில் பன்னீரையும் சந்தனத்தையும் கொட்டி, அவர் வயிற்றில் காப்பியையும் கலரையும் கொட்டி, இரண்டு விசிறிபோட்டு விசிறச் செய்து, நன்றாய் இருந்த மனிதனை நல்ல ஜலிப்புடனும் வயிற்று வலியுடனும் வீட்டிற்கு அனுப்பிவிடுவார்கள். நமது ராஜதானியில் (I. C. S.) ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர்களில் சிலர் இருக்கின்றனர். அவர்கள் உத்தியோகம் செய்த இடங்களில் எல்லாம் அவர்களுடைய மனைவிமார்களின் பெயர்களை வைத்து லேடீஸ் கிளப்புகள் கட்டுவதுதான் அவர்களுக்கு ஜோலி. ஒரு உத்தியோகஸ்தர் சில இடங்களில் முன்னதாகவே இருந்த கிளப்பையும் இடித்துவிட்டு, புதியதாகப் பணம் வசூல் செய்து தம்முடைய பத்தினிபேரில் இருக்கவேண்டும் என்பதற்காகப் புதிய கிளப்புகளைக் கட்டி வைத்திருக்கிறார். ஆனால் ஒருவராகிலும் அந்தந்த ஊர்களை விட்டு மாற்றலாகிப்

போகுமுன் பரம சந்தோஷத்துடன் போனதே கிடையாது.

யாராகிலும் ஒருவன் ஒரு மொட்டைப் பெட்டிஷன் எழுதி இட வேண்டியது தான், உடனே அந்த லேடீஸ் கிளப் விஷயம் முழுவதும் வெளிவந்து விடும்.

எவன் எவன் எந்தத் தொகையைக் கொடுத்தான் என்றும் அதற்காகக் கலெக்டர் அவனிடம் எவ்வளவு ஈடுபட்டிருந்தார் என்றும் ரஸாபாஸமாக வெளி வந்துவிடும். உத்தியோகஸ்தரும் ஊரைவிட்டு வெளியேறும் பொழுது, "நானும் எவ்வளவோ சிரமப்பட்டுப் பொதுஜன சேவைக்காகப் பணம் வசூலித்து இந்த ஊருக்கு ஒரு நல்ல கட்டிடத்தைக் கட்டி வைத்தேன். ஆனால் கடைசியாக என்மீது ஜனங்கள் அனுவசிய குற்றங்கள் சாட்டினார்களே ஒழிய நன்மை ஒன்றும் தோன்றவில்லை" என்று சொல்லிவிட்டு வெளியேறுவார். எல்லாம் சரிதான் என்கிறான் நம் அம்மாஞ்சி. ஒரே ஒரு காரியம்தான் இந்த உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் மறந்து விடுகிறது. அதாவது கட்டி வைத்த கட்டிடம் கிளப்பாய் இருக்க வேண்டியதில்லை; அதவா இருந்த போதிலும் லேடீஸ் கிளப் எதற்காக? அதுவும் போதாமல் கலெக்டர் ஸம்ஸாரத்தை அதில் இழுத்து விடுவானேன்?

கடைசியாக வரும் தகராறெல்லாம் அந்தப் புண்யவதியின் அல்ப சந்தோஷத்தால்.

ஆ[illegible]ல் அம்மாஞ்சி சொல்வது என்ன வெ[illegible] யாருக்காகிலும் சரி, பொது நலக்[illegible]த்தில் ஈடுபடுவது நியாயம் தான்; சிறிய உத்தியோகஸதர்களாய் இருந்தாலும் சரி, உன்னத ஸ்தானத்திலிருக்கும் மந்திரிகளாயிருந்தாலும் சரி, பொதுநலக் காரியங்களில் ஈடுபட்டு உழைக்கலாம், பணமும் வசூல் செய்யலாம், தவறு ஒன்றுமில்லை. ஆனால் கேட்குமுன் இது சரியான இடம்தானா, கேட்டால் கிடைக்குமா, கேட்பதினால் வேறுவித த்வந்தார்த்தங்கள் ஏற்பட்டு விடுமோ, பொதுநலத்திற்குப் பணத்தைக் கொடுத்துவிட்டுச் சுய நலத்திற்கு அடியில் கையை நீட்டுவானோ என்ற யோசனைகள் எல்லாம் முன்னதாகவே செய்ய வேண்டும். இல்லாவிட்டால் நாளடைவில் கஷ்டம்தான். இந்தப் பிடுங்கல் எந்தத் தேசத்திலும் எந்தக் காலத்திலும் உண்டு என்ற போதிலும் நம்முடைய தேசத்தில் எப்பொழுதும் அதிகரித்தே இருக்கிறது. நூற்றைம்பது வருஷங்களாக வெள்ளையர்களிடத்தில் அடிமைப்பட்டு அவர்களைக் குஷிப்படுத்தி நம்முடைய நாட்டினர்களைக் குழியில் இறக்கி முன்னணிக்கு வந்த ராஜாக்கள், நவாப்புகள், நாயக்குகள், ஜமீன்தார்கள், உத்தியோகஸ்தர்கள் பலர்களிடத்திலும் பாடம் படித்த ஜனங்கள் அவைகளை மறப்பதற்கு இனியும் சில வருஷங்கள் ஆகாதா?.

ஒரு சிறிய கதையுடன் இந்த விஷயத்தை நிறுத்தலாம். சுமார் முப்பது வருஷத்திற்கு முன் பட்டணத்தில் ஒரு பிரபல ஆங்கில ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர் பெரிய பதவியிலிருந்தார். அவருக்கு மோட்டார் யந்திரம், மோட்டார் வண்டி துடைத்தல், மெருகு ஏற்றுதல் இவைகளிலேயே அதிக ஊக்கம். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும் காலை ஏழுமணிக்கே துரையவர்கள் மோட்டார் ஷெட்டிற்குள் புகுந்துவிட்டு, பன்னிரண்டு மணிக்குக் கரியையும் எண்ணையையும் பூசிக்கொண்டு வெளியே வருவார். இந்த மர்மத்தை அறிந்தவர்களில் ஒருவர் துரையின்கீழ் வேலை செய்துவந்த குமாஸ்தா, நல்ல புத்திசாலி, பெ[illegible] குடும்பத்தைச் சார்ந்தவர். அவர் ப்[illegible]யேகமாக நல்ல தொழிலாளன் ஒருவனை வைத்துக் கொண்டு மோட்டார் வண்டியின் நுட்பங்களை எல்லாம் இரண்டு வாரங்களில் படித்துக் கொண்டு, துரை பங்களாவில் ஒரு ஞாயிற்றுக்கிழமை சரியான சமயத்தில் துரையுடன் மோட்டார் ஷெட்டில் புகுந்து கொண்டார். பிறகு விஷயம் சொல்லவேண்டியது அவசியமில்லை. இரண்டு வருஷங்களுக்குத் துரையும் குமாஸ்தாவும் சேர்ந்து ஒரே அன்யோன்யமாகவும் ஸரஸ ஸல்லாபத்துடனும் மோட்டார் வண்டிக்கு மெருகு ஏற்றினார்கள். அதற்கு அப்புறம் துரைக்கும் மற்றும் பெரிய வேலை ஆயிற்று. குமாஸ்தாவும் ஒரே துள்ளலாக டெபுட்டி கலெக்டர் பதவிக்குத் துள்ளினார். துரை இந்தியாவை விட்டுப் போகுமுன் குமாஸ்தா கலெக்டர் ஆகிவிட்டார்.

* *

அகில இந்திய ரேடியோவைப் பற்றி ஒன்றும் சொல்வதில்லை என்று அம் மாஞ்சி சில காலமாக ப்ரதிக்கினை செய்திருந்தான். அப்படி இருந்தும் தற்சமயம் ஒரே விஷயம் மாத்திரம் எழுதும்படி எனக்கு விடை கொடுத்திருக்கிறான். அதாவது திருச்சிறாப்பள்ளி ரேடியோ நிலையத்தில் சென்ற அக்டோபர் மாதம் நடந்த நிகழ்ச்சிகளில் சுமார் ஒரு இருபது நிகழ்ச்சிகள், காலை, மத்தியானம், சாயங்திரம் இரவு எல்லாம் நாங்களிருவரும் கேட்டோம்.

வாய்ப் பாட்டுகளுக்குப் பக்க வாத்தியங்களாக ஜோடித்திருந்த பிடில்காரர்கள் தங்களால் ஆனவரையில் வாய்ப் பாட்டைக் கெடுத்து நாசமாக்கி உருவு இல்லாமல் எவ்வளவு செய்யலாமோ அவ்வளவும் செய்தார்கள். குறுக்குவில் போடுவதும் கோணாமாணாவென்று கொட்டாங்கச்சி பிடில்மாதிரி இழுப்பதும் ஸகஜமாக இருந்ததே ஒழிய, கவுரவமாகவும் அனுஸரணையாகவும் வாய்ப்பாட்டுப் பாடுபவருடைய மனோதர்மத்தையும் கல்பனா சக்தியையும் கெடுக்காமல் வாசிப்போமே என்கிற ஆசையுள்ள பிடில் வாத்தியக்காரர் திருச்சி ரேடியோ நிலையத்தில் அக்டோபர் மாதத்தில் நாங்கள் கேட்ட நிகழ்ச்சிகள் ஒன்றிலாவது காணப்படவே இல்லை. மிகவும் மோசமாக இருந்த நிகழ்ச்சிகள் ஒன்று இரண்டைக் குறிப்பிட்டு வைத்து ஸ்டேஷன் டைரக்டருக்கு எழுதலாமென்றே நான் உத்தேசித்திருந்தேன். பிறகு யோசனை செய்ததில் என்ன உபயோகம், இப்படி எழுதினால் டைரக்டர் என்ன செய்வார், அவர் கையின் கீழ் உள்ள சரக்கு எந்த ரகத்திலிருக்கிறதோ அதைத்தானே அவர் பிரித்துக் காட்டுவார் என்று எனக்குத் தோன்றிற்று. பிறகு நிறுத்திக் கொண்டேன். என் யோசனையைக் கேட்டால் நான் என்ன சொல்லுவேன்—ரேடியோ நிலையத்திலுள்ள பிடில் வாத்தியக்காரர் எல்லோரையும் விஜய நகரம் அனுப்பி அங்கு த்வாரம் வேங்கடசாமி நாயுடுவிடம் மூன்று நான்கு மாதங்கள் சிக்ஷைப் படுத்திக்கொண்டுவந்தால் பிடில் என்கிற வாத்தியத்தைப் பக்க வாத்தியமாக எவ்வளவு அழகாக வாசிக்கலாமென்றும் ஸோலோ வாத்தியமாக எவ்வளவு கவுரவமாகக் கையாளலாமென்றும் அவர் நன்றாகச் சொல்லிக் கொடுப்பார். இல்லாமல் போனால் திருச்சிறாப்பள்ளி நிலையத்திலிருந்து வெளிக் கிளம்பும் சங்கீத நிகழ்ச்சிகளெல்லாம் வெகு சீக்கிரத்தில் பாழ் அடைந்துபோய்விடும் என்றே தோன்றுகிறது.

லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

அறிவிப்பு

எங்கள் தலைமைக் காரியாலயம் லக்ஷ்மி பில்டிங், கானாட் ஸர்[illegible] புது டெல்ஹி, என்ற விலாசத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது எ[illegible]பதை எங்கள் பாலிஸிதாரர்களுக்கும்; பொது ஜனங்களுக்கும் அறிவித்துக் கொள்ளுகிறோம். கம்பெனியின் ரிஜிஸ்டர் ஆபீஸ் தற்போது அமிருதசரஸில்தான் இருக்கிறது. சில சட்ட சம்பிரதாயங்களை திருப்திசெய்த பின்னர் புது டெல்ஹிக்கு மாற்றப்படும்.

பஞ்சாபில் கலவர நிலைமையின் காரணமாக ஆபீஸ் வேலைகளில் தாமதம் ஏற்பட்டதற்கும், பாலிஸிதாரர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்திற்கும் வருந்துகிறோம். இப்பொழுது புது டெல்ஹியில் வேலை துவங்கி விட்டதால், தாமதமின்றி முன்போல் சரிவர காரியாலயம் நடத்துவதற்கு இயலும் என்பதை உறுதியளிக்கிறோம்.

தேவி சந்த்
ஜெனரல் மானேஜர்.

K. ஸந்தானம்
டைரக்டர்—இன்—சார்ஜ்.

காலேஜ் மாணவிகள் ஏழை அகதிகளுக்காக ஆடைகள் திரட்டிச் சென்று அகதிகள் முகாமில் அதை விநியோகிக்கச் செல்லும் காட்சி.



ஆசியா கண்ட தொழிற்சங்க மஹாநாடு டெல்லியில் அரசியல் நிர்ணய சபையில் கூடிற்று. அகில உலக லேபர் கழகத்தின் நிர்வாக ஸ்தாபனத்தின் தலைவர் ஸர். கில்ஹாம் மைரேடின் இவாஃஸ் அதைத் திறந்துவைத்தார். பிரதமர் பண்டித ஜவாஹர் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசினர். இவான்ஸும் ஜவாஹரும்.

பிரதிநிதிகள் ஜவாஹர் பேச்சில் லயித்திருக்கும் காட்சி.



மஹாநாடு கூடும் இடம்.



காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லா.



அணைந்த விளக்கு

(வே. ரங்கராஜன்)

வீட்டு வாசலைக்கடந்து உள்ளே நுழைந்த போது என் கண்கள் ரேழித் திண்ணையைப் பார்த்தன.

நேற்றுச் சாயங்காலமும் அப்படித்தான். காரியாலயத்திலிருந்து வரும் பொழுது எவ்வளவோ உற்சாகமாகத்தான் வந்தேன். ஆனால் கடந்த இருபது வருஷங்களாக என்னுள் ஊறிய அந்தப் பழக்கம் என்னை யறியாமல் என் கண்களை ரேழிப்பக்கம் திருப்பிற்று. அதன் விளைவாக அன்று இரவு பூராவும் தூக்கம் இன்றிப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தேன்.

* * *

சென்ற வாரம் இந்த நாட்களில் இதே ரேழித்திண்ணையில் காயத்ரீ ஜபமும், கீதா பாராயணமும், ஸகஸ்ர நாமாவளியும் நடந்து கொண்டிருந்தன. தெளிந்த அன்பும் தெய்வ உணர்ச்சியும் இங்கே குடி கொண்டு இருந்தன.

ஆனால், இன்று என்னை வெறித்து நோக்கிய அந்த 'வெறும்—ரேழித்திண்ணை' என் மனதில் பெரும் சோர்வையும், சாவின் பீதியையும் எழுப்பிற்று.

என் அன்னை வசித்து வந்த இந்த ரேழித் திண்ணை இப்பொழுது காலியாக இருக்கிறது. சாசுவதமான ரேழித்திண்ணையைத் தேடிக்கொண்டு அவள் விண்ணுலகடைந்து விட்டாள்!

என்னை ஈன்ற அவள் இருந்த வரையில் ஏனோ இந்த மனம் அவளைப் பெரும் பாரமாக நினைத்தது. அசட்டுப் பிசட்டென்று எங்கள் சொந்த விவகாரங்களில் எல்லாம் அவள் தலையிட்ட பொழுதெல்லாம் நான் கோபமாக, 'வள்' என்று விழுந்தேன்.

தன் நடையுடை பாவனைகளை அடிக்கடி விமரிசனம் செய்து கொண்டிருந்ததால் அவள் மருமகளும் எப்போதும் எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகத்தோடேயே பழகினாள்.

* * *

இதை எல்லாம் நான் ஏன் சொல்ல வேண்டு மென்றால் கதைக்கும் அம்மாவுக்கும் இருந்த தொடர்பை உத்தேசித்துத் தான். அம்மாவின் தொடர்பு இல்லா விட்டால் இக்கதையை நான் கேட்டிருக்கவோ அல்லது ராஜத்தைப் போன்று உலக விவகாரம் அறியாத பெண்களுக்கு உபயோகமாக இருக்கட்டும் என்று நினைத்து எழுதியிருக்கவோ முடியாது.

இவ்வளவு பேருக்கும் ஆகாதவளாய் இருந்த அம்மா போய் விட்டாள்.

* * *

அம்மா செத்த செய்தியைக் கேட்டு அவள் வந்தாள். அவளுடைய ஜன்ம விரோதியான அம்மா, அவள் வாழ்வின் சீர்கேட்டிற்கே காரணமாக அம்மா வசித்து இறந்த ரேழித்திண்ணையைத் தொட்டு அவள் கண்ணில் ஒற்றிக்கொண்டு, அதைக் கண்ணீரால் நனைத்து அழுது பிரலாபித்த காட்சியைக் கண்டதும் என் எண்ண அலைகள் என்னை எங்கோ கொண்டு சேர்த்தன. வாழ்வின் தத்துவங்கள் அறியமுடியாத புதிர்களாகத் தோன்றின!

அந்த அம்மாள் பெயர் மாயவரம் ராஜமாம். நான் சிறியவனாய் இருந்த பொழுது அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இடையே நடந்த சண்டைகளுக்கெல்லாம் காரணமாய் இருந்தது, அந்தப் பெயர்! நான் அன்று தான் முதல் முதல் அந்த அம்மாளை நேரிலே பார்த்தேன். சுமார் ஐம்பது அல்லது ஐம்பத்தைந்து வயதிருக்கலாம். இளமையில் எழில் மிகுந்திருந்ததைச் சொல்லாமல் சொல்லும் முகம். உலகிலே மலிந்துள்ள கசப்பான வாழ்க்கை அனுபவங்களைச் சுவைத்து வறண்ட மனதைப்பிரதிபலிக்கும் சாந்தமான கண்கள்.

இவ்வளவு நல்ல குணமுள்ளவளைப் பற்றியா அம்மா அப்படிச் சண்டை பிடித்தாள்?

அந்தப் புதிரை அந்த அம்மாளே விடுவித்தார்கள்.

1. தேவதாசி.

"நான் இப்படி நடக்க முடியாமல் நொண்டிக்கொண்டு திண்டாடுகிறேனே அதற்குக் காரணமானவர் ஆனைதாண்டவபுரத்தில் கோயில் கொண்டுள்ள நீலகண்டேசுவரர்! உங்கள் அப்பா அல்ல!

மாயவரம் தாலூகாவைச் சேர்ந்த ஆனைதாண்டவபுரத்தில் ஒரு புராதனமான சிவன் கோயில் இன்றும் இருக்கிறது. அக்கோவில் ராஜராஜ சோழர் காலத்தில் கட்டப் பட்டதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். அதில் கோவில் கொண்டுள்ள சுவாமிக்கு நீலகண்டேசுவரர் என்று பெயர். ஈசுவரர் ரொம்ப சக்தி வாய்ந்த சுவாமி.

அந்தச் சிறிய சிவன் கோவிலுக்குக் கர்ண பரம்பரையாக வந்த ஏராளமான மான்யங்கள் இருந்தன. சில பெரிய நந்தவனங்களும் தென்னந்தோப்புகளும் இருந்தன. அப்படி பண்டைச் சோழ அரசர்களால் விடப்பட்ட மான்யங்களுள் கோவில் தேவதாசிக்கென்று ஒரு வேலி மான்யம் உண்டு. அதை வம்ச பரம்பரையாக என் பாட்டி முப்பாட்டி காலத்திலிருந்து ஆண்டு அனுபவித்துக் கொண்டு வந்தார்கள்.

இந்த மான்ய அனுபவத்திற்கென்று பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டு அவைகள் செப்பேடுகளில் கோவிலில் இருந்தனவாம்.

தைப் பூச நக்ஷத்திரத்தில் அந்தக் கோவிலில் பெரிய திருவிழா கொண்டாடுவார்கள். தேரோட்டமும் திருவிழாவும் வெகு விமரிசையாய் நடக்கும்.

இந்தத் திருவிழாக்காலத்தில் எங்கள் குலத்தார் செய்ய வேண்டிய திருத்தொண்டுக்காகவே எங்களுக்கு மான்யம் அளிக்கப்பட்டிருந்தது.

நின்மதிவதனமும்
நீள் விழியும் கண்டு....!!

கொஞ்சும் விழிகள்!
பஞ்சு போன்ற மேனி!!
ரஞ்சிதமான நெற்றி!!!



கவர்ச்சியும் காந்தியுமுடைய கண்களுக்கு "ஐடெக்ஸ்" (Eyetex) கண்மை!
பஞ்சு போன்ற மிருதுவான மேனி அழகிற்கு "அரவிந்த்" பவுடர்!!
ரஞ்சிதமான சோபையும் களையுடனும் கூடிய நெற்றி எழிலுக்கு "பிந்தி" (Bindhi) குங்கும சாந்து.
எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்,
போலிகளை வாங்காதீர்கள்.

AN ARAVIND LABORATORIES PRODUCT
Distributors: PUSHPAVANAM STORES, Triplicane, Madras-5

கோவிலைப் பெருக்கிச் சுத்தம் செய்து செம்மண் இட்டு, மாக்கோலம் இட வேண்டும். நந்தவனத்திற்குச் சென்று பூ கொய்து மாலை தொடுத்துத் தரவேண்டும். அர்த்த ஜாமபூஜை வரை ஒவ்வொரு பூஜா வேளையிலும் கோவிலிலிருந்து குடவிளக்கேந்த வேண்டும். இரவில் உற்சவ மூர்த்தி திருவுலா வரும்பொழுது கவரி வீசி ஆல வட்டமிடவேண்டும். உலா முடிந்ததும் சுவாமிக்குத் திருஷ்டி கழித்து, திருவமுதூட்டி, திருப்பள்ளியறை சேர்த்து, திருத்தாலாட்டுப்பாடி பின்பு வீட்டுக்கு வரவேண்டும். இது அக்கோவிலில் வாழையடி வாழையாக நடக்கும் பூஜை முறை.

வருஷத்தில் பத்து நாட்களுக்குச் செய்ய வேண்டிய இந்தத் தொண்டுக்காகத்தான் எங்களுக்கு மான்யம் விடப்பட்டிருந்தது. குடியானத்தெருவில் எங்களுக்கு ஒரு வீடும் விடப்பட்டிருந்தது.

அக் காலத்தில் இருந்த கிராம மணியக்காரர்களும் நாட்டாண்மைக்காரர்களும் மிக்க கண்ணியமாக நடந்து கொண்டார்களாம். ஆனல் காலம் மாற மாற நிலைமை மிகக் கேவலமாகியது.

அதுவும் என் அம்மாவின் இளமைக் காலத்தில் சகிக்க முடியாததாகி விட்டதாம். குத்தும் கொலைகளும்கூட நடக்க ஆரம்பித்து விட்டன. இவ்வளவும் கேவலம் மிருக இச்சையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கான போட்டியால்.

என் பாட்டிகாலத்தில் சிவானந்த குருக்கள் என்பவர் இந்தச் சிவன் கோவிலில் பூஜா கைங்கரியம் செய்து வந்தார். வேத சாஸ்திரங்களை நியமமாகக் கற்றவர். சாஸ்திர ரீதியில் அலங்கார நைவேத்தியங்கள் செய்வதில் கை தேர்ந்தவர். ஆஜானு பாகுவாக, செக்கச்செவேலென்று மூக்கும் முழியுமாய் மன்மதனைப் போன்றிருப்பார். அவர் கோவிலுள் புகுந்து கற்பூற ஹாரத்தி செய்யும்போது, அந்தத்தேஜோமயமான ஒளியில் தேவலோகத்திலிருந்து வந்த தேவகுமாரன் ஒருவனே சிவ பூஜை செய்வது போலிருக்கும்!

இத்தனை இருந்தும் அவர் காமாந்தகாரர். கோவில் பூஜை வேளை போக மீதி நேரங்களில் என் பாட்டியின் கால்களையே சுற்றிக் கொண்டு கிடப்பாராம்!

அவருக்கும் பாட்டிக்கும் பிறந்தவள்தான் என் அம்மா. குருக்கள் அவர்களுடைய அழகும் கம்பீரமும் கலந்து உருவானது போல் பேரழகுடன் விளங்கினுள், அம்மா! அதனுல், ஊருக்குப் பொதுவான தாமரைக் குளத்திலே பூத்த ஒரே தாமரை மலர் என்ன பாடு படுமோ அந்தப் பாடு பட்டாள்!

அந்தக் கிராமத்து வட்டாரங்களில் இருந்த விட புருஷர்களும், தலையும் மீசையும் நரைத்தாலும் ஆசை நரைக்காமல் கிறுகிறுத்தலையும், பெரிய, சின்ன, நடுப்பண்ணையார்கள் அனைவரும் அம்மாவைச் சுற்றி வட்ட மிட ஆரம்பித்தனர்:

தங்கள் காம விகாரத்தைத் தணிக்கவே பண்டை அரசர்கள் எங்களுக்கு மான்யம் அளித்து வைத்திருப்பதாக அவர்கள் நினைத்தனர்.

போட்டி பலமாகவே, அம்மா வெளியே கூடத் தலை காட்ட முடியாத நிலைமை உண்டாயிற்று. இரவு வேளைகளில் வீட்டுக் கதவைப் படார் படாரெனத் தகர்த்தனர், காலிகள், பெரும் கற்கள், மழை பொழிவதைப்போல், முற்றத்தில் விழும். வீட்டு வாசற்படியில் செய்து வைத்திருக்கும் ஆபாசங்களை விடிந்து பார்த்தால் குடல் நடுங்கும்!

அப்பொழுதெல்லாம் நான் சின்னவள் அவ்வளவாக வினை தெரியாத காலம். இரவில் நடக்கும் இச்சம்பவங்கள் கனவு கண்டதைப் போலிருக்கும். ஆனல் அம்மா பின்பு இதையெல்லாம் சொன்னதால் நன்ருகத் தெரிந்து கொண்டேன். இந்தச் சங்கடமான நிலையிலிருந்து சமாளிக்க முடியாமல் அம்மா திண்டாடினுள். ஓரிரு சமயங்களில் தற்கொலை செய்து கொள்ளக் கூடத் தீர்மானித்து விட்டாளாம்! கடைசியில், வேறு வழியின்றி, அந்தக் கிராமத்திலிருந்து, 'கைக்கார—கில்லாடி காத்தானை, கை நட்புத் தோழனுக்கிக் கொண்டாளாம். அவனுக்கு வயிறு நிறையச்சோறும், கறியும், மீனும் திணித்து சாயங்காலத்தில் கலயத்திற்கு காசு கொடுத்து வீட்டுத் திண்ணையில் இடமளிக்கவே இந்தத் தொல்லைகள் கொஞ்ச நாள் இல்லையாம்! பிறகு தெய்வமே அவளுக்குத் துணை செய்ததாம்! வைசூரி கண்டு முகத்தில் தழும்புகள் உண்டாகி முகம் விகாரமாய் விட்டதோடு ஒரு கண்ணிலும் பூ விழுந்து விட்டதால் இந்தத் தொல்லைகள் இல்லாமல் நிம்மதியாகக் காலம் கழித்து வந்தாளாம்.

* * *

இதற்கெல்லாம் பயந்து தான் எனக்கு வயது வந்ததும் அம்மா என்னை மாயவரத்திற்கு அனுப்பிவிட்டாள். மாயவரத்தில் என் தூர பந்துவான ராமலிங்க நட்டுவனுர்

வீட்டில் பரதநாட்டியம் கற்றுக்கொண்டு இருந்துவந்தேன்.

அப்பொழுது, ஒருநாள் காலை, ஆனைதாண்டவபுரத்திலிருந்து வந்த தலையாரி இடிவிழுவதைப்போன்ற சாவுச் செய்தியைக் கொண்டுவந்தான்.

முந்தின நாள் அந்தி வேளையில், மேய்ந்து திரும்பிய மாட்டைக்கட்டி வைக்கோல் போடுகையில், வைக்கோல் போரிலிருந்து நல்ல பாம்பு கடித்து அம்மா இறந்துவிட்டதாகச் சொன்னான். தகனக் கிரியைகளுக்கான எல்லா ஏற்பாடுகளையும் ஊர்ப் பொதுவார் செய்துகொண்டு என்னை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் சொன்னான்.

இதைக் கேட்டதும் எனக்குக் கை கால் ஓடவில்லை. பிரமை பிடித்தவளைப்போல் அப்படியே நின்றேன். ராமலிங்க நட்டுவனார் என்னை ஒருவாறு தேற்றி ஆனைதாண்டவபுரத்திற்கு அழைத்துச் சென்றார்.

* * *

அம்மாவின் தகனக் கிரியைகள் முடிந்து, பத்தாம் நாள் காரியமும் முடிந்த பிறகு கோவில் தர்ம கர்த்தாக்கள் கூடி, சிவன் கோவில் தொண்டை நான் இனிமேல் செய்து வர வேண்டுமென்றும், கிராமத்திலேயே தங்கி இருக்கவேண்டும் என்றும் சொன்னார்கள்.

வயது வந்த பெண்ணாகி அழகு பூத்து நின்ற எனக்கு அம்மா சொன்ன பயங்கரக் கதைகள் ஞாபகத்திற்கு வந்தன. அம்மா வைக்காத்த இல்லாடிக் காத்தான் இறந்து நான்கைந்து வருடங்கள் ஆகிவிட்டன. தூர பந்துவான ராமலிங்க நட்டுவனாரும் என்னுடன் தங்கியிருக்க மறுத்துவிட்டார். ஆண் துணையின்றி அக்கிராமத்து மிருகங்களிடையே எப்படி இருப்பது?

தர்ம கர்த்தாக்கள் என் முடிவைக் கேட்டபோது, "சுவாமிக்குச் செய்யவேண்டிய தொண்டை வருஷா வருஷம் திருவிழாக் காலத்தில் இங்கு வந்து இருந்து செய்துவிட்டுப் போகிறேன். கிராமத்தில் தங்கியிருக்க இயலாது!" என்று சொன்னேன்.

"அது என்ன வழக்கமற்ற வழக்கம்? கோவில் மான்யம் வேண்டுமானால் கிராமத்தில்தான் வசிக்கவேண்டும்" என்றார்கள் அவர்கள்.

"மான்யத்திற்கும் கிராமத்தில் இருக்க வேண்டுமென்பதற்கும் என்ன சம்பந்தம்? கிராமத்தில் மான்யம் இருக்கச் சென்னையில் வசித்துக்கொண்டிருக்கவில்லையா கோவில் குருக்கள்? அவரால் சம்பளத்திற்கு அமர்த்தப்பட்ட ஆள் அல்லவா தினம் கோவிலில் விளக்கேற்றி வைத்து மணியடித்துக்கொண்டிருக்கிறான்! அப்படியிருக்க வருஷத்தில் பத்து நாள் செய்யவேண்டிய தொண்டுக்காக நான் மட்டும் ஏன் கிராமத்திலேயே இருக்கவேண்டும்? திருவிழாக் காலத்திற்கு ஒருவாரம் முன்னதாக வந்து திருவிழா முடிந்த பிறகு போய்விடுகிறேன்!" என்று கேட்டுக்கொண்டேன்.

"அவ கேட்கிறபடிதான் செய்யட்டுமே! அதனாலென்ன கெடுதல்? கிராமத்தில் கலவரம் ஒன்றும் இருக்காது. சனி தொலையட்டும்!" என்றார் தர்மகர்த்தாக்களுள் ஒரு கிழவர்.

"இல்லை. சிலாசாசனம் அப்படியில்லை, கோவில் தேவதாசி இங்கேதான் இருக்க வேண்டும்! இல்லாவிட்டால் மான்யத்திலிருந்து ஒரு மணி நெல்கூடக் கொடுக்க முடியாது!" என்று சொன்னார்கள் என் பெண் நலத்தை முறைபோட்டுக்கொண்டு சுவைக்க விரும்பிய மற்ற தர்ம கர்த்தாக்கள்.

* * *

"இந்தத் தர்ம கர்த்தாக்கள் யார்? நான் யார்? எனக்கும் கோவில் மான்யத்திற்கும் என்ன சம்பந்தம்? கோவில் மான்யத்திற்கும் உள்ளே வீற்றிருக்கும் கடவுளுக்கும் என்ன சம்பந்தம்? தம்மைச் சுற்றியுள்ளவர்கள் தின்று கொழுக்கும் பிரசாதங்களை அவர் கேட்டாரா? எலிகள் புரட்டித் தள்ளும் எண்ணெய் அபிஷேகத்தை அவர் கேட்டாரா? கால் நடைகளை மேய்த்துவிட்டுக் கோவில் மாமரத்தின் கீழ் நிழலுக்கு வந்து தங்கும் மாட்டுக்காரப் பையன்களின் ஒட்டிய வயிற்றையும் பரட்டைத் தலையையும் பார்த்துப் புழுங்கும் நீலகண்டரா தமக்கு வெண் பொங்கல் நைவேத்தியமும் எண்ணெய் அபிஷேகமும் வேண்டுமென்பார்? சக்தி வாய்ந்த தெய்வம் என்று கிராமத்து ஜனங்கள் சொல்வது உண்மையானால் தமக்கென்று விடப்பட்டுள்ள மான்ய வரும்படியைக் குடிக்கும், கூத்திற்கும், கொலைக்கும், வழக்கிற்கும், சிலவிட்டுவிட்டு ஏப்பம் விடும் பெரிய, சின்ன, நடுப் பண்ணைகளை என்ன செய்கிறார்?",

தர்மகர்த்தாக்களின் முடிவான உத்தரவைக் கேட்டதும் இப்படி யெல்லாம் எண்ணினேன். அப்படி யெல்லாம் எண்ணத் தூண்டியது வயிற்றின் கொடுமை. இந்தத் தர்மகர்த்தாக்களின் வாய்ச் சொல்லிலே ஒரு இளம் பெண்ணின் எதிர்கால வாழ்க்கை

ஊசலாடுகிறதென்றால் நான் கடவுளை ஏன் நிந்திக்கக்கூடாது? அவர்கள் மறுபடியும் என் முடிவான அபிப்பிராயத்தைக் கேட்ட போது எனக்குக் கோபம் கோபமாக வந்தது. "நீங்கள் எப்படிச் செய்தாலும் சரி, நான் கிராமத்தில் இருக்கப் போவதில்லை" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினேன்.

"மான்யத்திலிருந்து ஒரு மணி நெல்கூடக் கொடுக்கமாட்டோம். எல்லாம் கோவிலையே சேர்ந்து விடும்" என்று பயமுறுத்தினார்கள்.

"செய்யுங்கள்! எது நியாயமோ அதைக் கோர்ட்டுத் தீர்ப்பு செய்யட்டும்" என்றேன், ஆத்திரத்துடன். ஆம்! அப்படித்தான் சொன்னேன். அவ்வார்த்தைகள் அப்பொழுது என்னையறியாமல் விழுந்தன. பெண் புத்தி தானே! கோர்ட்டில் நியாயம் கிடைக்குமென்று அப்போது நினைத்தேன்!

இதன் பிறகு கொழுந்து விட்டெரிந்த உள்ளத்தணலைப் பொறுக்கமாட்டாமல் நீலகண்டேசுவரர் கோவிலை நோக்கி ஓடினேன். குளத்தில் முழுகிவிட்டு, ஈரப்புடவையுடன், தலை விரி கோலமாய் என் பாட்டியும், முப்பாட்டியும், வாழ்க்கை வியாபாரத்தையும் நடத்திக்கொண்டு—கடவுள் தொண்டையும் மறக்காமல் செய்த நீலகண்டனுடைய சந்நிதியின் முன் நின்று, என் குறைகளைக்கூறி முறையிட்டு நியாயங்கேட்டு நின்றேன், பாண்டியன் சபையில் நியாயம் கேட்டு நின்ற கண்ணகியைப்போலே!

கோவிலை ஒன்பதுதரம் வலம் வந்தும் என் மனம் புழுங்கிக்கொண்டுதான் இருந்தது. கிராமத்திலேயே தங்கி விடலாம் என்ற எண்ணம் எழவில்லை.

* * *

ஆனால், மாயவரம் வந்த பிறகு என் மனம் ஏனோ ஆனைதாண்டவபுரத்தைச் சுற்றி வளையமிட்டது. நான் சிறு பெண்ணாக இருந்த பொழுது குருக்கள் வீட்டுக் குப்பை மேட்டிலிருந்து பெயர்த்து வந்து எங்கள் கொல்லையில் நட்டு வளர்த்த மாங்கன்று அப்பொழுது பூ அரும்பி ஓரிரு பிஞ்சுக்களும் கீழே உதிர்ந்து கிடப்பதைப் பார்த்தேன். அணில் அப்பிஞ்சுகளை வாழவிடவில்லை. அதைப் போலவே அந்தத் தர்மகர்த்தாக்களும் நான் வாழ்வதை விரும்பவில்லை. மனம் போன வாக்கில் மலர்களைக் கொறித்து, பிஞ்சுகளை உதிர்க்கும் அணில்களைப்போல், என் இளமை வனப்பை உறிந்து விட்டு என்னை காலனின் காலிலே எறிந்து விட்டுப்போகக் கங்கணம் கட்டிக்கொண்டு, கோவிலென்றும் சிலாசாசனமென்றும் பண்டையப் பழக்கமென்றும் கதைத்தனர், இந்தத் தர்மகர்த்தாக்கள்.

2. விடி வெள்ளி.

மாயவரம் வந்து சேர்ந்த நாட்களாகத் துயரத்தின் மேல் துயரம் வளர்ந்தது. மாசி மாதம் மகசூல் மடங்கி முடிந்தது. தர்மகர்த்தாக்கள் சொன்னபடி எனக்கு ஒரு மணி நெல்கூட அனுப்பவில்லை.

என் மான்யத்தில் விளைந்த நெல்லை எனக்குச் சேர்க்க வேண்டுமென்று கடிதம் எழுதினேன். ஒரு பதிலும் இல்லை!

பிறகு இரண்டு மூன்று மாதங்கள் வரை நான் ஒன்றையும் கவனிக்காமல் கையில் இருந்த சொற்ப தொகையை வைத்துக் கொண்டு ஜீவித்து வந்தேன்.

அழகில் வசந்தம் மருவ, இளமையுடன் சோபித்த நான் என் நேர்மை தவறிப்போவதாக இருந்தால் ராணி மாதிரி வாழ்க்கை நடத்தியிருக்கலாம். ஏனோ எனக்கு அது வேப்பங்காயாக இருந்தது. எத்தனை நாட்கள் வரவின்றிக் கைப்பணத்தைக்கொண்டே காலம் தள்ளிக்கொண்டிருக்க முடியும்? மாயவரத்திலிருந்த ஒரு வக்கீலய்யாவிடம் சொல்லி என் மான்ய சம்பந்தமாக வழக்கிட்டால் என் பக்கம் சாதகமாகுமா? என்று கேட்டேன்.

"மான்ய சம்பந்தமாக சட்டம் வரையிட்டுக்கூற முடியாது, சட்டம் கழுதை! மதில்மேல் பூனை! ஆனால் தர்மம் உன் பக்கத்தில் இருப்பதால், ஹைகோர்ட் வரை போவதற்குத் தைரியம் இருந்தால் வழக்காடிப் பார்க்கலாம்" என்று சொன்னார் அவர்.

ஹைகோர்ட் என்பது இன்னது என்பதை அறியாத நான் ஒத்துக்கொண்டேன். வழக்கு ஆரம்பமாயிற்று. கையிலிருந்த பணமெல்லாம் கரைந்து விட்டது. குடும்பப் பூர்வீக சொத்துக்களாய் வைத்துக் காப்பாற்றி வந்த நகைகளை ஒன்றன்பின் ஒன்றாய் விற்று வழக்குக்குப்பணம் கொடுத்து வந்தேன். கேஸ் ஹைகோர்ட்டுக்குப்போயிற்று. இதற்குத்தான் உங்கள் மாமாவை அமர்த்தியிருந்தேன்!"

"—யாரு! ஓகோ! இவ தாத்தாவையா? என்று அலமுவைச் சுட்டிக்காட்டிவிட்டு, உம்! அப்புறம்? என்றாள், கமலா; கதையை ஊன்றிக் கேட்டவாறு.

“உங்கள் மாமாவிடம் நான் என் கதையைச் சாங்கோபாங்கமாகச் சொல்லி, கேஸ் ஜயிக்க வேண்டியதின் அவசியத்தையும் அதற்காக நான் சர்வ சங்க பரித்தியாகம் செய்யத் தயாராய் இருக்கிறேன் என்றும் சொன்னதைக் கேட்டு அவர் கலீரென்று நகைத்தார்.

அவர் நகைத்ததும் எனக்கு ஏதேதோ எண்ணம் எழுந்தது. அவர் ஏன் அப்படிச் சிரித்தார்? ‘நான் கிராமத்தில் தங்கிவிடாதது பிசகா? என்ற குறிப்புடன் அவரை வெறித்துப் பார்த்தேன், என் உள்ளக்கிடக்கையை உணர்ந்த அவர் சொன்னார்:

“நீ கிராமப் பாதையில் கால் நடையாக நடந்து சென்றிருப்பாய். அப்பாதையில் கிடந்து காலில் குத்தும் நெரிஞ்சி முட்களைக் குனிந்து, குனிந்து எடுத்துப் போட்டுக் கொண்டே சென்றால் வழி நடக்க முடியுமா? நெரிஞ்சில் குத்தியவுடன் காலைத் தரையில் தேய்த்துவிட்டு மேலே நடந்தால்தான் வழி நடந்து ஊர் அடைய முடியும். அதைப் போன்றதுதான் வாழ்க்கையும். வாழ்க்கைப் பாதையிலே எதிர்ப்படும் இடையூறுகளை எல்லாம் சட்டபூர்வமாகத் தவிர்த்துக் கொண்டு உயிர் வாழ்வதென்பது அனுபவ சாத்தியமான காரியமல்ல.

“கிராமத்துக் காலிகளைக் கண்டு பயப்படுகிறாய். அவர்களுக்குள்ள மிகப் பெரிய பலவீனத்தை நீ அறியவில்லை. கல்லாமல் பாகப்பட்டிருக்க வேண்டிய உன் குல வித்தையை நீ நன்றாகப் பயன்படுத்தினால் அவர்களை உன் இஷ்டப்படி ஆட்டி வைக்கலாம்! போகட்டும். அதையெல்லாம் நான் ஏன் சொல்லவேண்டும்! என்னால் முடிந்தவரை வழக்கில் வாதாடுகிறேன். வெற்றி கிட்டுவது உன் அதிர்ஷ்டம்” என்றார்.

“கடவுள் விட்டவழி ஆகட்டும் ஸ்வாமி! என் உடலை விற்று, மானத்தை விலைப்படுத்திக் காலக்ஷேபம் செய்ய வேண்டுமென்று கடவுள் செய்துவிட்டால் இவ்வுடலை அவன் பலிபீடத்திற்கே அர்ப்பணம் செய்துவிடுகிறேன். நீங்கள் வழக்கை நடத்துங்கள்!” என்று கேட்டுக் கொண்டேன்.

சென்னையில் வழக்கு நடந்து கொண்டிருந்தது. அச்சமயத்தில் உங்கள் மாமா அடிக்கடி மாயவரம் வந்து போய்க்கொண்டிருந்தார். ஒரு நாள் இரவு. சுமார் ஒரு மணி இருக்கும். யாரோ கதவை இடிக்கும் சப்தம் கேட்டது. எனக்கு உள்ளூர திகில்தான். பெரிய வீடு. நான் தனியாக இருந்

பாக்யங்களுள்

சிறந்ததும் பூஷணங்களுள் முதன்மையானதுமான கூந்தலைக் காலதாமதமின்றி கேசவர்த்தினியைக் கொண்டு பெறுங்கள்.

மூக்கையும் மோவாய்க்கட்டையையும் மாற்றமுடியாது. ஆனால் கூந்தலையோ விதவிதமாயும் விசித்திரமாயும் பலவாறு ஜோடிக்கலாம்.

கூந்தலை ஜோடிக்கு முன்னர் கேசவர்த்தினியின் உதவியால் அபரிமிதமான கூந்தலைப் பெறுங்கள். கறுத்து அடர்ந்த கூந்தலினால் முக அழகையும், கேசவர்த்தினியினால் கூந்தலையும் அழகுபடுத்திக்கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 12

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்

தென் இந்திய ரஸாயன சாலை

கோயமுத்தூர்.

தேன். ராமலிங்க நட்டுவனுர் சென்னைக்குப் போய் ஒரு வாரமாகியது. அங்கே 'பரத நாட்டிய கலாமண்டலி' என்று ஒரு நாட்டியப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தி இவரை நாட்டியம் சொல்லிக் கொடுக்க அமர்த்தியிருந்தனர். கிட்டத்தட்ட அறுபது வயதான பிறகு உள்ளூரையும் சொந்த வீட்டையும் விட்டுவிட்டுப்போய் அங்கிருக்க அவருக்குப் பிரியமில்லைதான். இருந்தாலும் பிரமுகர்கள் சேர்ந்து ஒரு முகமாக வற்புறுத்தவே ஒருவாறு ஒத்துக்கொண்டார்.

நான் ஒருவாரமாகத் தனிமையாக இருந்து வந்தேன். வேலைக்காரி ஒருத்தி வீட்டோடு உண்டு. அவள் வெளியில் போகவர இருப்பாள். விளக்கு வைத்ததும் சாப்பிட்டு விட்டுக் காடாந்தகார நித்திரையில் ஆழ்ந்து விடுவாள். பேச்சுத் துணைக்குக்கூட ஆள் கிடையாது. பலவித எண்ணங்கள் எழுந்து கண்ணுறங்க முயன்ருலும் முடிவதில்லை.

பகலின் பெரும் பகுதியிலும் நித்திரை வராத இரவில் முதற் பாகத்திலும் பதப் புத்தகங்களை புரட்டிப் படித்துக்கொண்டும், கூடத்திலிருந்த நிலைக் கண்ணுடியின் முன் நின்று அபிநயம் பிடித்துப் பழகிக்கொண்டும் பொழுதைப் போக்கி வந்தேன்.

அன்றும் வெகுநேரம்வரை தூக்கம் வராமல் விழித்திருந்துவிட்டு அப்போதுதான் படுக்கையில் படுத்துப் புரண்டுகொண்டிருந்தேன்.

அந்தச் சமயத்தில்தான் கதவிடிக்கும் சப்தம் கேட்டது. மனம் படபடவென்று அடித்துக்கொள்ள விளக்கைத் தூண்டி விட்டுக் கையில் எடுத்துக்கொணடு போய் ஜன்னல் வழியாகப் பார்த்தேன்.

"நான்தானம்மா' ராஜம்! வக்கீல். போட் மெயிலில் வருகிறேன்!" என்ருர்,

"வாங்க சாமி! வழக்கு முடிந்து போச்சா? தீர்ப்புச் சொல்லிவிட்டார்களா?" என்று ஆவலுடன் கேட்டுக் கொண்டேகதவைத் திறந்தேன்.

"வழக்கு முடியாமலென்னம்மா, ராஜம்! அதை முடிக்கத்தான் நான் வந்திருக்கேன்! ரயிலிலே ஒரே கூட்டம், படுத்து அசர முடியல்லே. தூக்கம் கண்ணைச் சுத்துது. நீ போய் படுத்துக்கோ. நாளைக் காலையிலே எல்லாம் விவரமாகச் சொல்கிறேன்". என்ருர்.

அவர் போட்ட புதிர் எனக்கு விளங்கவில்லை. அவர் தூக்கத்தைக் கெடுத்துச் சிரமம் கொடுக்கவும் மனம் இல்லை. அன்று இரவெல்லாம் ஏதேதோ நினைத்துக் கொண்டு எப்போது விடியும் என்று படுத்துக்கிடந்தேன். அன்று காலை தோன்றிய விடி வெள்ளியைப் பார்த்ததும் என் எதிர்கால வாழ்க்கையில் எனக்கு நம்பிக்கை தோன்றியது!

"பெண்ணே! நீ உன் உடலைக் காமதூரர்களுக்கு விற்றுப் பிழைக்கவேண்டாம்! தெய்வத்தொண்டு செய்துகொண்டு மானமாகப் பிழைக்கலாம்!" என்று கூறிப் புன்னகை செய்வதுபோல் மின்னியது அந்தத் தாரகை.

"இல்லை! அப்போது நான் அப்படி நினைத்தேன். பின்புதான், "பேதைப் பெண்ணே! பொல்லாத சமூகத்துடனு நீ போர் தொடுக்கப் பார்க்கிருய்? இயற்கையில் நியதியைப்போலல்லவா அதில் பொல்லாங்கு ஊறிப்போய்விட்டது! இயற்கையின் கட்டுப்பாட்டை மீறி நான் துருவ நக்ஷத்திரத்தை அடைந்துவிட முடியுமா? எனக்கு துருவ நக்ஷத்திரத்தை அணுகி அளவளாவ ஆசைதான். ஆனுல் அதற்கு எத்தனை யுகங்கள் ஆகுமோ? எத்தனை பிரம்மாண்டப் பிரளயங்கள் உண்டாக வேண்டுமோ! ஆகையால் ஓடும் வெள்ளத்திற்குத் தலை சாய்க்கும் நாணலைப்போல் தாழ்ந்து கொடுத்து, அதோ அந்த புல் நுனிமீது தங்கி ஜ்வலிக்கும் பனித் துளியைப்போன்ற உன் வாழ்நாளைக் கடத்திச் செல். ஏன் வீணே எதிர்த்து நிற்கிருய்?" என்று சொன்னதாக உணர்ந்தேன்.

3. சுவாமியின் தீர்ப்பு.

மறுநாள் பொழுது விடிந்ததும் எழுந்த வக்கீலையா, "ராஜம் வேலைக்காரியை அனுப்பி வண்டி கொண்டுவரச்சொல்! ஆனைதண்டவபுரம் போய் வருவோம்!" என்ருர்.

"ஏன் ஸ்வாமி? எதற்காக அங்கே போக வேண்டும்? ஏதாவது சமாதானமாகப்பேசி அவர்களை வழிக்குக் கொண்டுவரலாம் என்று பார்க்கிறீர்களா? வேண்டாம்! அவர்கள் ஒரு வழிக்கும் வரமாட்டார்கள்! நான் பட்ட அவமானம் போதும். உங்களுக்கேன் இந்தக் கஷ்டங்கள்? கேஸ் ஜயித்தாலும் சரி, தோற்ருலும் சரி, நீங்கள் கேஸை நடத்துங்கள்! பார்க்கலாம்" என்றேன், பதட்டத்துடன்.

"இல்லையம்மா, ராஜம்! நீ சிறு பெண்! உலக விவகாரம் அறியாதவள். கேஸை என் பொறுப்பில் விட்டுவிட்டாய். அதை வெற்றிகரமாக முடிப்பதும் இல்லாததும் என் கடமை. நான் பலாபலன்களை யோசிக்

காமலா சென்னையைவிட்டு இவ்வளவு தூரம் வந்திருப்பேன்? நீ என்னுடன் ஆனைதாண்டவபுரத்திற்கு வா! உன் மனதிற்கு உகந்தபடி சமரசம்—செய்து வைக்கிறேன். பார்!'' என்று சொன்னார்.

இதில் எனக்குக் கொஞ்சம்கூட நம்பிக்கையில்லை. அதை வெளிப்படையாகச் சொல்லி அவர் மனதைப் புண்படுத்துவானேன். என்று அதிருப்தியுடன் ஒத்துக்கொண்டேன்.

* * *

கிராமத்திற்கு நான் மறுபடியும் வருவதைக்கண்டு குடியானப் பெண்கள் எல்லோரும் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். தர்மகர்த்தாக்கள் மிடுக்குடன் நோக்கினர். நாட்டாண்மைக்காரர் ஒரு ஸ்தாயி உச்சத்திலேயே பேசத்துவக்கினார்.

சந்தர்ப்பத்திற்கு உசிதமாகவும், தன் மதிப்பை விடாமலும் மிக நாசுக்காக நடந்துகொண்டார் வக்கீலய்யா. நாட்டாண்மைக்காரனைத் தனியே உள்ளே அழைத்துப் போய் ஒரு மணிநேரம் வரை பேசினார்.

பிறகு என்னிடம் வந்து, ''ராஜம், இந்தக் கிராமத்தான்களை ஒரு விதமாகக் குல்லா போடலாம் என்று நினைத்தேன். பட்டணத்துப் புரட்டலும் வக்கீல்கள் பித்தலாட்டமும் இவன்களிடம் பலிக்கவில்லை'' என்றார்.

''ஏன் ஸ்வாமி! நீங்கள் என்ன சொல்லி சமாதானம் கேட்டீர்கள்?'' என்று கேட்டேன்.

''உனக்கு மான்யத்திலிருந்து வரும் நெல்லில் பாதிப் பாகத்தை நாட்டாண்மைக்காரரிடம் கொடுத்துவிடுவது என்றும் அந்த நெல்லை அவர்களுக்குள் பங்கு போடவோ அல்லது நாட்டாண்மைக்காரனே எடுத்துக் கொள்ளவோ செய்யலாம் என்றும், ஆனால் அவன் தர்மகர்த்தாக்களை ஒரு விதமாகச் சரிகட்டிவிட வேண்டுமென்றும், நீ முழு நெல்லையும் வாங்கிக் கொண்டதாகச் சீட்டில் வரவு வைத்து விடுவாய் என்றும் சொன்னேன். இதற்கு ஆசைப்பட்டு நாட்டாண்மைக்காரன் சம்மதித்து விட்டால் சமாதானமாகப் போய்விட்டோம் என்று சொல்லி, கேஸை வாபஸ் வாங்கிக் கொள்ள சொல்லி விட்டுப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தேன்.

நெல்லைப் பங்குபோடும்போதோ அல்லது உன்னிடம் பாதி நெல்லை நாட்டாண்மைக்காரன் வாங்கிக் கொள்கிறான் என்ற உண்மை தெரிந்தவுடனே அவர்களுக்குள் சண்டை வரலாம். அந்தச் சமயம் பார்த்து நான் குத்தகையை வேறு ஒருவரிடம் மாற்றி விட்டுத் தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணினேன். ஆனால் அவன் மசியவில்லை.''

''சரி புறப்படுங்கள்! போவோம்! என்றேன் நான்.

''அவசரப் படாதே, ராஜம் இன்னும் ஒரு வழியில் முயன்று பார்க்கலாம். ஒரு சின்ன திரிசமன் செய்யலாம். கோவில் குருக்கள் சென்னையிலிருக்கும்போது தேவதாசி மட்டும் உள்ளூரில்தான் இருக்க வேண்டுமென்பது அநியாயம் என்றும், அது கடவுளுக்கு அடுக்காது என்றும், செப்பேடு அவ்விதமாக வரையறுத்துச் சொல்லியிருக்கிறதா என்பதை அவர்கள் கோர்ட்டில் நிரூபிக்க வேண்டியிருக்குமென்றும், அப்படியானால் இதுவரை குருக்கள் கிராமத்தில் இல்லாமல் இருப்பதைக் குறித்து ஒருவித நடவடிக்கையும் எடுக்காமலிருந்தது பிசகு என்றும், அதற்குத் தர்மகர்த்தாக்கள் கோர்ட்டில் சமாதானம் கூற வேண்டியிருக்குமென்றும் பயமுறுத்தி விட்டு, போனது போகட்டும் கோவிலுக்குப்போய் எல்லோர் முன்னிலையிலும் சீட்டுக் குலுக்கிப் போடலாம், தேவதாசி கிராமத்தில் தான் இருக்க வேண்டுமென்று கடவுள் உத்தரவானால். அதற்குத் தடையில்லை. அப்படி விழாவிட்டால் அவர்கள் வழக்கை வாபஸ் பெற வேண்டுமென்றும் சொல்லிப்பார்க்கிறேன். நாட்டாண்மைக்காரனிடம் ஒரு பச்சை நோட்டைத் திணித்து இதற்கு ஒத்துக்கொள்ளச் செய்கிறேன், பிறகு தர்மகர்த்தாக்கள் எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள். நீயும் வேண்டா வெறுப்பாக ஒத்துக்கொள்வதாகப் பாவனை செய். இந்தப் பயல்கள் நன்றாக ஏமாந்து விடுகிறார்கள், பார்'' என்றார் வக்கீலய்யா.

இந்த விளையாட்டுக்களெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை. ''சரி, சாமி! நீங்கள் என்ன செய்தாலும் சரி!'' என்றேன். அவர் அவ்வளவு உற்சாகத்துடன் முயற்சித்துக் காரியம் செய்யும் போது ஒன்றும் குறுக்கிட்டுச் சொல்ல மனம் வரவில்லை.

கோவிலில் சாமி சந்நிதியில் சீட்டுக் குலுக்கிப் போடலாம் என்ற முடிவுக்கு நாட்டாண்மைக்காரன் தலையாட்டவே தர்மகர்த்தாக்களும் ஒத்துக் கொண்டனர். பச்சை நோட்டைக் கண்டதும் நாட்டாண்மைக் காரன் மயங்கி விட்டான் போலும்

இரண்டு காகிதச் சீட்டுகளில் ஏதோ எழுதிச் சுருட்டிக் கொண்டு அவர்களுடன் கோவிலுக்குப் புறப்பட்டார், வக்கீலய்யா. நானும் கூடவே போனேன்.

* * *

ஆறுமாதங்களுக்குப் பிறகு சுவாமி சந்நிதியைக் கண்டதும் எனக்கு துக்கம் அடக்க முடியாமல் பீரிட்டு வந்தது.

என் வயிற்றிற்குரிய நெல்லைப் பிடுங்கிக் கொண்டு வழக்காடும் கிராமத்து ஜனங்களை பார்த்துக்கொண்டு 'சும்மா!' இருக்கும் அந்தக் கடவுளை நோக்கிக் கரம்குவித்துக் கண்ணீர் ஒழுக அஞ்சலித்து நின்றேன்.

வக்கீலய்யா சந்நிதியில் முன்னால் போய், தம் கையில் இருந்த இரண்டு காகிதச் சுருளையும் குலுக்கிப் போட்டு நிற்குமுன், "வேண்டாம், சுவாமி! சுவாமி சந்நிதி முன்னாலே காகிதம் போட வேண்டாம்! இதோ நான் தாமரை இலையிலே மஞ்சள் குங்குமம் மடிச்சி வைச்சிருக்கேன். அதைக் குலுக்கிப் போட்டு எடுக்கலாம். மஞ்சள் விழுந்தால் கிராமத்தோடே தான் இருக்கணும். குங்குமம் விழுந்தால் தேவதாசியோடே இஷ்டப்படி நடக்கலாம். இதோ குலுக்கிப் போடறேன். அவளையே எடுக்கச் சொல்லுங்கோ!" என்றான் நாட்டாண்மைக்காரன்.

இதைக் கேட்டதும் திடீரென வக்கீலய்யாவின் முகத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அவர் முகம் வாட்டமுற்றது. "சரி! போடு!" என்றார், பெருமூச்சுடன்.

கண்களில் துளித்து நிரம்பிய கண்ணீர் தரையில் விழுந்து தெறித்தோட நான் குனிந்து அச்சிறு பொட்டலங்களில் ஒன்றை எடுத்தேன். வக்கீலய்யா அதைப் பிரித்துப் பார்த்தார். குங்குமம்!

கடவுள் என் பக்கம் தீர்ப்புக்கூறிவிட்டார்! சத்தியம் வென்றது.

என்னையறியாமல் ரோமாஞ்சலியுண்டாயிற்று. உடனே சர்வாங்கமாகத் தண்டனிட்டு நீலகண்டரை வணங்கி வாழ்த்தினேன்.

வந்த காரியம் ஒருவிதமாக எதிர் பார்த்தபடி நடந்ததில் வக்கீலய்யாவுக்குத் திருப்தி போலக் காணப்பட்டது. கடவுள் பக்தியுள்ள கிராமத்து ஜனங்கள் சுவாமியின் சந்நிதிக்கு முன்னால் ஒருவித முடிவுக்கு வந்தபிறகு மாற்றமாட்டார்கள் என்ற எண்ணத்துடன் புறப்பட்டார் வக்கீலய்யா.

* * *

ஆனைதாண்டவபுரத்திலிருந்து மாயவரத்திற்கு வண்டியில் போய்க்கொண்டிருந்த பொழுது எனக்குத் தோன்றிய சந்தேகத்தைக் கேட்டுவிட வேண்டுமென்று தோன்றியது.

"ஏன் சுவாமி! நீங்கள் சுருட்டி வைத்திருந்த சீட்டுக்களைப் போடவேண்டாம் என்று நாட்டாண்மைக்காரன் சொன்னதும் உங்கள் முகம் ஏன் அப்படிச் சுருங்கியது?" என்று கேட்டேன்.

"அதுவா! அந்தச் சீட்டுக்களை நம்பித்தான் நான் அவர்களைக் கோவிலுக்குக் கூப்பிட்டேன். நாட்டாண்மைக்காரனிடமும் நூறு ரூபாய் கொடுத்தேன். நான் சுருட்டி வைத்திருந்த அந்தச் சீட்டுக்கள் இரண்டிலும், "தேவதாசி இஷ்டப்பட்ட இடத்தில் வசிக்கலாம்!" என்ற ஒரே வாக்கியந்தான் எழுதியிருந்தேன்" என்றார், புன்சிரிப்புடன்.

"மற்றச் சீட்டையும் அவர்கள் எடுத்துப் படித்துவிட்டால் என்ன செய்வீர்கள்?" என்றேன்.

"இதென்ன ராஜம்! அந்தச் சீட்டையும் அவர்கள் கையில் கொடுத்துவிட்டு விழிப்பேனா! அவர்கள் கண் இமைப்பதற்குள் அது மாயமாய்விடாதா!" என்றார், அவர்.

பாவம்! என் விஷயத்தில் அவ்வளவு அக்கரை எடுத்துக்கொண்டார். சதுர்வித உபாயங்களையும் கையாண்டு எனக்கு உதவ எண்ணினார்.

ஆனால்!

(அடுத்த இதழில் முடியும்)

கே. சுந்தரம்மாள்

7

ஒரு வாரத்திற்குள் பவானிபுரத்தில் வேண்டுமென்றே தாசித் தெருவின் கடைசியிலிருந்த ஓர் அழகிய தோட்டத்தின் மத்தியிலிருந்த பங்களாவை அதிக விலைகொடுத்து வாங்கி, அதற்கு வேண்டிய தட்டுமுட்டுச் சாமான்களையும் வாங்கிப் போட்டுவிட்டு, மோஹினியையும் அவள் தாயாரையும் அப் பங்களாவில் கொண்டு விட்டுத் தாமும் ஒருவாரம் கூட இருந்து அவ்வூர் அதிசயங்களைக் காண்பித்தார். நாட்டியக் கலாசாலைக்கு அழைத்துச் சென்றபொழுது, அவ்விடம் வருஷ விழாவிற்காகச் சில பெண்களுக்கு அபூர்வ நாட்டியத்தைக் கற்பித்துக் கொண்டிருந்தார் ஆசிரியர். இவர்களைக் கண்டதும் மிக உபசரித்தார். ஒரு பெண் நாட்டியமாடி முடிந்ததும் "இவளுக்கு நாட்டியமென்றால் உயிர். நன்றாக ஆடுவாள். நாட்டியத்திற்காகவே இவ்வூரில் சொந்த பங்களா வாங்கிக்கொண்டு வந்திருக்கிறோம்" என்றார் ராஜாராம்.

"அப்படியா மிக்க சந்தோஷம். இப்பொழுது......" என்று நிறுத்தினார் ஆசிரியர்.

"மோஹினி! எங்கே கொஞ்சம் உன் வல்லமையைக் காண்பி" என்றார்.

கள்ளமறியாத பேதை உண்மையென நம்பி ஒரு பதத்திற்கு அபிநயம் பிடித்தாள். ஆசிரியர் பிரமித்துப் போனார். "எங்கே கற்றாய் அம்மா? மஹாராஜாவின் லக்ஷியம் உன்னால் நிறைவேறிவிடும் என்று தோன்றுகிறது. அரண்மனைக்கு அறிமுகப் படுத்தலாமா" என்றார்.

"இப்பொழுது வேண்டாம். ஓர் ஐந்து மாதம் செல்லட்டும். பிறகு பார்த்துக்கொள்ளலாம்" என்றார் ராஜாராம்.

பிறகுதான் மோஹினியை உற்றுக் கவனித்த ஆசிரியர் விஷயத்தை ஊஹித்துக் கொண்டார்.

ஒரு வாரத்திற்குப்பின் ராஜாராம் வாரம் ஒருமுறை வந்து போவதாகச் சொல்லிச் சென்றார். சூதறியாத பேதை யாவும் நன்மைக்கே என்று மகிழ்ந்தாள். பார்ப்பவர்களும் மோஹினியின் அதிருஷ்டத்தைக் கண்டு வியந்தார்கள்.

"மாமா அவர்களுக்கு அநேக நமஸ்காரம். நான் உங்களுக்கு அளித்த வாக்குப்படி உங்கள் குமாரர் மனம் திரும்பும்படி செய்து விட்டேன். தற்சமயம் நான் பவானி

புரத்திலிருக்கிறேன். நாட்டியத்தின் அபிவிருத்தியைக் கண்டு களித்து அவர் பிரிவை ஒருவாறு சஹித்துக் கொள்ளலாம் என்ற உறுதியிலிருந்து வருகிறேன். எங்கள் காதலின் பரிசைக் கண்டு களித்தபின்பு நாட்டியப் பணியில் ஈடுபடப் போகிறேன். மாதம் ஒருமுறையாவது அவர் தெரிசனம் கிடைத்தால் போதும். வரப்போகும் உங்கள் புதிய மருமகளுக்கு என் மனப்பூர்வமான ஆசி. மணமானதும் தம்பதி படம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். என் கடமையைச் செய்து விட்டேன். மாமா! உங்கள் மனச்சாந்திக்காக என் உயிரினுமினிய காதலைத் தியாகம் செய்து விட்டேன். அவரின் அலக்ஷயத்திற்கும் ஆளாகி அவரையும் வருந்தும்படி செய்து விட்டேன். பிரிவின் துக்கத்தை, கடமை என்ற பெயரால் சஹித்துக்கொண்டு வருகிறேன். நமஸ்காரம்,

இப்படிக்குத் தங்கள் அன்புள்ள

மருமகள் மோஹினி

என்ற கடிதமும் தயங்காமல் அனுப்பி வைத்தாள். மாமனார் மோஹினியைத் தேவ கன்னிகை எனப் போற்றினார். அடிக்கடி வந்து பார்த்துவிட்டுப் போனார். மோஹினி பவானிபுரம் வந்த மறுவாரம், ராஜாராமிற்காகக் காத்திருந்த அவர் அத்தை பெண்ணை மணந்து கொண்டார். மோஹினி கேட்டபடி தம்பதி படம் வந்தது. அதைப் பார்க்கும் பொழுது அவளையும் அறியாமல் துக்கம் பீரிட்டுக் கொண்டு வந்தது. அதையும் கடமை என்று சஹித்துக் கொண்டாள் பேதை. கல்யாணத்திற்கு இரண்டு நாள் முன்பு ராஜாராம் ஒரு தடவை மோஹினியிடம் வந்து சென்றார். கல்யாணமான பின்பு ஒரு தடவைகூட வரவில்லை. மாதா மாதம் பணம் மட்டும் அனுப்பி வந்தார். மாமனார் மட்டும் வந்து போவார். அவரிடம் தனது துக்கத்தை வெளியிடுவதில்லை.

பத்துக் கடிதத்திற்கு பிறகு ஓர் கடிதம் பதில் வரும். அதிலும் ஜீவனேயிருக்காது. மனம் தவிக்கும். காதலைப் பறிகொடுத்தோமே; என்ற ஏக்கம் நீண்டமூச்சாக வெளிவரும். சஹிக்கக்கூடாத வேதனை தோன்றும். அந்தச் சமயங்களில் புது மோஹம் அப்படித்தானிருக்கும். அவர் மீது என்ன குற்றம்? நாம் தானே காரணம் என்று சமாதானம் செய்து கொள்ளுவாள்.

ஐந்து திங்களும் இவ்விதமாகச் சென்றன. மோஹினியின் அழகும் ராஜாராமின் கம்பீரத் தோற்றமும் ஒருங்கே அமையப் பெற்று ஓர் பெண் குழந்தை பிறந்தது. ஜோதிஸ்வருபமாக ஜொலிக்கும் அப்பெண் குழந்தையைப் பார்த்து சற்று மனந்தேறி வந்தாள். குழந்தை பிறந்த பதினைந்தாவது நாள் மாமனார் இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தி கேட்டு வருந்தினாள். முப்பது நாள் வரை குழந்தையைப் பார்க்க ராஜாராம் வராததற்கும் இது காரணம் என்று சமாதான மடைந்தாள்.

முப்பதாம் நாள் ராஜாராம் வந்தார். குழந்தையைக் கண்டு களித்தார். கொஞ்சினார். குலாவினார். அநேக பரிசுகள் வழங்கினார். "கலாவதி" எனப் பெயருமிட்டார். ஆனால் மோஹினியினிடம் அன்னியர்போல் விலகியே நடந்தார் மூன்று நாள்களும் ஏதோ பேசுவார். இரவில் மோஹினி அருகில் வரும்பொழுது அயர்ந்து தூங்குவதாகப் பாவனை செய்து விடுவார். இந்தப் பராமுகம் அவளால் தாங்க முடியவில்லை. ஆனால் குழந்தையினிடம் அளவற்ற அன்பைக் காட்டுவதினால் சற்று மனம் தேறினாள்.

நான்காவது நாள் இரவு புறப்படுவதற்கு முன் நிலைக்கண்ணாடிக்கு முன் நின்று உடைகளைச் சரி செய்து கொண்டிருந்தார் ராஜாராம். பின்னால்வந்து நின்ற மோஹினி, முன் நாள்களில் உடை உடுத்தும் பொழுது கூடநின்று டை கட்டிவிட்டுத் தலைசீவி விடும் பொழுது அவர் முகத்தில் தாண்டவமாடும் காதலின் ஜோதியில் தன்னை மறந்து பூரிப்பை அடைவதும். கொஞ்சும் மொழிகளுடன் முகத்தோடு முகம் சேர்த்துக் கண்ணாடியில் அழகுபார்ப்பதும் நினைவில் தோன்றவே தற்சமயமிருக்கும் நிலைமைக்கு, அதற்குக் காரணகர்த்தா தானே தானா? என்று எண்ணும் பொழுது துக்கம் நீண்ட மூச்சாக வெளிவந்தது.

நீண்ட மூச்சின் சப்தம் கேட்டுத் திரும்பிய ராஜாராம் "என்ன வேண்டும்? மோஹினி!" என்று கேட்டவண்ணம் பக்கத்திலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். தவிர அவளை உட்காரும்படியாகவோ அருகில் வரும்படி சொல்லவோ இல்லை.

ஜீவனில்லாமல் அவர் வாயிலெழுந்த சொற்கள் கண்களில் நீரைப் பெருக்குவதைத் தவிர வேறே பதில் சொல்ல முடியாமற் செய்தன.

"ஏன் வருத்தப் படுகிறாய்? கடமையில் நிம்மதியாகத் தானே இருக்கிறாய்?" என்றார்.

"கடமையின் கால அளவுவரை ஹ்ருதயத்தை வாட்டி நிம்மதியாகவே இருந்தேன். காலம் கடந்தும் தங்கள் பராமுகமும் பிரிவும் என்னால் பொறுக்க முடியவில்லை."

"பராமுகமாக இருந்தால் இந்தச் சமயம் உன்னுடைய இந்த வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு இவ்விடம் உட்கார்ந்திருக்க முடியாதல்லவா?"

"உலகம் ஒப்ப வந்துவிட்டால் போதுமா? தாங்களே சிந்தனை செய்து பாருங்கள். நான்கு வருஷமாக நாம் நடத்திய வாழ்க்கையும், தற்சமயம் நான்கு நாள்களாக நாம் இருந்து வரும் நிலைமையும் எப்படி? என்று"

"அதுவிஷயத்திற்கு யார் பொறுப்பாளி? அப்பொழுதே நான் எவ்வளவு எடுத்துச் சொன்னேன்; கடமையில் சஹித்துக் கொள்ளுவேன் பிரிவை என்ற சொல் என்னவாயிற்று?"

"எனக்கு மன்னிப்பே கிடையாதா? தாங்கள் இவ்வித வர்மம் பாராட்டுவீர்களென்று நான் எதிர்பார்க்கவில்லை. தங்களுடைய உள்ளன்புடன் கூடி வாழ்க்கை நடத்தும் பொழுதுதான் கலைகளிலும் மனம் சந்தோஷத்தைக் காண்கின்றது. தங்கள் பராமுகத்தில் உலகமே சூன்யமாகத் தோன்றுகிறது. ஓர் விநாடிகூடத் தங்களைப் பிரியச் சகியாத நான் என்னவாகக் காலங்கழித்திருப்பேனென்பதை நிச்சயம் உங்கள் மனமறியும்; இவ்வளவிலும் சாக ஒரு வாரத்திற்குமுன் வந்து குழந்தையைப் பார்த்து ஆனந்தப்பட்டு, தமது குலம் கடைத்தேறும்படி செய்தேனென்று வாயாரப் புகழ்ந்து சென்ற தங்கள் தந்தையின் மனச்சாந்தியைக் கண்டு ஏதோ சற்று நிம்மதியடைந்தேனென்று சொல்லலாம். பெரியவரும் மனத்திருப்தியுடன் லக்ஷிய உலகை அடைந்தார். இனி என்னைத் தங்களுடன் அழைத்துத் செல்லத் தடையென்ன? மூன்று நாட்களாகத் தங்கள் வாயிலிருந்து இது விஷயம் பற்றி ஒன்றுமே வரவில்லை. இன்று வலுவிலே வந்து கேட்கிறேன், என்னைத் தங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்."

"அதெப்படி முடியும்?"

'காரணம்?"

"காரணம் என் அம்மா என் கூட வந்திருக்கிருள். அம்மாவிற்காவது சமாதான ஏற்பாடு செய்து விடலாம். அவள் உன்னுடனிருக்கச் சம்மதிக்க வில்லையே, என்ன செய்வது?"

"ராம்! இது என்ன பேச்சு. உங்கள் மனமிருந்தால் யாவருக்கும் நன்மை பயக்கும் ஒரு ஏற்பாடு செய்ய முடியாதா?"

"என் மனம்! எனக்கு மனம் என்று ஒன்று ஒரு காலத்தில் இருந்த பொழுது எல்லாவற்றிற்கும் சக்தி இருந்தது. சரத்கால பௌர்ணமி அன்றைய தினம் என்னிடம் எந்த நிமிஷம் வாக்குறுதிக்கு மன்ருடிஞயோ அந்த நிமிஷ முதல் மனம் என்னும் சொல்லே எனது அகராதியிலிருந்து அகற்றப்பட்டு விட்டது. என் வாழ்க்கை சீக்கிரமாகச் சீர்குலைந்து போகுமென்று எதிர் பார்க்கவில்லை. உனது லக்ஷியம் கடமை இருக்கிறதே. அந்தக் கடமைக்காக கட்டினவள் என்பவளுக்கு மன விரோதமாக நடக்கக் கூடாதல்லவா? உள்ளன்பு என்பது எந்த ஜன்மத்திலேற்படாமல் போனாலும் கடமையல்லவா? அவள் சம்மதமின்றி உன்னை எப்படி அழைத்துச் செல்வது? நீ இவ்விடமிருந்தே கலைத்தொண்டு புரிய வேண்டியதுதான்" என்ருர் அமைதியாக.

"என்ன? நான் மட்டும் கட்டினவளில்லையா? ஐயோ, என்னால் இனி ஓர் நிமிஷம் கூட இவ்விடம் உங்களைப் பிரிந்து இருக்க முடியாது. உங்கள் வீட்டு வீடுகூட்டுபவளைப்போல் அவர்களிருவருக்கும் செருப்பாக உழைத்துக் காலந்தள்ளுகிறேன். பின்கட்டில் ஒரு அறை கொடுங்கள். தினம் ஒரு முறை உங்கள் திருமுகத்தைப் பார்த்தால் அதுவே என் ஜன்ம சாபல்யமென்று மகிழ்வேன்" என்ருள்.

"இவை ஒன்றும் நடவாத பேச்சு" என்ருர்.

"ஐயோ! என்னால் தாங்க முடியவில்லையே! உங்கள் வாக்கிலிருந்தா இம்மொழிகள்?" என்று சொல்லிய வண்ணம் கீழே மண்டியிட்டு உட்கார்ந்து அவர் மடியில் சாய்ந்து இரு கைகளாலும் முகத்தை மூடியவண்ணம், தேம்பித் தேம்பி அழலானுள்.

அதற்குமேல் அவர் உறுதி நிற்கவில்லை. அவர் கண்களிலிருந்தும் இரண்டு பொட்டுக் கண்ணீர் உதிர்ந்தது, தாமாகவே கைகள் தலையைத் தடவிக் கொடுத்தன. சில நிமிஷங்கள் அவ்வாறே சென்றன. ஒரு நீண்ட மூச்சிற்குப் பின்னர் "மோஹினி" என்ருர்.

"நிமிர்ந்து நோக்கினுள். அவர் கண்ணில் கண்ணீரைக் கண்டதும் தான் காண்பது கனவா? நினைவா" என்று சந்தேஹிக்கலானுள்.

சந்தேகம் தீருவதற்குமுன் அவளைத் தூக்கி மடிமீது உட்காரவைத்து, அவள் தலையைத் தனது தோள்மீது சாய்த்து, அவள் கன்னத்தின்மீது தனது கன்னத்தைவைத்துக் கனவல்லவென்பதை உணர்த்தினார். பிறகு இனி வருந்தி உபயோகம் என்ன? வீணாக என் மனதையும் துயரத்திற்காளாக்கி நீயும் துயரத்தில் திளைக்கும்படி செய்துவிட்டாய். நான் எவ்வளவு மனக்கோட்டை கட்டினேன். அவையெல்லாம் உன் கடமையினால் சின்னா பின்னமாக்கப்பட்டன. உன்னைப்பிரிந்து நான்படும் துயரம் கடவுள் அறிவார் மோஹினி! இவ்வளவு நிலைமையிலும் உன்னைக் கேவலமான நிலைமையில் வைக்க என் மனம் இடம்தரவில்லையே. அவர்களுடன் சேர்த்து வைத்தால் உன்னைப் பலவிதத்திலும் ஹிம்சிப்பார்கள். வேறாக இருக்கும்படி செய்தால் என்னையறியாமலே நீ இருக்குமிடம் அடிக்கடி வர வேண்டியிருக்கும். அதனால் உண்மையறியாத உலகமும், தாயும், மனைவியும் உன்னைக் கண்டபடி தூற்றுவார்கள். நான் இல்லாத சமயங்களில் உனக்குப் பலவித இன்னல்களை உண்டாக்குவார்கள். நீ கஷ்டப்படுவதை நான் எப்படிச் சஹித்துக்கொள்ள முடியும்? வீண் மனஸ்தாபமும் துயரமும், ஊர் சிரிக்கும் நிலைமையும் ஏற்பட்டு விடும். அதனால் அவ்விடம் வரும் நினைப்பை விட்டுவிடு. இன்னும் ஒரு மாதம் பொறுத்துக்கொள். இந்தப்பக்கத்திற்கு மாற்றிக் கொண்டு வந்து விடுகிறேன். பத்து மைல்களுக்குள்ளிருப்பதினால் ஒரு நாள் விட்டு ஒரு நாள் இவ்விடம் வந்து போகமுடியும். பிரிவு தோன்றாது. கலைகளில் சிறந்த சமஸ்தானத்தில் கலைப் பணியில் உன் மனம் ஈடுபடலாம். குழந்தை கலாவதியும் நான் அன்று சொன்னபடி மஹாராஜாவின் லக்ஷியப் பெண்ணாக வளர முடியும். என்ன சொல்லுகிறாய்?'' என்றார்.

நீண்ட பெருமூச்சே பதில்.

''மோஹினி! வருந்தாதே. நடந்ததுபற்றி மறந்துவிடு. நான் சொல்லுகிற ஏற்பாடு என் மனப்பூர்வமான அன்புடன் செய்வது. இதுதான் கூடியமட்டும் யாவருக்கும் நன்மை தரும். இந்த ஒரு மாதத்திலும் எட்டு நாட்களுக்கு ஒருமுறை வந்து போகிறேன் என்ன?'' என்றார்.

'சரி. உங்கள் அன்பு இருக்கும் பக்ஷத்தில் எதையும் சஹித்துக்கொள்ளுவேன். தங்கள் பராமுகம்தான் என்னால் சஹிக்க முடியாதது. உங்கள் இஷ்டப்படியே நடக்கிறேன். நீங்கள் அனுமதியளித்தால் நடனத்தில் பங்கெடுத்துக்கொள்ளுகிறேன். உங்களுக்குப் பிரியமில்லாவிடில் மஹாராஜாவின் ஆக்ஞையைக்கூட நிராகரித்து விடுவேன்'' என்றாள்.

''சே, அப்படியொன்றும் நினைக்கமாட்டேன். உன் கலையை மூடிப் புதைக்க வேண்டாம்''

''என் பாக்யம்''

''சரி. மனம் சமாதானமாகிவிட்டதல்லவா? நான் சென்று வரட்டுமா''

''ஐயோ! அதற்குள்ளாகவா? இன்று போக விடமாட்டேன். வேற்றுமையற்ற நிலைமையில், ஒரு இரவாவது சந்தோஷப்படவேண்டாமா? நான் இவ்விடம் வந்தது முதல் தாங்கள் பழையமாதிரி என்றாவது நடந்ததுண்டா? என் அன்பு வேண்டுகோளை ஏற்று இன்று இரவு தங்கிவிட்டு, காலையில் சென்றுவர மன்றாடுகிறேன்'' என்றாள் கொஞ்சலாக.

''சரி, உன்னிஷ்டப்படி செய்கிறேன். உன் மனம் நிம்மதியானால் சரி. எங்கே குழந்தையை எடுத்து வா, ஏகாந்தத்தில் இருவரும் பார்த்து மகிழ்வோம்''

''தப்பாக எண்ணமாட்டீர்களே. நான் இப்படிச் சொல்லுகிறேன் என்று. குழந்தை தூங்குகிறது, வாருங்கள், இருவரும் சாப்பிட்டுவிட்டுக் குழந்தையை எடுத்துக்கொண்டு வந்தால் நிம்மதியாக இருக்கலாம்''

''சரி அப்படியே செய்யலாம்.''

வேற்றுமையற்ற இரவானது இன்பமயத்தில் கழிந்தது.

ராஜாராம் சொல்லிச் சென்றபடி அடுத்தவாரம் வந்த சமயம், மோஹினியுடனும் குழந்தையுடனும் தம்மை மறந்த நிலையில் குலாவி மகிழ்ந்திருக்கும்பொழுது ராஜாங்க முத்திரையிட்ட கவர் ஒன்றை அரசாங்கச் சேவகன் மோஹினியிடம் கொடுத்துவிட்டு வாசற்புறம் போய் நின்றுகொண்டிருந்தான் பதிலுக்காக. கவரை ராஜாராமிடம் கொடுத்தே பிரிக்கச்சொன்னாள். அதில் வருகிற நவராத்திரி உத்ஸவத்தின் பொழுது பவானி மாதாவின் சன்னிதியில் நாட்டியமாட வேண்டுமென்பது அரசரது உள்ளார்ந்த விருப்பமென்றும், அதற்குச் சம்மதமென்று, கொடுத்திருக்கும் ரசீதில் கையொப்பமிட்டு அனுப்பும்படியாக எழுதியிருந்தது. அதைப் படித்ததும்,

''என்ன செய்யப்போகிறாய் மோஹினி?'' என்றார்.

''நீங்கள் சொல்லுகிறபடி செய்கிறேன்''

''வேண்டாமென்றால்?''

''மறுத்துவிடுகிறேன்''

''ராஜாக்ஞையை மறுக்கத் தைரியமுண்டா?''

''என் ராஜாக்ஞைக்குமுன் எந்த அரசாங்க ஆக்ஞை தலைகாட்ட முடியும்? நிச்சயமாக மறுக்கத் தைரியமுண்டு.''

''அதுசரி. உண்மையாகச் சொல். உன் மனதில் நாட்டியத்திற்கு அதிகம் இடமிருக்கவில்லையா?''

''ராஜா! ஒருகாலத்தில் நாட்டியத்திற்கே என் வாழ்நாளை அர்ப்பணம் செய்ய வேண்டுமென்று விரும்பி யிருக்கிறேன். ஆனால் உங்கள் பராமுகம் பிரிவு, இந்த அநுபவத்திற்குப்பின் உங்கள் அன்பு ஒன்றிற்குத்தான் என் மனம் விரும்பித் துடிக்கின்றது. உங்கள் அன்பின்முன் எதுவும் பெரிதாகத் தோன்றவில்லை. தங்கள் மனதிற்கு இவ்விஷயம் இடம் தரவில்லையென்றால் முடியாது என்று சொல்லிவிடுகிறேன்.''

''சே, அப்படியொன்றுமில்லை. சரியென்று கையொப்பமிட்டு அனுப்பிவிடு. இனிமேல் நான் இவ்விடம் வரும் சமயங்களில் நாட்டியத்திற்கு முக்ய ஸ்தானம் கொடுத்துவிடாதே. நமது கடைசி மூச்சுக்கூட இருவருக்கும் சேர்ந்தே போகுமென்று மனப்பால் குடித்துக் களித்திருந்த எனது வாழ்வில், உன்னைப் பார்க்க வரவேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்திவிட்டாய். அத்துடனாவது நிற்கட்டும். மஹாராஜாவின் ஆணையை மீறக்கூடாது என்ற நிலைமையில் என் மனம் விரும்பும் சமயம் உன்னுடன் களித்திருக்கத் தடங்கல் ஏற்படாமலிருந்தால் ஏதோ என் மனதிற்குச் சற்று ஆறுதலாக இருக்கும்'' என்றார்.

''உங்கள் அன்பையும் சந்தோஷத்தையும் விட, முக்யமான விஷயம் உலகில் எது? ராஜா! ஏதோ பெரியவரின் தாபத்தைத் தாளாது, கடமை என்று யாசித்தேன். அதுவிஷயம் உங்கள் மனதை இவ்வளவு சீர்குலைத்து, சிந்தை கலங்கச் செய்யுமென்று கனவிலும் எதிர்பார்க்கவில்லை. உலகில் எவ்வளவு பேபர்கள் இருதார வாழ்க்கையை நிம்மதியாக நடத்துகிறார்

பாத்ருடு வின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறுதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

1, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பகுளம் போஸ்ட்.

கள். உங்கள் பரந்த உள்ளத்தில் காதலைப் பங்கீடுசெய்யும் சக்தியில்லாதது என் மீது தாங்கள் கொண்டிருக்கும் அளப்பரிய ஆழ்ந்த காதலே காரணம் என்பதை நினைக்க என் மனம் அடையும் நிம்மதியையும் சந்தோஷத்தையும் சொல்லால் விவரிக்கப் பதங்கள் அகப்படவில்லை. என்னைப் போல் பாக்யசாலி யார்? ஆனால் நான் தியாகம், கடமை, என்ற சொற்களுக்கு மதிப்புக் கொடுத்தது சரியான காரியத்திலல்ல. உங்களை வருத்தி, நானும் வருந்தச் செய்த ஓர் அசட்டுச் செய்கை என்பதை நினைத்து நினைத்து ஏங்குகிறேன். இனி சொல்லிப் பயன்?'' என்றாள் கண்களில் நீர் ததும்ப.

அவள் கண்ணைத் துடைத்துவிட்டு, ''வருந்தாதே நடந்ததைப்பற்றிப் பேசிப் பயன்? சேவகன் காத்துக்கொண்டிருக்கிறான். கையொப்பமிட்டு அனுப்பு'' என்றார்.

* * *

நவராத்திரி உத்ஸவத்தில் பவானியின் சன்னிதியில், தனது காதலனின் கோபம் மாறி, பழைய அன்பைப் பெற்றுவிட்டோம்; கடமையும் நிறைவேறிற்று; தனது லக்ஷியமான நாட்டியத்திற்கும் வசதி கிடைத்தது என்ற சந்தோஷமிகுதியில், மோஹினியின் நாட்டியம் அதியற்புதமாக அமைந்தது. மஹாராஜாவின் திருப்திக்கும் சந்தோஷத்திற்கும் அளவில்லை. ''கூடிய சீக்கிரம் நடன மஹாநாடு கூட்டிவிடலாம். தமது லக்ஷியப் பெண் மோஹினிதான். தமது சமஸ்தானத்தின் உயர்ந்த நோக்கம் மோஹினியினால் நிறைவேறப்போகிறது'' என்று மகிழ்ந்து, அன்று மோஹினியை மிகமிகப் புகழ்ந்து பேசி, தமது நடன மஹாநாட்டில் பங்கெடுத்துக்கொள்ளும் விஷயத்தைக் கூறி, தமது சமஸ்தானத்து நாட்டிய ராணி மோஹினி என்ற பட்டமும் வழங்கினார். அவளுக்குத் தம் அரண்மனைக்குப் பக்கத்தில் தனி அரண்மனை கட்டித் தருவதாகவும் அவளுடைய ஜீவனத்திற்கு வேண்டிய வசதிகள் அரண்மனையிலிருந்தே கிடைக்கும் என்றும் சொன்னார்.

''தங்கள் அன்பும் ஆதரவுமே எனக்கு நன்மை தரும். எனது கணவரின் வீட்டில் அவர் ஆதரவில் இருப்பதே எனது ஆவலும், ஸ்திரீகளின் தர்மமுமாகும். தங்களை மறுதலிப்பதாக எண்ணக்கூடாது. நாட்டியப் பணிக்கும் தங்கள் உத்தரவிற்கும் என்றும் கடமைப்பட்டவள்'' என்று கூறி விட்டாள்.

அவளது பரந்த நோக்கத்தைக்கண்ட மஹாராஜாவின் உள்ளம் அளவற்ற மகிழ்ச்சியை அடைந்தது. ''உன் இஷ்டம்போல் செய் அம்மா. உன் விருப்பம் எதுவானாலும் அதைப் பூர்த்திசெய்ய இந்தச் சமஸ்தானம் கடமைப்பட்டுள்ளது'' என்றார்.

அன்று உயர்ந்த இரத்தின ஹாரம் ஒன்று பரிசளித்தார்.

அவள் திரும்பி வீட்டிற்குள் நுழையும் சமயம் வேலைக்காரி ''அம்மா யஜமானன் வந்திருக்கிறார்'' என்றாள்.

''எப்பொழுது வந்தார்?'' என்றாள் ஆச்சரியத்துடன். அவர் அன்று வருவதாகச் சொல்லவில்லையாதலால்,

''இப்பதான் அரைமணி நேரமாச்சு'' என்றாள். (மாறு வேடத்தில் நாட்டியம் பார்க்க வந்ததை) அறியாத பேதை உடைகளைக்கூட மாற்றாமல், குழந்தையை எடுக்காமல் மாடிக்குச் சென்றாள். வேஷ்டியும் ஷர்ட்டும் மட்டும் அணிந்து ஈசிச்சேரில் சாய்ந்துகொண்டிருக்கும் கணவனருகில் சென்று,

''என் ராஜா! எப்போ வந்தாப்போலே. தகவலே அனுப்பவில்லை?'' என்று கேட்டவண்ணம், ஸ்வாதீனமாக அவர் மடியில் உட்கார்ந்துகொண்டாள்.

''முன் தகவலில்லாமல் நான் வரக்கூடாதா?'' என்றார் எழுந்து உட்கார்ந்து அவள் தோளைப் பற்றியவண்ணம்.

''அப்படியொன்றுமில்லை. இதுவரை இப்படி வந்ததில்லையே என்றுதான் கேட்டேன். உங்கள் இஷ்டப்போல் நீங்கள் நடப்பதை நான் கேட்க உரிமையுண்டா? அதிருக்கட்டும், இதோ பார்த்தீர்களா பரிசு. இரத்தின ஹாரம்'' என்று மாலையைக் கழற்றி அவர் கையில் கொடுத்தாள்.

''ஆஹா விலை மதிப்பற்ற பரிசு. மஹாராஜா கையினாலேயே கொடுத்தாரா?'' என்றார் இரத்தின ஒளி கண்ணைப் பறித்ததுபோல், மனதின் தூய ஒளியையும் சற்றுப் பறித்த நிலைமையில்.

''ஆமாம். அவர் கையினாலேயே அநேக ஆசிகள் கூறிக்கொடுத்தார். மேலும் தனி அரண்மனை முதலியவைகள் தருவதாகச் சொன்னார்; என் ராஜா அரண்மனைதான் எனக்குரியது என்று சொல்லிவிட்டேன். ''சமஸ்தானத்து நாட்டிய ராணி'' என்ற பட்டமும் வழங்கினார். இவையெல்லாவற்றிற்கும் தாங்கள்கூட இருந்திருந்தால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்'' என்றே என்மனம் எண்ணியது''

"நல்லவேளை. நான் வராமலிருந்தது. இருந்தால் மஹாராஜாவை எட்டி அறைந்திருப்பேன்"

திடுக்கிட்டவளாக "ஏன்" என்றாள்.

"என்னிடமிருந்து உன் உரிமையைப் பிரிக்கப் பார்க்கும் குற்றத்திற்காக"

"அது விஷயம் ஈசனாலும் கூட முடியாத விஷயமாயிற்றே. இவர் எம்மாத்திரப்?" என்றாள், இருவரும் சேர்ந்து சிரித்தார்கள். அர்த்தம் விதிக்குத்தான் தெரியும்.

"உம், உனக்கென்னம்மா, மஹாராஜாவின் லக்ஷியப்பெண்ணாகிவிட்டாய்; குறை என்ற பதமே இருக்காது. என்தயவு இனி அவசியமில்லையல்லவா?" என்றார் நீண்ட மூச்சுடன்.

"ஐயோ, ராஜா! இதென்ன பேச்சு, உங்கள் தயவின்றி உலகில் நான் எப்படி நிம்மதியாக இருக்கமுடியும். மஹாராஜா தயவு அவசியமேயில்லை யென்பதற்காகத் தானே அவ்விதம் பதில் சொல்லிவந்தேன்.

நாட்டியம் ஆடப்போவது உங்கள் மனதிற்கு ஒவ்வவில்லை யென்றால் நாட்டியத்திற்கு மங்களம் பாடிவிடுகிறேன்.

"நீ அப்படிச்செய்து விட்டால் கலையுணர்ச்சியில்லாத கசடன் என்று உலகம் தூற்றும். அந்தப்பழிக்கு ஆளாக்கிவிடாதே. சரி. மணி இரண்டாகிறது. இரத்தினஹாரத்தைப் பத்திரமாகப் பெட்டியில் வைத்துவிட்டு உடைமாற்றிக் குழந்தையை எடுத்துக்கொண்டுவா. தூக்கம் வருகிறது" என்றார்.

"அன்று அதிகநேரம் நாட்டியமாடியதினால் மிக்க அலுப்பாகத்தோன்றியது. வீட்டிற்கு வந்ததும் குழந்தையைக்கூட எடுக்காமல், படுத்து உறங்க வேண்டுமென்று வந்தவள், ராஜாராமின் மனங்கோணாமல் நடப்பது கடமை என்ற நினைப்பில் தேகஸ்திதியைக் கவனிக்காமல் குழந்தையுடன் வந்தாள். அவரது பூட்டகமான பேச்சின் கருத்தை அறியாத பேதை.

இது நடந்த பத்து நாட்களுக்குப்பின், சீனா அமெரிக்காவிலிருந்து நான்கு பிரமுகர்கள் வந்திருப்பதாகவும், அவர்கள் விருந்துபசாரத்திற்காகவும் தமது சமஸ்தானத்தின் கலைவெற்றியைக் காண்பிப்பதற்காகப் பிரபுக்களுக்கும் உத்யோகஸ்தர்களுக்குமட்டும் அரண்மனைக்குள் இருக்கும் அரங்க மண்டபத்தில் மோஹினியின் நாட்டியம் ஏற்பாடுசெய்தார், மஹாராஜா.

ராஜாராம் வெளியூர் சென்றிருந்ததினால் அவர் சமீபத்தில் வரமாட்டார் என்ற நம்பிக்கையில் நடனமாட ஒத்துக்கொண்டாள் மோஹினி.

நடனத்திற்குரிய அலங்காரங்களை முடித்துக்கொண்டு நிலைக்கண்ணாடியின் முன் நின்று பார்த்துக் கொண்டாள். அவளின் அதியற்புதமான அலங்காரமும் அழகும் அவளையே வியக்கும்படி செய்தன. எனது இந்த அழகை அனுபவிக்க என் ராஜா அருகிலில்லையே என்று நினைத்தாள். உடனே அவளையுமறியாமல் 'உன்னை நினைந்துருகும் இந்த ஏழையைக் கைவிடலாமா" என்றபாட்டுடன் அபிநயம் பிடித்தாள். "எந்த ஏழையை வேண்டுகிறாய்" என்ற ராஜாராமின் குரல்கேட்டுத் திரும்பினாள். அவள் ஆனந்தத்திற் களவில்லை. "உள்ளன்பு பொய்யாகுமா? பவானி மாதா என் அன்னையல்லவா? நினைத்ததை உடனே அளித்துவிட்டாள்" என்று சொல்லியவாறு அருகில் வந்து அவர் தோளைப்பற்றி நின்றாள்.

"என்ன நினைத்தாய்?' என்ன கொடுத்தாள்?"

"கண்ணாடியில் என் தோற்றத்தைப் பார்த்துக்கொண்டதும் அதற்குரியதாங்கள் அருகிலில்லையே, இன்னும் நான்கு நாள்கள் செல்லுமே தாங்கள்வர: பவானிமாதா பறக்கும் சக்தியளித்தால் தங்களிடம்வந்து காண்பித்துவிட்டுப் பிறகு அரங்க மேடை செல்லலாமே என்று வேண்டினேன். தாங்கள் வந்துவிட்டீர்கள்" என்றாள்.

"ஆம். உன்னைப்பார்க்க வேண்டுமென்ற ஆவல் இரண்டுநாட்களாக என்னை வாட்டி வதைத்தது. அதனாலேயே வேலைகள் யாவையும் அப்படியே போட்டுவிட்டுப் பித்தனாக ஓடிவந்தேன். இன்று உன்தோற்றம் எப்படிப்பட்ட ஞானியின் மனதையும் தடுமாறச் செய்துவிடும். இன்று எவ்விடத்தில் நடனம்?" என்று கேட்ட வண்ணம் அவள் பக்கம் திரும்பினார்.

"அவர் நோக்கத்தைப் புரிந்து கொண்டவளாக, அலங்காரம் கலைந்தால் மறுபடி செய்துகொள்ள நேரமில்லை. பிறகு.........'' என்று நிறுத்தினாள்.

''ஓஹோ! அப்படியா! நான்கேட்டதற்குப் பதில்?'' என்றார் குரலில் சற்றே கடுமை தென்பட.

நடனத்தின் காரணத்தை விவரித்தாள்.

"ஓ. உன் நாட்டியம் அயல் தேசங்களிலெல்லாம் பரவப்போகின்றதோ! சரி தான் இனி மேல்நாடு சுற்றுப்பிரயாணங்கூடச் செய்வாய், என்னையும் உன் வேலைக்காரன் என்ற ஹோதாவில்கூட அழைத்துச் செல்லு: "என்ன?" என்றார்,

"என்ன ராஜா, என்னை இப்படியா கேலி செய்வது? நீங்கள் அழைத்துச் செல்லுமிடமே இன்பந்தரும் அல்லாது, அவர்கள் கூப்பிடுமிடமெல்லாம் நான் சென்று விடுவேனா? உங்கள் மனம் எதை விரும்புகின்றதோ அதையேதான் என்மனம் விரும்பும். இந்த உண்மையை நாம் அனுபவத்தில் கண்டதில்லையா?"

"அது அந்தக்காலம், அந்த நாள் இனி வருமா? அப்பா! விதிசெய்யும் சதி. என் வாழ்வில் இவ்வளவு மாறுதல் வருமென்று எதிர்பார்த்தேனா?"

"ராஜா! கல்யாணம் செய்துகொண்டதை மாற்றமுடியாது. மற்ற விஷயங்கள் முன்போல் நடக்கமுடியாதா? உங்கள் மளம் நிம்மதியடைய நான் என்னவேண்டுமானாலும் செய்கிறேன். தாங்கள் அடிக்கடி நீண்ட மூச்சுவிடுவது என்னை என்னவோ செய்கிறது. அபராதி அபராதி என்று மனம் கதறுகிறது. தங்கள் மனம் விட்டு உங்கள் விருப்பத்தைத் தெரிவிக்க மாட்டீர்களா?" என்றாள்.

"நடக்கக் கூடியதாக இருந்தாலன்றோ தெரியப்படுத்தவேண்டும்." என்று அவள் இருதோள்களிலும் இரு கைகளையும்வைத்த வண்ணம் உற்றுப்பார்த்தபடி கேட்டார்.

"ராஜா! இப்படிப்பேசுவது தர்மமா? உங்கள் விஷயத்தில் நடக்கக்கூடாதது என்று ஒன்றுண்டா? சொல்லுங்கள்"

"சொன்னால் செய்வாயா?"

"சந்தேகமின்றிச் செய்வேன்"

"இப்பொழுது நீ நாட்டிய அரங்கிற்குச் செல்லக்கூடாது. இந்தப் பௌர்ணமி நிலவில் மூன்றுமைலுக்குள்ளிருக்கும் வஸந்தத் தோட்டத்திற்குச் சென்று ஏகாந்தமாக விளையாடவேண்டும். அதற்குரிய ஏற்பாடுகள் செய்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன். என்ன சொல்லுகிறாய்?" என்றார்.

இடியோசை கேட்ட நாகம்போல் அவள் உடலும் நெஞ்சமும் பதறின. இவ்விதக் கேள்வியை எதிர்பாராத நிலைமையில், பதில்பேச வகைதெரியாமல் கண்களில் நீர் தளும்ப அவரைப்பார்த்தவண்ணம் நின்றாள்.

"ஏன் பதிலைக்காணோம்" என்றார் அமைதியாக.

"ராஜா! என்னை இப்படிச்சோதனை செய்யலாமா? எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன. மேடைமீது தோன்ற அரைமணி அவகாசம்கூட இல்லை. இடம் சாதாரணமானதா? இந்தச் சமயம் வரமுடியாது என்று எப்படிச் சொல்வது? தாங்கள் அறியாதது ஒன்றுமில்லை. ஒரு மணி அவகாசம் முன் நீங்கள் வந்திருந்தால்கூட, எனக்குப் பதிலாக யாரையேனும் தேர்ந்தெடுக்கச் சொல்லியிருக்கலாம். அவகாசமும் இருக்கும். தற்சமயம் அப்படிச்செய்வது நியாயமாகுமா? இராஜதுரோகமாகாதா? தயவுசெய்து ஒருமுறை மன்னியுங்கள். இரவு பத்துமணிக்குள் ஆட்டத்தை முடித்துவிடுகிறேன். பிறகு உங்கள் இஷ்டப்படி வஸந்தத்தோட்டம் செல்லுவோம்"

"அன்று என்ன சொன்னாய்? என் ராஜாக்ஞையின்முன் அரசாங்கம் எம்மாத்திரம் என்றாயே. இன்று அது என்னவாயிற்று?"

"ஐயோ! நான் என்னசெய்வேன். நிலைமை தர்மசிங்கட மாகிவிட்டதே. ராஜா! மனமிரங்கி மன்னிப்பளியுங்கள். இப்படிப்பட்ட சந்தர்ப்பம் ஏற்படுமென்று நினைக்காத சமயத்தில் அவ்விதம் சொன்னது உண்மை. இன்று தற்சமயம் நான் முடியாது என்றால் அயல் நாட்டார்முன் நமது ஒற்றுமைக் குறைவைக் காட்டுவதுபோலன்றோ ஆகிவிடும். மஹாராஜா அவமானப்பட ஹேதுவாமன்றோ. பின்னால் இதனால் எவ்வளவு விபரீதம் ஏற்படும். ராஜா! தாங்கள் மனப்பூர்வமாக இதைச்சொல்லியிருக்கமாட்டீர்கள், என்னைச்சோதனை செய்யவே விளையாட்டாகக் கூறியிருப்பீர்கள். அப்படித்தானே" என்றாள் கொஞ்சுதவாக.

"எப்படியானாலென்ன. இப்பொழுது ஆட்டத்திற்குச் செல்லத்தான் போகிறாய். அப்படித்தானே?"

"பின் நான் என்னசெய்வது?"

"நீ வருமளவும் நான் ஈ ஓட்டிக்கொண்டிருப்பதோ."

"ஏன், கலாவதியில்லையா, கொஞ்சி விளையாட"

"கலாவதியுடன் விளையாடுகிறேன், அல்லது கல்தூணில் முட்டிக்கொள்ளுகிறேன். உனக்கென்ன கவலை? ஆனந்தமாக மஹாராஜாவை ஸந்தோஷப்படுத்து போ" என்றார் கடுமையாக.

பேதை செய்யும் வகையறியாமல் தவிக்கலானாள். செல்லவும் கால் எழும்பவில்லை. போகாமலிருக்கவும் மனம் இடம்தரவில்லை. "தேவி! பவானி! என் நாதன் மனதில் என் நிலைமையை பதியும்படி செய்யமாட்டாயா? கணவன் கோபத்திற்குப் பாத்திரமாவதா? ராஜ கோபத்திற்குப் பாத்திரமாவதா? தேவி காப்பாற்று" என்று மனதில் வேண்டியவண்ணம் ராஜாராமின் தோளில் சாய்ந்தாள்.

"அலங்காரம் கலைந்து விடப்போகிறது எட்டி நில்" என்று அவள் கையை இறுகப் பிடிக்கும் சமயம்.

மறைவில் நின்றபடி வேலைக்காரி "அம்மா! அரண்மனை வக்கீல் யஜமானரைப் பார்க்க வந்திருக்கிறார். வரச்சொல்லவா?" என்றாள்.

"வரச்சொல்லலாமா வேண்டாமா" என்று செய்வதறியாமல் கெஞ்சும் பாவனையாக அவரைநோக்கினாள். அவரும் இவளை உற்று நோக்கியவாறே "இவ்விடம் வரச் சொல்லு அவரை" என்றார்.

இருவரும் பக்கம் பக்கமாக நின்றாலும் அவள் கையைப் பிடித்த பிடி விடாமல் நின்றார். வக்கீல் உள் நுழைந்ததும் "நமஸ்காரம்" என்று கைகுவித்தார்.

பதிலுக்கு நமஸ்காரம் சொல்லிவிட்டு எதிரிலிருந்த நாற்காலியில் உட்காரும்படி சொல்லிவிட்டு, தாமும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். நாற்காலியின் சாய்மானத்தைப்பிடித்த வண்ணம் நின்றாள் மோஹினி.

"தாங்கள் வந்த விஷயம் என்னவோ?" என்றார் ராஜா,

"நாட்டிய அரங்கிற்குத் தங்களை அழைத்து வரும்படி மஹாராஜா என்னை அனுப்பினார். இதோ அவர் முத்திரையிட்ட கடிதம்" என்று ஓர் உயர்ந்தவேலைப்பாடு செய்த கவரை நீட்டினார்.

"நான் இவ்விடம் இப்பொழுதுதானே வந்தேன். அவருக்கு எப்படித்தெரியும்" என்று கேட்டவாறு கவரைப் பிரித்துப் பார்த்தார்.

"சற்றுமுன் தங்கள்தேவியாரை அழைக்க, காருடன் வந்த பணிப்பெண், உங்கள் வேலைக்காரியின் மூலம் நீங்கள் வந்திருப்பதாகவும் சற்று இருந்துதான் தேவியை அழைத்துச் செல்லவேண்டுமென்றும் அறிந்தாளாம். யூகசாலியான அவள் உடனே திரும்பிவந்து மஹாராஜாவுடன் விஷயத்தைச் சொன்னாளாம். அவர் உடனே என்னை அனுப்பினார். எல்லாம் தயாராகி விட்டன. யாவரும் வந்து விட்டார்கள். அரங்கமேடை பின்ஹாலில் மஹாராஜா முதலியவர்கள் உம் வரவிற்காகக் காத்திருக்கிறார்கள். நீங்கள் வந்ததும் அவர்கள் மேடைக்குவரவேண்டும். புறப்படலாமா?" என்றார் வினயமாக.

"உம் புறப்படலாம்" என்றார் ராஜா.

"தாங்கள்வந்து ஒன்றும் சாப்பிடவில்லையே. இதோகொண்டு வருகிறேன்" என்றாள் மோஹினி.

"அவ்விடம் டிபார்ட்டி தயாராய் இருக்கிறது. இவர்களுக்காகத்தான் காத்திருக்கிறார்கள்" என்றார் வக்கீல்.

அதற்குள் சமையல்காரன் பழமும் காப்பியும் கொண்டுவந்தான். ஒரு லோட்டா காப்பியை எடுத்து ராஜாராமிடம் கொடுத்துவிட்டு மற்றொன்றை வக்கீல் முன் வைத்தாள்.

"ஏன் நீ சாப்பிடவில்லையா?" என்றார் ராஜாராம்.

"ஆட்டத்திற்குமுன் ஒன்றும் சாப்பிடுவதில்லை" என்றாள்.

தாம் சாப்பிட்டுவிட்டுக் கொஞ்சம் மீதம் வைத்து, "பரவாயில்லை இதைச்சாப்பிடு" என்றார்.

பதில் சொல்ல வகையின்றி சாப்பிட்டாள். பிறகு "வா போகலாம்" என்று அவள் கையைப் பற்றி நடந்தார். முகமும் பேச்சும் திருப்தியாகத் தோன்றின. ஆனால் அவர் கையைப்பிடித்து அழுத்தியவேகமானது அவர் மனதைத் தெள்ளெனக் காட்டியது. மனமறிந்தும் வேறு வகையில்லாமல் நடந்தாள். சமயத்தில் தனது இக்கட்டைத் தீர்க்கப் பவானிமாதாவே வக்கீலை அனுப்பியதா எண்ணிச் சென்றாள்.

சென்றவிடத்தில் யாதொரு மாறுதலுமில்லாது சந்தோஷ டீபார்ட்டியில் கலந்துகொண்டார். வந்திருந்த அயல் நாட்டாருடன் அளவளாவினார். மஹாராஜாவுடன் ஏதோ சில சந்தர்ப்பங்களில் ஓரிரண்டு பேச்சுடன்தான் பழகியிருந்தார். இன்று மஹாராஜா இவரை மிகவும் போற்றி மகிழ்ந்தார். இவர் வேலைத் திறமையை அயல் நாட்டாரிடத்தில் மிகவும் புகழ்ந்து பேசினார். இவைகளைக் கவனித்த மோஹினி தனது நாதனின் கோபம் தணிந்துவிட்டது என்று நிம்மதியடைந்தாள். அதனால், நாட்டியத்தில் அவள்மனம் அதிக உத்ஸாகத்தை யடைந்தது. அதியற்புதமாக ஆடினாள். கடைசியில் ஆங்கில நடனமும் ஆடினாள்.

"இவைகளை எப்பொழுது கற்றாள்?" என்ற ஆச்சர்யத்தில் முகஞ்சுளித்தார் ராஜா. இதையறிந்ததுபோல்,

"இவர்கள் வரவிற்காகச் சமீபத்தில் தான் ஆங்கில ஆசிரியரிடம் மோஹினி இந் நாட்டியம் பழகினாள்" என்றார் ஜமீன்தார்.

நாட்டியம் முடிந்ததும் அயல்நாட்டார் மிகுந்த புகழுரையுடன் வைரப் பதக்கம் புருச் மோதிரம் இவைகள் விலைமதிப்பற்றனவாகப் பரிசளித்தார்கள். மஹாராஜா நல்

முத்துமாலையுடன் வைரப் பதக்கமும் பரிச ளித்தார். பிறகு மேடைமீது நின்று ராஜா ராமை நோக்கினர்.

"மோஹினியைத் தேவியாகப் பெற்ற பாக்கியசாலி தாங்கள். நடனத்திற்கென்றே அவள் பிறந்தாள்போலும். சாதாரணமாக யாவரும் பழக்கத்தினல் நடனமாடு வார்கள். ஆனலும் பூர்வீக வாசனுபலமும், தெய்வாம்சமும் பொருந்தியவர்கள் ஆடும் நடனமே தனிப் பெருமைகொண்டது. மோஹினி அவ்வித தெய்வாம்சம் பெற் றவள். நான் எவ்வித நடனப் பெண் மணியைக் கனவு கொண்டிருந்தேனே அந் தத்தெய்வப் பிறவியைத் தாங்கள் இச்சமஸ் தானத்திற்கு அளித்தீர்கள். அகில இந்திய நடன மஹாநாடு கூட்ட இன்னும் எவ் வளவுகாலம் செல்லுமோ என்று ஏங்கி யிருந்தேன். அவ்வேக்கத்தை நிவர்த்தி செய்துவிட்டீர்கள் தாங்களும் பவானி மாதாவும். கூடிய சீக்கிரம் மஹாநாடு கூட்ட ஏற்பாடு செய்யப்போகிறேன்' லக்ஷ்யப் பெண் மோஹினிதான்.

"இதில் அவள் பங்கெடுத்துக்கொள்ளு வதினல் உங்கள் சுக வாழ்விற்குச் சற்று இடையூருக இருக்கலாம். ஆனல் அதைக் கலைத்தொண்டு என்று நினைத்து பொறுத் துக்கொள்ளுவீர்களென்று நம்புகிறேன்" என்ருர்.

"அரசரின் வினயமான பேச்சு அந்தச் சமயம் ராஜாராமின் மனதில் கவலையை நீக்கி ஆனந்தத்தைக் கொடுத்தது, அதனல் மஹாராஜாவை வணங்கிவிட்டு,

"தங்கள் சித்தம் என் பாக்யம். நாட் டியமே எங்களை ஒன்றுகூட்டியது. கலையி லுள்ள அவளது ஆர்வத்தை நிறை வேற்றவே இவ்வூரில் வசிக்கச் செய்தேன். உங்கள் லக்ஷ்யத்தை நிறைவேற்றும் பாக்ய சாலியாக மோஹினி ஏற்பட்டது எங்கள் பூர்வத்தின் புண்ணியமே. இவ்விஷயத்தில் தங்களுடன் ஒத்துழைக்க இந்த அடிமை என்றும் தயாராக இருக்கிறேன்" என்ருர்,

பிறகு சபை கலைந்ததும், மோஹினி ராஜாராம், மஹாராஜா, திவான், சீன அமெரிக்க யாத்ரீகர்கள் யாவரும் வெகு நேரம் பல விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்துவிட்டுப் பிரிந்தார்கள்.

ராஜாவின் கோபம் தணிந்துவிட்டது. என்ற நிம்மதியடைந்தாள் மோஹினி. வீட்டிற்கு வந்ததும் நடன உடையை மாற்றிக்கொண்டு, சென்றவாரம் ராஜா வாங்கி வந்த கருப்புப் பட்டில் ஜரிகை யினல் கொடி பார்டர் போட்ட சேலையை உடுத்தி, அதே ஜாக்கெட்டும் அணிந்து, நீண்டு கறுத்த கூந்தலைத் தளரப் பின்னித் தொங்கவிட்டு, மேலே சிறிது மல்லிகைப் புஷ்பம் வைத்து, கழுத்தில் மஹாராஜா பரிசளித்த ரத்ன ஹாரம் முத்துஹாரம் இரண்டையும் அணிந்துகொண்டு, ராஜா வின் அருகில் வந்தாள்.

"அவள் தோற்றம் அவர் மனதை மயக் கமுறச்செய்தது. இடுப்பிலிருந்த குழந்தை அவரைப் பார்த்துக் கன்னங்குழியச் சிரித்தது. குழந்தையை வாங்கிக்கொண்டு, "மோஹினீ! மோஹினியாகவே தோன்று கிருய்; ஆனல் இம்மாலைகள் என் கண் ணைக் கூசவைக்கின்றன. அவைகளைக் கழற்றிவிட்டு என்னருகில் வா" என்ருர்.

அதன் அர்த்தம் விளங்காத நிலைமையில் கழற்றி வைத்துவிட்டு வந்து "இப்பொ சரிதான" என்ருள்.

"இப்பொழுதுதான் என் மோஹினீ" என்று குழந்தையுடன் சேர்த்து அணைத் துக்கொண்டார்,

"சாப்பிட வருகிறீர்களா?" என்ருள்.

"என்ன அவசரம்?" என்ருர்.

"சாப்பிட்டுவிட்டு வசந்தத் தோட்டம் செல்லவேண்டாமா? இவளையும் எடுத்துச் செல்லுவோமா" என்ருள்.

'இனிமேல் வசந்தத்தோட்டமா? சாயங் காலம் சென்ருல் பன்னிரண்டு மணிக்குள் திரும்பமுடியும். நிசாசரர்கள்மாதிரி இவ் வேளையில் செல்லுவதா? அதிலும் குழந்தையை எடுத்துக் கொண்டா?" என்ருர்,

"குழந்தை வேண்டாம். அம்மா பார்த் துக்கொள்ளுவாள். பூர்ண கலையுடன் பவனி வருகிருன் தாராவின் காதலன். சென்ருேமானல் சற்றுநேரம் உலாவி விட்டுத் திரும்பிவிடலாம்".

"வேண்டாம். இன்னெரு சமயம் பார்த் துக்கொள்ளலாம். சாப்பாட்டை மேல் மாடிக்குக் கொண்டுவரச் சொல்லு. நிலவில் சாப்பிடுவோம்" என்ருர்.

யாதொரு மாறுதலுமின்றி இரவு கழிந்தது. நான்கு நாளில் திரும்பி வரு வதாகச் சொல்லிச் சென்ருர்.

நாட்டியத்தில் பங்கெடுத்துக்கொள்ளும் விஷயத்தில் கவனம் செலுத்தியபடியினல் ராஜா சென்று பத்து நாட்கள் ஆகியும், பதில் தெரியாததைப்பற்றிக் கவலைகொள்ள வில்லை.

(தொடரும்)

அன்றலர்ந்த ரோஜாவின் நறுமணத்தைப்போல் ரம்மியமானதும், அதன் இதழ்மேல் படிந்துள்ள பனித்துளிபோல் மென்மையுடையதும், உங்கள் இஷ்டத்திற்குரிய சோப்புமான வினோலியா ஒயிட் ரோஸ், உங்கள் சருமத்தை மிருதுவாகவும் நேர்த்தியாகவும் வைத்துக்கொள்கிறது. அன்றியும் உங்களுக்கு ரோஜா மலர்களின் பரிமளத்தை மறுபடியும் நினைவூட்டுகிறது.

வினோலியா

ஒயிட் ரோஸ் சோப்

VWR. 24-23 TM. VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND

ஞானியின் மகள்.

"ஆத்ரேயி"

தத்துவஞானி இக்னடிக் மூன்றுமுறை உலகச் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிருர். எத்தனையோ பிரச்னைகளையும், சிக்கல்களையும் தீர்த்து வைத்திருக்கிருர். அப்பொழுதெல்லாம் அவருக்கு இத்தகைய மனப் போராட்டம் ஏற்பட்டதேயில்லை. அப்படியொன்றும் அது ஒரு பெரிய பிரச்னையல்ல: தம்மைப் போலவே அறிவும், ஆற்றலும் நிறைந்த ஒரே மகள் வீராவைக் கன்னியர் விடுதியில் சேர்க்க வேண்டுமென்பது தான். இந்த எண்ணம் வெகு வருஷங்களாகவே அவர் உள்ளத்தில் ஊறி, வளர்ந்து கொண்டே வந்தது. இதில் மனைவி ஸ்டீபனேவாவின் எதிர்ப்பு அதிகமாக ஆக அவருடைய உறுதியும் அதிகரித்துக் கொண்டே வந்தது.

அந்த அறையில் நிலவியிருந்த நிசபதத்தைக் கிழித்துக்கொண்டு ஞானி இக்னடிக்கின் குரல் ஒலித்தது.

"அடுத்த ஞாயிறன்று இரவு இவ்வேளையில் வீரா பீட்டர்ஸ்பார்க் கன்னியர் விடுதியில் களையாறிக் கொண்டிருப்பாள் அல்லவா?" என்றவாறே தம் மனைவியை நோக்கினுர். ஸ்டீபனேவா துயரம் தேங்கிய முகத்தைக் கீழே தாழ்த்திக் கொண்டாள்.

"ஆஹா தத்துவஞானி இக்னடிக்கின் மகள் நித்தியகன்னிவீரா உலகமுழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து, தந்தையின் கொள்கைகளை உலகிற்கு உணர்த்துவாள். உலக மகா சரித்திரத்தின் ஏட்டில் ஞானி இக்னடிக்கின் பெயரைப் பொன்னெழுத்துக் கொண்டு பொறிப்பாள். எனக்குத்தான் எத்தகைய பெருமை என் மகளால்?" என்று உற்சாக மிகுதியில் தம் நீண்ட தாடியை உருவி விட்டுக்கொண்டார்.

வீரா தன் சிவந்த விழிகளைக் கையிலிருந்த பைபிளின்மேல் செலுத்தினுள்

"ஆனுலும் அவளுடைய இணையற்ற அழகும், இளமையும்......... என்று முடிக்காமல் கணவனை அச்சத்துடன் நோக்கினுள்.

"ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்துவிடுகிருள். ஏன் வீரா அப்படித்தானே?" என்ருர் மகளை உற்று நோக்கிய வண்ணம்.

வீரா பைபிளை மேஜையின்மேல் வைத்துவிட்டுக் கண்களினின்றும் பெருகிய கண்ணீரை துடைத்துக் கொண்டாள்.

"வீரா நான் என் வாழ்க்கையிலேயே, செய்த மகத்தான தவறு என்ன தெரியுமா?"

"என்னை மகளாகப் பெற்றது" என்ருள் கம்மிய குரலில்.

"உளருதே. அறிவின்றி ஆத்மாவின் மேன்மை யறியாமல் மணம் என்னும் சுழலில் சிக்கிக் கொண்டேனே அதுதான். பரிசுத்தமான என்னுடைய ஆத்மா இப்படிக் களங்க மடைந்து விட்டதே என்று எவ்வளவோ முறைகள் நொந்து கொண்டிருக்கிறேன் ஆனுல் களங்கம் நிறைந்த சந்திரனினின்று உலகம் ஒளியைப்பெறுவதுபோல், மாசுஅடைந்த என் வாழ்க்கையில் ஒளிப்பிழம்பாகத் தோன்றினுய் நீ. அந்த ஒளியைத்தான் உலகம் பெற்றுப் பயனடைய வேண்டுமென்று இவ்வளவு கஷ்டப்படுகிறேன் வீரா!" ஞானி நீண்ட பெருமூச்சு விட்டார்.

"உங்களைப்போலவே மகளும் பருவமடைந்திருக்கும் இந்த இளம் வயதில் உள்ளுணர்ச்சிகளையும், ஐம்புலன்களையும் அடக்கி வெற்றி பெறுவாள் என்பது என்ன நிச்சயம்?" தாயின் வாயினின்றும் வார்த்தைகள் வெடித்து வந்தன. இப்படி மனைவி அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசி அவர் பார்த்ததே இல்லை. அவருக்குக் கோபம் எல்லைமீறி வந்தது.

"சீ துராத்மா வெளியே போ. அருவருக்கத் தக்க வார்த்தைகளை யார் முன்னால் பேசுகிறாய்? ஞானி இக்னடிக்கின் ஞான ரத்தத்தில் ஊறிப் பிறந்த வீராவைப் பற்றிப் பேசுகிறாய் என்பது ஞாபகம் இருக்கட்டும்". ஞானியின் குரலில் கோபம் பாய்ந்தோடியது. உள்ளக் கொதிப்பு அடங்கச் சில நிமிஷங்கள் ஆயின. அதை ஆற்ற முயலுபவர் போல் நெற்றிப் பொட்டில் கையை வைத்துத் தட்டினார்.

ஏதோ நினைத்துக்கொண்டவர்போல் எழுந்து மகளருகே சென்று "வீரா" என்றார் தலையை வருடியபடி.

"தந்தையே!" என்றாள் தழுதழுக்கும் குரலில். மேலே ஒன்றும் சொல்ல முடியாமல் உதடுகள் துடித்தன.

"தந்தையே!" அறையின் வெளியே யாரோ அழைத்தனர்.

"இது யார் என்னைக் கூப்பிடுவது? வீராவின் குரல் போலவே இருக்கிறதே" என்று சுற்றிலும் நோக்கினார் ஞானி.

"அது என் வளர்ப்புக் கிளி" என்றாள் வீரா.

"வீரா: சிறு பெண்ணின் பேதைமைப் புத்தியைக் காண்பித்துவிட்டாயே. வான வெளியில் உல்லாசமாகப் பறந்து போகும் அந்தச் சுதந்திரக் கிளியை மனிதர்களின் கட்டுப்பாடு நிறைந்த சிறையில் அடைக்கலாமா? என் உபதேச மொழிகள் உன் நினைவை விட்டுப் போய்விட்டனவா?" என்றார் கடுங் குரலில்.

"இல்லை தந்தையே இன்னும் ஒரு வாரத்தில் பூர்ண விடுதலை கிடைத்துவிடும்" என்றாள். மகளைத் திறந்த ஜன்னலருகே அழைத்துச் சென்றார். டான் நதியின் ஓ வென்ற இரைச்சல் காதில் வந்து மோதிற்று.

"அதோ இரைச்சல் கேட்கிறதே அது என்ன?" என்று சுட்டிக் காட்டினார்.

"டான் நதி" என்றாள் ஈனஸ்வரத்தில்.

"இதோ என்னைப் பார் வீரா. என்று உன்னால் மனதை அடக்கமுடியாமல் போகிறதோ அன்றே அந்த நதியில் அடைக்கலம் புகுந்துவிடு என்ன?" என்றார். அவர் கண்களில் வீசியது என்ன? ஞான ஒளியா? அல்லது அஞ்ஞான விசும்பிடையே மினுக்கும் அர்த்தமற்ற கொள்கைகளென்னும் துளிக்கணங்களா? வீராவின் மெல்லிய உடல் பயத்தால் நடுங்கிற்று. தந்தையை நிமிர்ந்து நோக்கினாள். ஆவேசமுற்ற குரலில் "தந்தையே நான் தங்கள் மகள். என் இரத்தத்தில் ஞான வெள்ளம் பாய்ந்தோடுகிறது. இதைப் பற்றி நீங்கள் சந்தேகமோ கவலையோ படவேண்டாம்" என்றவாறே ஜில்லிட்டுப் போன தன் கரங்களை அவரது முரட்டுக் கரங்களுடன் இணைத்துக்கொண்டாள்.

"நல்லது வீரா இப்பொழுதுதான் நீ என் மகள். மனதைத் தளரவிடாதே" என்று கூறிவிட்டு அறையைவிட்டு நிறைந்த உள்ளத்துடன் வெளியேறினார் ஞானி. கூண்டிலடை பட்டிருந்த கிளியை வெறித்து நோக்கினாள் வீரா. பேசும் திறமையற்ற கிளியின் சுதந்திரத்திற்காக ஏங்கிக் கதறும் தந்தையின் பகுத்தறிவிற்கு மகளை விடுதிச் சிறையில் கொண்டுவைப்பது எட்டவில்லையா? குமுறிவந்த துக்கத்தின் நடுவே அவளுக்குச் சிரிப்பும் வந்தது. தன் பேசும் திறமையினால் நகரையே அதிரவைத்த வீராவிற்குத் தந்தையின் முன்பு ஏன் பேச நாவெழவில்லை? அவள் ஞானியின் மகள். அந்த ஒருமுடிவிற்குத்தான் அவளால் வர முடிந்தது.

2

சனிக்கிழமை இரவு உறக்கம் கொள்ளாமல் படுகையில் புரண்டுக்கொண்டிருந்தார். கடிகாரம் அமைதியைக் கிழித்துக்கொண்டு மூன்றடித்தது. பட பட வென்று கதவு இடிக்கப்படும் சத்தம் கேட்டு எழுந்து சென்று கதவைத் திறந்தார். வேலைக்காரி நாஸ்டியா கலவரத்துடன் மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க நின்று கொண்டிருந்தாள். "நாஸ்டியா! இது என்ன?" என்றார் பொறுமை மீறி. சட்டென்று கைகளினால் முகத்தை மறைத்துக்கொண்டு "வீராவின் உயிரற்ற உடலை டான் நதியிலிருந்து கொண்டுவந்து சேர்த்திருக்கிறார்கள்" என்றாள் விம்மல்களுடன்,

"என்ன, வீராவின் உடலா?" என்றார் நடுங்கும் குரலில். மறுகணம் "மூடப் பெண்; பாபத்தை விளைவித்துக்கொண்டாளே" என்றார். அவர் குரலில் மாற்றம் இருந்தது. நாஸ்டியா நிமிர்ந்து அவரைப்பார்த்து விட்டு வெளியேறினாள்.

ஞானி தன் மக்ளுடைய மரணக் கிரியைகளை நடத்தினார். மனைவி சடங்கின் பொழுது அருகிலில்லை. அவள் அந்த இருண்ட அறையில் மகளின் நினைவிலேயே ஐக்கியமாகிவிட்டாள். அவள் அந்தத் துக்கச் செய்தியைக் கேட்டதுமே தன் கைகால்களின் உபயோகத்தை இழந்து படுத்த படுக்கையானாள். மாதா கோவிலிலிருந்து மகளின் மரணத்தை அறிவுறுத்தும் மணியோசை அவள் காதிலும் ஒலித்தது. மகளின் ஆத்ம சாந்திக்காக நடந்த ஜபத்தின் ஒலியும் இவளுக்கு நன்றாய்க் கேட்டது. கைகளைக் குவித்துத் தானும் வேண்ட முயற்சித்தாள்; உணர்சியற்ற கரங்களும், நாவும் மறுத்துவிட்டன. அவள் கண்கள் மட்டும் திறந்தப்படியே இருந்தன. ஆனால் அவற்றில் ஒளியில்லை. அவை எப்பொழுதும் நீரைப் பெருக்கியவாறே இருந்தன.

ஒளிவீசிய ஞானியின் கண்கள் கண்ணீரைக் கக்கவில்லை. அவர் கதறி அழவில்லை. அவருடைய தோற்றத்திலும், செய்கையிலும் சுபாவமான அடக்கமும், அமைதியும் நிலவியிருந்தன. அவர் ஞானி. மகளின் மரணம் அவரை என்ன செய்யும்?" என்றனர் மக்கள். அது காதில் விழுந்த போதெல்லாம் அவர் லேசாகப் புன்னகை செய்தார். அவ்வளவுதான், அதிலாவது துயரத்தின் சாயல் சிறிது ரேகைவிடவேண்டுமே. ஊஹூம்.

வீட்டை அடைந்ததும் நேரே மனைவியின் அறைக்குள் நுழைந்தார். அந்த இருண்ட அறையில் அவர் வாழ்விலேயே இதுவரை கண்டிராத-இல்லை அனுபவித்திராத ஒரு அமானுஷ்யமான அமைதி-மரண அமைதி நிறைந்திருப்பதை உணர்ந்தார். நீர் நிறைந்த அவளுடைய கண்களை நோக்கினார். சலனமற்ற அந்தக் கண்களில் கோபமோ, துக்கமோ காணப்படவில்லை. ஆனால் அவற்றில்

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWJA*
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

ஓர் ஆழ்ந்த அர்த்தம் புதைந்து கிடப்பதாக அவர் எண்ணினர். அவளுடைய நெற்றியின்மேல் கையை வைத்துப் பார்த்தார். அதை அவள் உணர்ந்ததாகத் தெரியவில்லை,

வீராவின் அறையைக் கடந்து சென்றார். அதை அவர் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அவர் மனதில் விரக்தி நிறைந்திருந்தது. "தந்தையே!" இது யார்? பாபி மகள் வீராவா? கூண்டிலடைபட்டிருந்த கிளி படபடவென்று இறக்கைகளை அடித்துக்கொண்டது. ஞானிக்கு விரக்தியினிடையே கோபமும் வந்தது.

"யாரது வெளியே? நாஸ்டியா" என்று இரைந்தார்.

நாஸ்டியா அழுதழுது சிவந்த கண்களைத் துடைத்தபடியே எதிரே வந்தாள்.

"இந்தக் கிளியை விரட்டு; உம், உடனே"

"வீராவின் ஞாபகமாக அவள் அருமையாக வளர்த்த............"என்று தயங்கினாள்.

"சீ, மூடாத்மாவே. சொன்னபடிசெய். உடனே போ" என்று கூவினர். நாஸ்டியா மெதுவாகக் கூண்டின் கதவைத் திறந்தாள். கிளி விடுதலையை உடனே பயன்படுத்திக்கொண்டது.

அறையைச் சுற்றிச் சுற்றி உலாவி வந்தார் ஞானி. "கிளி, மகள் இருவருக்கும் விடுதலை கிடைத்துவிட்டது. கிளியின் விடுதலை மனிதனால் அனுமதிக்கப்பட்டது. வீரா ஏன் விடுதலை அடைந்தாள்? யார் அனுமதித்தார்கள்?" ஞானி புருவங்களை நெரித்து ஆழ்ந்த யோசனையில் மூழ்கினர். "ஏன், யார் அனுமதிப்பது? நான்தான் அனுமதி அளித்தேன். ஞானியின் மகள் என்பதை நிரூபித்துவிட்டாள். அவள் என் மகள். அவள் என் மகள். "வீரா! நான் உன்னைக் கொன்றேனு? இல்லை. நீ என்னுள் ஐக்கியமாகிவிட்டாய். உன் அறிவு, உன் ஆத்மா என்னுள் இரண்டறக் கலந்துவிட்டது. இதுவரை நான் ஞானி. நீ பெண். இன்று நான் ஞானி, பெண் இருவருமாகிவிட்டேன். உன் நல்லறிவு எனக்கு வழிகாட்டட்டும். மகளே வீரா! என் ஆத்மாவைத் தட்டி எழுப்பு." இரு கைகளையும் மார்மேல் பதித்து இறுக அழுத்திக்கொண்டார்.

3

வீட்டுக்கு வெளியே அவருக்கு எவ்வளவோ அலுவல்கள்—அவரின்றி அணுவளவும் நடைபெறமுடியாத அலுவல்கள் இருந்தன. முன் போலவே அவர் சிரித்த முகத்துடன் நடத்திவைத்தார். ஆனல் வீட்டிற்கு வந்தால் அவரை அறியாமல் ஒரு பயங்கர அமைதி சூழ்ந்துகொள்ளும். உள்ளத்தில் கூட ஒரு சூனியம் புலப்படும். அது ஏன் என்று அவருக்கே புரியாது. தூக்கமற்ற சில இரவுகளில் தாமும் தம் மனைவியும் வீராவின் அறையில் கடைசியாக அவளுடன் பேசிய நினைவு தோன்றும். உடனே எழுந்து கைகளை விரித்து "வீரா" என்று விளிப்பார். மோனம் சூழ்ந்த அந்தச் சிறு வீட்டின் ஒவ்வொரு மூலையும் அதற்கு எதிரொலி அளிக்கும். உடனே ஆத்ம திருப்தி அடைந்துவிடுவார்.

மனது அவரையறியாமல் சலனப்படும் பொழுது "அவள் ஏன் நாயைப்போல் துடித்துத் தண்ணீரில் இறக்கவேண்டும்? மனதைக் கட்டுப்படுத்த முடியாமல் போகவே அவள் என் ஆணைப்படி இறந்தாள். சரியான முடிவுதான்" என்று உறுதி செய்துகொள்வார்.

அன்று வீராவின் அறையைக் கடக்கும் பொழுது அவருடைய ஆவல் அடக்க முடியாததாக இருந்தது. கால்கள் அறையை நோக்கி விரைந்தன. அந்திக் கருக்கலில் அந்த அறை மங்கலாகவே காட்சியளித்தது. அறை முழுவதும் ஞானம் சூழ்ந்தஅவர் உள்ளத்தைப்போல் ஏதோ நிறைந்தும் ஏதோ குறைந்தும் காணப்பட்டது. எல்லாச் சாமான்களும் அப்படியே கிடந்தன. மேசையின்மேல் வேத புஸ்தகம் திறந்து வைக்கப்பட்டிருந்தது. அருகே சென்று முதல்வரியைப் படித்தார். "ஆத்மாவிற்கு விலங்கிட முடியுமா?" என்று காணப்பட்டது. 'சட்! இதென்ன கேள்வி?" என்று திரும்பினர். வீராவின் கட்டிலருகே சென்று உடைந்த குரலில் "வீரா" என்றழைத்தார்.

"அஞ்ஞானியே"

"இது யார் இந்த அதிகப் பிரசங்கி?" என்று அறை முழுவதும் நோக்கினுர். அவர் பார்வை எதிரிலிருந்த வீராவின் படத்தின் மேல் விழுந்தது. "ஆம்! வீராதான்! நீலமணிக் கண்களை உயர்த்திப்பேச முயற்சிக்கிருளே"

"வீரா நீ ஏன் இறந்தாய்?" என்ருர்.

"அஞ்ஞானியின் மகளாவதிலிருந்து விடுதலை பெறுவதற்காக"

"என்ன?" என்று கூச்சலிட்டார் ஞானி.

"தந்தையே! இக்கேள்விக்கு விடையளியுங்கள். எப்பொழுது ஒரு பொருளின்மேல் அதிக விருப்பம் ஏற்படுகிறது?"

"இது என்ன பெரிய கேள்வியா? கட்டுப்பாடுகள் அதிகம் ஏற்படும் பொழுது" என்று பதிலளித்தார்.

"எதிரிலிருக்கும் பொழுது?"

"அதைப்பற்றிச் சிந்தனையே தோன்ருது"

"இவ்வளவுதான். நன்ருய் யோசித்துப் பாருங்கள்." இதழ்க்கோடியில் ஒரு புன்னகை அரும்பி யிருந்தது.

"வீரா" என்று அலறிக் கொண்டே எழுந்தார் ஞானி. வீராவின் படம் அவரை வெறித்து நோக்கிற்று. அவருக்கு ஞானுேதயம் உண்டாகி விட்டது. உடம்பெல்லாம் வியர்த்தது. எழுந்து ஜன்னலருகே சென்று நின்று கொண்டார். "அஞ்ஞானியின் மகள் இறந்து ஞானியினுள் புகுந்து ஞானுேதயத்தையும் புகுத்தி விட்டாள்" என்று முணுமுணுத்தார்.

டான் நதியின் இரைச்சல் அதை ஆமோதித்தது.

(ஜெர்மன் கதை)

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ சென்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்.

வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ 25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ... ரூ 10,00,000
ரிஸர்வ் பண்டு ... ரூ. 10,00,000
மொத்த ஆஸ்தி ... ரூ. 6 கோடிக்குமேல்

ஸிட்டி ஆபீஸ்கள்:

சைஞபஜார், மாம்பலம், மயிலாப்பூர், பெரியமேட், திருவல்லிக்கேணி

அமதலவால்ஸா	கும்பகோணம்	திருநெல்வேலி ஜங்ஷன்	ராமநாதபுரம்
அனகாபல்லி	சாலூர்	திருச்சிஞப்பள்ளி	மதுரை
அம்பாசமுத்திரம்	சிப்பூருபள்ளி (Vizag)	திருவாரூர்	மாருடேரு
ஆம்பூர்	சிதம்பரம்	தூத்துக்குடி	விழுப்புரம்
ஈரோடு	சித்தூர் (கொச்சி)	தென்காசி	விருதுநகர்
கடலூர் N. T.	சீயாழி	நாகப்பட்டணம்	விஜயநகரம்
கடலூர் O. T.	தஞ்சாவூர்	பரமக்குடி	வேலூர்
காஞ்சீவரம்	தாடபள்ளிக்கூடம்	பாலக்காடு	வேதாரண்யம்
காரைக்குடி	திராறு R S.	பார்வதிபுரம்	ஜெய்பூர்
	திருநெல்வேலி டவுன்	புதுக்கோட்டை	(ஒரிஸ்ஸா)

பிக்ஸட் டிபாஸிட்கள்:- ஒரு வருஷம் நூற்றுக்கு வட்டி ... ... $2\frac{3}{4}$% வீதம்
இரண்டு ,, ,, ... 3% ,,
சேவிங்ஸ் பாங்கு கணக்கு வாரம் ரூ. 250/வாங்கக்கூடியது ரூ. 10,000/வரை வட்டி $2\frac{1}{4}$% ,,
கரண்ட் கணக்கு .. .. $\frac{1}{4}$% ,,

தங்கம், வெள்ளிபார், கவர்மெண்ட் பாண்டு, கடன் பத்திரங்கள், ஷேர்கள், வியாபாரச் சரக்குகள் முதலியவைகளின் பேரில் கடன்கள் கொடுக்கப்படும்.

எல்லாவிதமான பாங்கு நடவடிக்கைகளும் நடத்தப்படும்

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

பந்திக்கு முந்திக்கொள் படைக்கு பிந்திக்கொள்

டி. எஸ்.

"ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்" என்னும் பழமொழி ஒன்று வழக்கிலுள்ளது. "வேரை" என்னும் சொல் "பேரை" எனத் திரிந்து விந்தையான பொருளைக் கொடுப்பது அறிஞர் யாவரும் அறிந்த தொன்றே. இதுபோலப் பல முதுமொழிகள் பல வகையாகத் திரிந்து நேர் முரணான பொருள் சுட்டும் வகையிலும் வழங்கி வருகின்றன. அவற்றுள் "பந்திக்கு முந்திக்கொள்; படைக்குப் பிந்திக்கொள்" என்னும் பழமொழியும் ஒன்றாகும்.

புறநானூறு, பதிற்றுப்பத்து, இன்னும் இவைபோன்ற ஏனைய பல சங்க இலக்கியங்களில் தமிழரது சிறந்த வீரமும் மிகுந்த கொடையும் பல சான்றுகள் வாயிலாக அறியக் கிடக்கின்றன. பழந்தமிழர் தம் வீரத்தையும் கொடையையும் புலவர் பலரும் மனதாரப் புகழ்ந்து வாயார வாழ்த்தி நெஞ்சை யள்ளும் வகையில் எடுத்துக்கூறிப் போந்தனர். அவற்றை நாம் கற்குந்தோறும் நம் மனம் கனிந்து நெக்குருகின்றது. "நம் தமிழ் நாடும் ஒரு காலத்தில் அவ்வளவு சிறந்த வீரர்களைப் பயந்து பெரும் புகழ்பெற்று விளங்கியது" என்று நினைக்கும் பொழுது நம் மார்பகம் விம்முகிறது. அப்பொழுது நாம் ஒரு இன்பக் கனவுலகில் உலாவுதல் போன்ற ஓர் உணர்ச்சியை அடைகிறோம். உன்னுந்தோறும் உன்னுந் தோறும் உவகைதரும் அவ்வுணர்ச்சி நீங்கி நாம் சற்று விழிப்புற்று, அச் சிறந்த நிலையைத் தமிழகம் மீண்டும் அடையுமா என்று எண்ணுங்கால் நாம் நம்மையுமறியாமல் நெடுமூச்செறிகின்றோம்.

பண்டைத் தமிழர் தம் வீரம் இப்பெற்றித்தாக, இந்த நகையாடற்குரிய பழமொழி எவ்வாறு தோன்றிற்று என்பது ஒரு வியப்பேயாம். எனினும் புறநானூற்றுப்பாடல் ஒன்றின் மூலம் இப்பழமொழியைப் பயிலும் போதன்றோ உண்மை உணரக் கிடக்கின்றது!

"எமக்கே கலங்கல் தருமே, தானே
தேறல் உண்ணும் மன்னே, நன்றும்
இன்னான் மன்ற வேந்தே, இனியே
நேரார் ஆர்எயில் முற்றி
வாய்மடித்து உரறிநீ முந்துஎன் னானே!"

—புறநானூறு 298

[தேறல்—தெளிந்த மது. "இனி வேந்து நன்றும் இன்னான் மன்ற" என்று கொண்டு "இப்பொழுது வேந்தன் மிகவும் கொடியவன்" என்று பொருள் கோடல் மரபு. நேரார்—பகைவரது. ஆர்எயில்—அருமைப்பாடுநிறைந்த கோட்டை. உரறி—முழங்கிக்கொண்டு]

மதுவில் சுவைமிகுந்த கலங்கலாகிய பகுதியை எமக்கு அளித்துத் தான் சுவை குறைந்த தெளிந்த பகுதியை அருந்தி வந்தான். [காலந்தாழ்த்தியதால் தெளிந்த மது எனினும் பொருந்தும்.]. யாம் முதலில் உண்ண வேண்டுமென்னும் அன்பின்பெருக்காலன்றோ அவ்வாறு செய்தனன். அப்பொழுது அத்தகைய இனியவனாயிருந்த எம் மன்னவன் இப்பொழுதோ இன்னாதவனாயினன். அஃது எங்ஙனமெனில், பகைவரது கோட்டையை முற்றியிருக்குங்கால், எம்மைப் பின் இருத்தித் தானே முன் நின்று பொரும் இயல்புடையவனாயினன்."

"ஆலியார்" என்னும் ஆசிரியரால் இயற்றப்பட்டுள்ள இச்செய்யுள், ஓர் அரசன் தன் படை வீரர்களை எவ்வாறு நடத்தினான் என்பதையும், படை வீரர்களின் வீரத்தினளவு எத்துணை மிகுதியாயிருந்தது என்பதையும் விளக்குகிறது. உணவு என்றால் தம்மை முந்தச் செய்து தான் பிந்துவதும், படை என்றால் தம்மைப் பிந்தச்செய்து தான் முந்துவதுமான கொள்கையையுடைய அரசன் ஒருவனை, ஒரு படை வீரன், இகழுவதுபோலப் புகழும் வகையில் வெகு திறமையுடன் அமைக்கப்பட்டுள்ள இச் செய்யுளின் பொருட்சுவை பெரிதும் போற்றுந் தகைத்து. அன்பு, வீரம் என்னும் இரு உணர்ச்சிகளும் ஒன்றோடொன்று போட்டியிட்டு மிளிரும் அழகு அறிந்து இன்புறத் தக்கது. பண்டைத் தமிழரது இத்தகைய உயர்ந்த உணர்வெழுச்சிகளைக் குறித்து ஓதுங்கால், இற்றைத் தமிழரின் இரங்கற் பாலதாய நிலை நம்மை ஒரு குலுக்குக் குலுக்குகிறது. நம்மைவிட்டு அகன்ற நம் பண்டைப் பெருமையை மீண்டும் நாம் அடைவதுமுண்டோ?

நின்றுபோன மாதவிடாய்

குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினால் நின்றுபோனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்றார்கள்

சாதாரண கேஸ்களுக்கு	...	...	ரூ 3
நீண்டநாளைய கேஸ்களுக்கு	...	...	ரூ 5
மிக ஆபத்தான கேஸ்களுக்கு	...	...	ரூ 8
கர்ப்பத்தடை (6 மாத உபயோகத்திற்கு)		...	ரூ 4

(வி பி அணா 12 கூட)

தயாரிப்பவர்:-

MRS. P. DEVEE, F.D.S. (C.M.)
Tollygunge CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

ஹாரி & சன், 93, சைனாபஜார் ரோடு மதராஸ்.
ராகவன் & கம்பெனி, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு பங்களூர் ஸிடி
நாதம் & கம்பெனி மட்டஞ்சேரி, கொச்சி.
J. திராத் & கம்பெனி, மஹாத்மா காந்தி ரோடு, கராச்சி
L. M. முகர்ஜி & சன்ஸ் லிமிடெட் 167, தராம்தோலா தெரு கல்கத்தா,
சிவானந்த சித்தர் மெடிகல் ஹால், 92, கடல் தெரு கொழும்பு, &
768, லோவர் தெரு, பாத்துல்லா (ஸிலோன்)

198088

சுயேச்சை மணம்.

எம். எஸ். கமலா

"இரவு ஒன்பது அடித்து நாற்பத்தேழு நிமிஷங்களுக்கு வர்ஷயோகம் சமாப்தம். இதற்குள் மழை விடுவதாய்க் காணோம். இன்னும் பொழுதே சாயவில்லையே! அந்தப் பாழாய்ப்போன சூரியன் வருவதும் தெரிவதில்லை, மறைவதும் தெரிவதில்லை" என்று சொன்னார் பஞ்சாங்கத்தைப் புரட்டியபடியே சட்டர்ஜி.

"ஆனால் மிகவும் கஷ்டம்தான்: வீட்டிற்கு எப்படிப் போவது?" என்றான் விநோதன்.

"முதலில் மழை நிற்கட்டும். பிறகு வீட்டுவிஷயத்தைப் பற்றி யோசிக்கலாம். இன்று இங்கேயே எல்லோரும் சாப்பிடலாம், "ஊதோ! உள்ளேபோய்ச் சொல்லுடா" என்றார் வீட்டு எஜமான் வம்சலோசனபாபு.

"பயிற்றம்பருப்புப் பொங்கல். இலிஸ் மீன் கறி" என்று தம் விருப்பத்தைத் தெரியப் படுத்தினார் சட்டர்ஜி.

"சரி, மழைராயன் கண்டத்திலிருந்து தப்பித்துக் கொண்டோம். எப்படியும் பொழுது கழிந்துவிடும். சட்டர்ஜி சாமி! ஏதாவது கதை சொல்லுங்கள்" என்றான் விநோதபாபு தலையணையைத் தன்புறம் இழுத்துக்கொண்டே.

சட்டர்ஜி கொஞ்சநேரம் யோசனை செய்து சொல்லத் தொடங்கினார். "சென்ற வருடம் நான் மூங்கேரிலிருந்தபோது ஒரு பெண்புலி வாயில் விழுந்தேன்"

விநோதபாபு நடுவில் குறுக்கிட்டு "உமக்கொரு சலாம். எதைச்சொன்னாலும் புலிக் கதை மாத்திரம் சொல்ல வேண்டாம்" என்றான்.

"ஆனால் என்ன சொல்லச் சொல்றே! பூதக்கதையா?" என்றார் கோபமாய்ச் சட்டர்ஜி.

"இந்த மழையில் புலியும், பூதமும் கவைக்குதவாது. ஏதாவது இன்பத்தை ஊட்டும் காதல் கதையைச் சொல்லுங்கள்" என்றார் வம்சலோசனர்.

"நான் கதைக்காரனல்ல. நான் சொல்வதெல்லாம் உண்மையில் நடந்தவைகள்"

"அதைத்தான் சொல்லுங்கள்"

"அமுது வடிந்தாற்போல் தான். சட்டர்ஜி காதல் கதை சொல்வதும், நாம் அதை கேட்பதும். உங்க வயசு எத்தனை ஆகிறது சட்டர்ஜி சார்! வாயில் இன்னும் எத்தனை பற்கள் மீந்திருக்கின்றன?" என்று ஒரு கேள்வியை வீசினான் நரேந்திரன்.

"காதல் கடித்துத் தின்னும் பொருளா என்ன? அடே எருமை மாடே! பற்களிலிருக்காதுடா, காதல், இதயத்துக்குள் இருக்கும், மனதிற்குள்......"

"இதயம்...மனம்...உள்ளம் கூட உலர்ந்து கட்டையாகி விட்டது. உங்களுக்குக் காதல் என்றால் என்ன தெரியும்? எல்லாம் மறந்து போயிருக்கும். காதல் விஷயங்களை அறிய வேண்டுமானால் வாலிபர்களைக் கேளுங்கள். என்ன உதய்பாபு" என்றான் நரேந்திரன்.

"வாலிபர்களென்றால் யார்? யோசித்துப் பேசத் தெரியவில்லை, சிறுபிள்ளைத்தனம், மூன்று இருபதுகள் ஓடிவிட்டதடா! இந்த கேதார சட்டர்ஜிக்கு தெரியாத காதல் விஷயம் உங்களுக்குத் தெரியுமா? சாப்பாட்டு ராமன்கள்" என்றார் சினத்துடன் சட்டர்ஜி.

"விட்டுத் தொலையுங்கள், எதற்காக இப்படி அந்தச் சத்பிராம்மணனை வயிற்றெரிச்சல் கொட்டுகிறீர்கள். அவர் சொல்வதைத்தான் கேட்கக்கூடாதா?" என்றான் விநோதன்,

சட்டர்ஜி சொல்லத் தொடங்கினார். "வர்ணங்களில் உயர்ந்தவன் பிராம்மணன், உபநிஷத்துக்களாகட்டும், காவியங்களாகட்டும், காதல் தத்துவமாகட்டும், எல்லாம் இந்தப் பிராம்மணர்களின் மூளையிலிருந்து வந்ததுதான். பிராம்மணர்களிலும் உயர்ந்தவர்கள் சட்டர்ஜிக்கள். பக்கம் சந்த்ர சட்டர்ஜி, சரத் சட்டர்ஜி."

"இன்னும்......"

“இன்னும் கேதார் சட்டர்ஜி, சொல்ல மாட்டேனா? ஏன் சொல்லமாட்டேன்? நீ என்றால் பயமா?”

“அவனைச் சட்டை செய்யாதீர்க்ள். நீங்கள் கதையை ஆரம்பியுங்கள்” என்றார் ஹம்ச லோசனர்.

“சென்றவருடம் நடந்தது. நான் ஒரு அனுபவ சுந்தரியினிடம் சிக்குண்டேன்”

‚‘கொஞ்சம் முன்தான் சொன்னீர்களே! ஒரு பெண் புலி வாயில் வீழ்ந்தேனென்று” என்று குறும்புத்தனமாய்க் கேட்டான் நரேந்திரன்.

“இரண்டும் ஒண்ணுதான்” என்றார் விநோத்.

“அடே மூடமே! புலிவாயில் வீழ்ந்தது மூங்கேரில். இந்த விஷயம் நடந்தது பஞ்சாப்மெயிலில் ‘டூண்டலா’ விற்கு இப்புறம். கதையைக் கேளுங்கள்” என்று தொடர்ந்தார் சட்டர்ஜி.

* * *

சென்ற வருஷம் மாசி மாசத்தில் சரண் கோஷ் தன் சிறிய பெண்ணை டூண்டலாவுக்கு அழைத்துப்போய்விடச் சொன்னான். அவன் மாப்பிள்ளை அங்கு வேலையிலிருக்கிறான். பிறர் பணத்தில் இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்வது. வரும் வழியில் காசியில்கூடத் தங்கி வரலாம். எல்லாம் வசதியாகவே கிடைத்தது. பெண்ணைக் கொண்டுபோய்விட்டேன்.

வரும்போது டூண்டலா ஸ்டேஷனில் ரெயிலில் ஊசி நுழையக்கூட இடமில்லை. ஆக்ராவிலிருந்து திரும்பிவரும் அமெரிக்கன் யாத்ரிகர்களெல்லாம் முதலிரண்டு வகுப்புக்களை ஆக்ரமித்துக்கொண்டனர். நம்ப அதிருஷ்டம் கோஷ் மாப்பிள்ளை ரெயில்வே டாக்டர். கார்டு இடம் சொல்லி என்னை எப்படியோ முதல் வகுப்புப் பெட்டியில் ஏற்றிவிட்டான். உடனே வண்டியும் அசைந்தது.

சுமார் ஏழுமணி இருக்கும். பனி அடர்த்தியாய்ப் பெய்து கொண்டிருந்ததால் வண்டியின் வெளிப்புறமும், உட்புறத்தில்கூட சரியாய்த் தெரியவில்லை. கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு அப்படியே அசையாமல் நின்றிருந்தேன். கொஞ்ச நேரத்திற்குப் பின் கண் தெரிந்தது ஆச்சரியத்துடன் கல்லாய்ச் சமைந்து நின்றேன். அந்தப் பக்கம் இருக்கும் பெஞ்சின்மேல் ஆஜானுபாகுவான துரை ஒருவன் வாயைத் திறந்துகொண்டு, கண்களைமூடி, மல்லாந்து அரக்கன்போல் படுத்துக்கிடந்தான். நடு நடுவில் ஏதோ முணுமுணுத்தபடி.

இரண்டு பெஞ்சிகளுக் கிடையிலுள்ள காலி யிடத்தில் குட்டையும், பருமனுமாக, பீப்பாய் போன்றிருந்த மற்றொரு துரை குப்புற வீழ்ந்துகிடந்தான். அவன் தலையருகில் காலி பாட்டில் ஒன்று உருண்டு கொண்டிருந்தது.

இப்புறமிருந்த பெஞ்சியின்மேல் யாருமில்லை. ஆனாலும் அதன்மேல் விலையுயர்ந்த விரிப்புகள் விரிக்கப்பட்டிருந்தன. விரிப்பின்மேல் விசித்திரமான ஆடைகள் கிடந்தன. கரடித்தோலினால் செய்யப்பட்ட அநேக பொருள்கள் தாறுமாறாய் வீழ்ந்து கிடந்தன. வண்டி ஓடிக்கொண்டிருந்தது. எனக்கு எங்கும்போக வழியில்லை. அந்தப் பெஞ்சியில் நாற்காலியைப் போல் ஒரு அறையுள்ளது. அதிலமர்ந்து தர்க்சா நாமத்தை ஜபிக்கத் தொடங்கினேன். துரைகளிருவரும் படுத்துக்கொண்டே இருக்கிறார்கள். எனக்கும்கொஞ்சம் கொஞ்சமாய்த் தைரியம் வரத்தொடங்கியது.

திடீரென்று ‘பாத்ரூம்’ கதவு திறந்து கொண்டது. அங்கிருந்து நிகரற்ற அழகி வெளியில் வந்தாள். தூரநின்று எத்தனையோ துரைசானிகளைப் பார்த்திருக்கிறேன். இத்தனை அருகில் முகத்துக்கு முகம் தெரியும்படி பார்த்ததில்லை.

அன்னாஸ் பழம்போன்ற முகம், மிளகாய்ப் பழம் போன்ற உதடுகள். சலவைக் கல்லில் செதுக்கியது போன்ற கைகள். கழுத்துவரையில் கத்திரிக்கப்பட்ட கூந்தல், புளி மஞ்சிநாரைப்போல் மின்னிக்கொண்டிருந்த கூந்தலில் நான்கு முகத்தருகில் வளைவாய் திரும்பியிருந்தது. உடுத்தியிருந்தது கேவலம் ஒன்றரைமுழம் குல்லாய்த் துணி.

“குல்லாய்த் துணியல்ல சட்டர்ஜி சாமி!” ‘ஸ்கர்ட்’ என்பார்கள்” என்றான் விநோத்.

“ஸ்கர்ட், கிர்ட், எனக்கொன்றும் தெரியாதுபாபு. நான் கண்ணாரக்கண்டதைத் தான் சொல்லுகிறேன். நாம் படுக்கைகளுக்குத் தைக்கிறோமே கொசுவலை. அந்தத் துளைகள் விழுந்த துணியைத்தான் கால் சட்டையாய் மாட்டியிருந்தாள். அதற்குள்ளிருந்து சிவப்பு வாழைத் தூண்கள்போல் இரண்டுகால்கள் கீழிறங்கி இருந்தன. மேஜோடு அணிந்திருப்பதும் இல்லாததும் தெரியவில்லை. இதுவரை சரீர நிர்மாணத்தைப்பற்றிப் புஸ்தகங்களில் படித்திருக்கிறேன். இப்பொழுது நான் கண்ணாரக்கண்

டேன். உண்மையாய் அவள் மரக்கட்டை. தலையிலிருந்து, மார்பு, இடுப்பு, வயிறுவரை செதுக்கியதுபோல் சமானமாயிருந்தது. எங்கும் மேடு பள்ளமோ, வளைவு கோணலோ ஒன்றும் கிடையாது.

''சஞ்சாரிணீ! பல்லவினீ லதேவா;'' அல்லவா?

புகைந்துகொண்டிருந்த அவாய் சுருட்டு. பார்த்ததும் பக்திபிறந்தது. தலையில் கையை ஊன்றி ''சலாம் மேம்சாப்'' என்றேன்.

கலகல வென்று சிறித்தாள். மிளகாய்ப் பழம் உதட்டிற்குள்ளிருந்து மக்காச் சோளப் பற்கள் தென்பட்டன. தலையை அசைத்துக்கொண்டே 'குத்மார்னிங்' என்ருள். துரைசானி நடனமாடும் பெண்ணைப்போல் கண்ணையும் உதட்டையும் அசக்கிக்கொண்டு குலுக்கியபடியே வந்து பெஞ்சியில் அமர்ந்தாள். நான் திகைத்து எழுந்து நின்றேன்.

''ஸிடௌன் பாபு! பயப்படாதே'' என்ருள் அவள். ''ஒரு கையில் அபய முத்திரை. மற்றொரு கையில் சிகிரெட். தேவி பிரசன்னமாகிவிட்டாள். இனி நம்மை யார் என்ன செய்ய கிடக்கு'' என்றெண்ணினேன். இங்கிலீஷ் சரியாய் வராது. அதனல் ஹிந்தியும், இங்கிலீஷூம் கலந்து பேசினேன். ''வண்டியில் எங்கும் இடம் கிடைக்கவில்லை. ஆதலால் அனுமதியில்லாமல் ஏறிவிட்டேன். ஆனல் கார்டு அனுமதியின்படி, துரைசானியம்மா! இந்த அபராதத்தை மன்னிக்க வேண்டும்'' என்றேன்.

அவள் மறுபடியும் அபயஹஸ்தமளித்தாள். நான் அமர்ந்தேன். அத்துடன் அவள் என்னை விடவில்லை. என் அருகில் வந்து அமர்ந்து பல்லை இளித்து, என்னையே கண் இமைக்காமல் பார்த்தாள்.

''அரே! இந்தக் கேதார சட்டர்ஜியின் பாவம் பழுத்தது. புலி துரத்திக்கொண்டு வந்தது. பூதம் பயப்படுத்தியது. குரங்கு பல்லைக் காட்டி கடிக்க வந்தது. ப்ராஸிக்யூட்டிங் இன்ஸ்பெக்ட்டர் கிராஸ் செய்தார். ஆனல் இம்மாதிரி ஆபத்து எப்பவும் வந்ததில்லை. அறுபது வருஷமாய்விட்டது. நிறமோ அப்படி கறுப்பல்ல. ஐந்து நாளாய் ஷேவ் கூடச் செய்துகொள்ளவில்லை. ஆனலும் இவைகளெல்லா வற்றையும் தள்ளிக்கொண்டுவந்து வெட்கம் என்னை முற்றுகையிட்டது. என் முகம் குபீரென்று கத்திரிப் பழம் நிறமடைந்தது.

''என்ன பார்க்கிறீர்கள் துரைசானியம்மா!'' என்று நான் பொறுக்க முடியாமல் கேட்டு விட்டேன்.

துரைசானி கலகலவென்று சிரித்தாள். ''ஒன்றுமில்லை, 'நோ அப்பென்ஸ்.' தாங்களெந்த ஊர்?''

''என் கௌரவத்திற்கு நாசம் வந்தது. நானென்ன பகல் வேஷக்காரனு? பசுவா? மார்பை விரித்து உடைத்துக்கொள்ள.'' இந்தக் கேதார் சட்டர்ஜி, 'நோ ஜூ கார்டென்' என்றேன்.

துரைசானி 'ஹி.ஹி·ஹீ.' என்று சிரித்து ''பெங்காளி'' என்ருள். நான் கர்வமாய் ''எஸ் மேடம்: ஹைக்ளாஸ் பெங்காலி பிராமின்'' என்று பூணூலை வெளியிலெடுத்துக் காட்டி, ''ஸீ! தாங்கள் யார் மேடம்.''

''சீ; சட்டர்ஜி துரைசானியின் அறிமுகம் பெற்றீர்களா? எடிகேட் ஒத்துக் கொள்ள மாட்டாள்.'' என்று விநோதன் தெரிவித்தான்.

''ஏன் கேட்க மாட்டேன். துரைசானி என்னைக் கேட்டபோது நான் மாத்திரம் கேட்காமலிருப்பேனு? துரைசானிக்குக் கோபம் வரவில்லை. எல்லாம் சொல்லிவிட்டாள். பெயர் ஜோன் ஜில்டர். இருப்பது அமெரிக்கா. நம் தேசதுக்கு எத்தனையோ முறை வந்திருக்கிருள். இந்தியா விசித்திரமான தேசமாம்.

''எனக்குத் தைரியம் சிறிது வந்துவிட்டது. அந்தத் துரைமார்களைச் சுட்டிக்காட்டி 'அவர்கள் யார்,' என்றேன்.

அவள் கள்ளங்கபடற்றவள். பெஞ்சியின் மேல் படுத்திருப்பவனைச் சுட்டிக்காட்டி ''தட்சாப் ஈஸ்டிமடோபர். இருப்பது காலிபோர்னியா, என்னைக் கலியாணம் செய்து கொள்கிருனும். பத்துக்கோடிக்கு அதிகாரி. கீழே படுத்திருப்பவன் 'கிரிஸ்ட்பர் கொலம்பஸ் ப்ளாடோ. இவன் கூட என்னைக் கலியாணம் பண்ணிகிருனும். இவனிடம்கூடப் பத்துகோடி டாலர்கள் இருக்கின்றன'' என்ருள்.

''கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்தானல்லவா?'' என்று ஆவலாய்க் கேட்டேன்.

''அவன் வேறு, இவர்கள் அமெரிக்காவிலேயே இருக்கிருர்கள். ஒன்றையும் கண்டு பிடிக்க முடியவில்லை, அந்த நாடு பலஹீனமடைந்து விட்டது. மிதிலேடட் ஸ்பிரிட், அதை விட்டால் ஒன்றும் கிடைப்பதில்லை, அதற்காகவே இவர்கள் தங்கள் நாட்டை

விட்டு நிவால்ஸ் சரக்குகளுக்காக உலகம் முழுவதும் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள்'' என்றாள்.

''இவர்கள் பெரியஸ்பிரிசியலிஸ்டுகளாய்த் தென்படுகிறார்களே!'' ''வெரி!'' என்றாள்.

இதற்குள் ஆஜானுபாகுப் பேர்வழி கண்களைத் திறந்து கோபமாய் என்னைப் பார்த்து விரல்களை மடக்கிக் குத்தவருபவன் போல் ''யு கெடவுட் க்விக்'' என்றான். குட்டையன் கால்களையும் கைகளையும் கீழே அடிக்கத் தொடங்கினான்.

நான் என் கைத்தடியை இறுகப் பிடித்துக் கொண்டு கீழே டக் டக்கென்று அடிக்கத் தொடங்கினேன், துரைசானி படுக்கையிலிருந்த தன் ஸ்லிப்பர்களை எடுத்து மேலே படுத்திருப்பவன் கன்னங்களில் இரண்டு கொடுத்து அன்புடன் ''யூ பொக், யூ பொக்'' என்றாள். குட்டையனை ஒரு உதை விட்டு ''யூ பிக், யூ பிக்'' என்றாள் இருவரும் அப்பொழுதே வாயைத் திறந்து தூங்கத் தலைப்பட்டனர் துரைசானி அவர்களிருவரின் மார்பின் மேலும் ஒவ்வொரு ஸ்லிப்பரை வைத்து, தன் இடத்தில் அமர்ந்து ''இனி பயமில்லை பாபு'' என்றாள்,

நம்பிக்கை ஏது? அரேபியன் நைட்ஸில் படித்திருக்கிறேன். ஒரு ராக்ஷதன் ராஜகுமாரியைப் பெட்டியில் வைத்து, தலையில் சுமந்து திரிவான். ராக்ஷதன் படுத்தால் ராஜகுமாரி அவன் மார்பின்மேல் ஒரு கூழாங்கல்லை வைத்து உலகில் உள்ள அரசகுமாரர் அனைவரின் மோதிரங்களைத் திரட்டுவது......இது எனக்கும் வந்துவிட்டதென்று நினைத்தேன். இந்தத் துரைசானி ஒருவனுக்குப் பதில் இரண்டு ராக்ஷதர்கள் மேல் அல்லவா உலாவுகிறாள். இனி கழற்றலாம் தன் தொண்ணூற்றொன்பது மோதிர மாலையை.

நான் பயப்பட்டது நடந்தே விட்டது. என் கையில் பஞ்சலோக மோதிர மிருக்கிறது அவள் அதன் பக்கம்பார்த்து ''ஹௌ லௌலீ! மோதிரத்தைக் கொஞ்சம் காண்பிக்கிறீர்களா?'' என்று கேட்டே விட்டாள்.

நான் நடுங்கிய படியே கைகளை நீட்டினேன். விரலில் ஆபரேஷன் செய்து கொள்பவன் போல் எனக்குப் பயமாயிருந்தது. அவள் உடனே மோதிரத்தைக் கழற்றித் தன் விரலில் போட்டுக்கொண்டு ''ப்யூட்டிபுல்'' என்றாள்,

''சிவ, சிவ, இது நான் சந்தியா வந்தனம் பண்ணும் மோதிரம், கிறிஸ்துவச்சி அதை அபவித்திரம் செய்து விட்டாள். என் கண்களில் நீர் நிறைந்தது. ''மேம்சாப்; தங்களிடம் இன்னும் எத்தனை மோதிரங்கள். நைண்டினைன்னு?'' என்றேன் குரல் தழு தழுக்க.

அவள் பெஞ்சியின் கீழிருந்த டிரங்கைத் திறந்து, அதிலிருந்து விசித்திர வேலைப் பாடுள்ள பெட்டியை எடுத்து எனக்குக் காண்பித்தாள். அதைத் திறந்தேன், என் கண்கள் கூசின. அதில் ஒரு நெக்லேஸ் இருந்தது. மற்றொன்றில் ஈயர் ரிங்க்ஸாம். வேறொன்றில் இன்னொரு மாதிரி, சுமார் முப்பது மோதிரங்களுக்கு மேலிருக்கும். அந்த மோதிரங்களிருந்த ட்ரேயை என் எதிரில் வைத்து ''உங்களுக்கிஷ்டமானது ஒன்றை எடுத்துக்கொள்ளுங்கள் பாபு!'' என்றாள்.

''எதற்கு? என் மோதிரம் இன்றைக்கெல்லாமிருந்தால் ஒன்னேகால் ரூபாய் பெறாது. இதை உங்களுக்கு பிரஸண்ட் பண்ணறேன். பத்திரமாய் வைத்துக் கொள்ளுங்கள், வெரி ஹோலி ரிங்க்'' என்றேன்.

''யூ ஓல்ட் டியர். நான் உங்கள் பிரஸண்டை வாங்கிக்கொண்டபோது என் பிரஸண்டைத் திருப்பக்கூடாது'' என்று அவள் ரத்தினங்களிழைத்த மோதிரமொன்றை என் விரலில் அணிவித்தாள்.

''தேங்க்யூ மேடம். நான் உன் தாசன். பர்கெட்மீ நாட்'' என்றேன்-

* * *

வண்டி இடாவா வந்து நின்றது கெல்ஸன் கம்பெனி பையன் ஒருவன் வந்து, ''டீ, ரொட்டி, வெண்ணெய், எடுத்து வந்து, ''டீ ஹாஜர்'' என்றான். அவள் ட்ரேயை வாங்கிக்கொண்டாள். பிறகு என் கைத் தடியை எடுத்து துரைகளை எழுப்பினாள். ''கெடப் டிமீ! கெடப் ப்ளாடோ'' அவர்கள் காட்டுப் பன்றிகள் போல் குறட்டை விட்டுக்கொண்டு ஏதோ முணுமுணுத்தார்கள். எனக்கொன்றும் புரியவில்லை. அவர்கள் எழுந்து உட்காரும் நிலைக்கு வரவில்லை என்று மாத்திரம் அறிந்தேன்.

''சட்டர்ஜி! நீங்கள் டீ சாப்பிடுகிறீர்களா? குடிக்கக்கூடாதென்ற கட்டுப்பாடில்லையே?'' என்று கேட்டாள்.

தர்ம சங்கடமான நிலையில் சிக்குண்டு விழித்தேன். கிருஸ்துவச்சி கையால் தொட்ட டீ, ஆனால் நல்ல மணம் வீசு

ஏ. ஆர். சகுந்தலா தனது மேனியை லக்ஸ் டாய்லட் சோப்பினுல் அழகாகவும், அப்பழுக்கற்றதாகவும் வைத்துக்கொள்கிருர் . . .



எழில்மிக்க, திறமைவாய்ந்த இந் நட்சத்திரம் தனது சருமத்திற்கு தவருமல் அழகு படுத்திக்கொள்ளும் முறை ஒன்றை கையாள்வதன் முக்கியத்தை நன்கு அறிந்திருக்கிருர். அவர் எப்பொழுதும், தனது அழகிய மழமழப்பான மேனிக்கு லக்ஸ் டாய்லட் சோப்பின் இனிய பாதுகாப்பை அளிக்கிருர். தனது மேனியை மாசு மருவற்றதாக வைத்துக்கொள்ள, தனக்குத்தெரிந்த முதல் தரமான வழி இதுவே என்று சொல்கிருர். நீங்களும் ஏன் அதை கையாளக்கூடாது? இந்த சுத்தமான வெண்ணிறம்கொண்ட சோப்பின் மிருதுவான நறுமணங்கமழும் நுரையை நீங்கள் விரும்புவீர்கள்.

முபரக் பிக்சர்ஸாரின் ''பில்ஹணு'' என்ற சரித்திர சம்பந்தமான படத்தில் ஏ. ஆர். சகுந்தலா தோன்றுகிருர் இப்படத்தில் அவரது நடிப்பு மிக உயரிய ரகத்தைச் சேர்ந்ததாகும்.

லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களுக்கு அழகுதரும் சோப்

LTS. 104-23-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

கிறது. குளிரும் அதிகமாயிருக்கிறது' சாஸ்திரத்தில் டீ குடிக்கக் கூடாதென்று எங்கும் சொல்லப்படவில்லை. அதிலும் ரெயிலைப்போன்ற நகரக்கூடாத இடத்திலமர்ந்து குளிருக்காக டீ சாப்பிடுவதால் கொஞ்சம்கூட தோஷமில்லை.

''மேடம் உங்கள் கையால் நீங்கள் 'டீ' கொடுக்கும்போது ஏன் குடிக்கமாட்டேன். ரொட்டி வேண்டாம்'' என்றேன்.

டீயினால் மனோ வாயில் திறந்துகொள்கிறது. குடித்துக்கொண்டேயிருந்தால் வெகு விஷயங்கள் வாயில் வந்துவிடுகின்றன. அசுவத்தாமன் பால் இல்லாததால் அரிசித் தண்ணைக் குடித்து அந்த ஆனந்தத்தில் விளையாடுபவனும். அப்படியே நம் ஏழை ஜனங்கள்கூட 'டீ, காப்பி, குடித்து மேல் நாட்டாரைப்போல் மகிழ்கிறார்கள்.

ஒருவிஷயம் உனக்குத் தெரியுமா? பங்கிம்சந்திரர் 'டீ' வழக்கமாய்ப் பருகினதில்லையாம். ஜலதோஷம் பிடித்தால் பஞ்சளும், உப்பும், போட்டுக் குடிப்பாராம். அதனால்தான் அன்று அவர் ஒருவர் அம்மாதிரி எழுத முடிந்தது. அன்று 'டீ'யின் பிரபாவத்தால் எண்ணங்களின் பிரவாகம் வந்துவிட்டது. வீட்டிற்கு வீடு 'டீ' வீட்டிற்குவீடு காதல். அக்காலத்துக் கவிஞர்கள் மிகவும் கஷ்டப்பட்டு, சந்திரனே! தென்றலே! இன்பமே! மயிலே! குயிலே! வசந்தமே! இப்படி நூற்றிற்கோ ஆயிரத்திற்கோ ஒருவர் தோன்றுவார்.

இப்பொழுதோ இரண்டு கப், இரண்டு சாஸர். ஒரு மேஜை, ஒரு மேஜை விரிப்பு, கிழிந்திருந்தாலும் தோஷமில்லை. ஒரு வாலிபன், ஒரு மங்கை, இருவரின் நடுவில் புகை கிளம்பும் 'டீ கெட்டில்'......அதிருஷ்டவசமாய் அறுபதாண்டுகள் கடந்துவிட்டன. தப்பித்துக்கொண்டேன்.

''தொரசானியம்மா! அந்த தொரைகளிருவரும் உங்களைக் கலியாணம் செய்துகொள்கிறேனென்கிறார்களல்லவா? இவர்களில் எந்த அதிருஷ்டவானை விரும்புகிறாய்?'' என்று கேட்டேன்.

''இது ஒரு பிரச்னைதான். நானிதுவரை ஒன்றும் நிச்சயித்துக் கொள்ளவில்லை. 'டிமீ' யோக்கியன் என்று கொஞ்சம் நினைக்கிறேன். நல்ல வலிவுள்ளவன். உயரமாய் அழகாயும் இருக்கிறான். அதைத்தவிர என்னைக் காதலிக்கிறான் கூட. ஆனால் பிராந்தி சாப்பிட்டதும் மூளை கலங்கிவிடுகிறது.

இந்த ப்ளாடோ இருக்கானே குட்டையன். பருமனாய் கும்மட்டிகாய் போல் வயதும் அதிகமாகிவிட்டது. என் சொல்லை மீறமாட்டான். இளகியமனது. கொஞ்சம் குடித்ததும் வாய்விட்டு ''ஓ'' என்று அழுகிறான். பித்த உடம்பு. வெகு நெருக்கடியிலிருக்கிறேன். இருவரும் ஓரேமாதிரிதான். என்னை எவனும் விடுவதாய்க் காணோம். இன்னும் அதிக அவகாசமிருக்கிறது. ஹௌரா போவதற்குள் முடிவிற்கு வந்துவிடுவேன். ஆனால் சட்டர்ஜிசார்! நீங்கள்தான் சொல்லுங்களேன். இவர்களில் யாரை செய்து கொண்டால் நல்லது'' என்று கேட்டாள் அவள்.

''நீங்கள் சொல்வதைப்போல் இருவரும் நல்லவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் வீழ்ந்துகிடப்பதைப் பார்த்தால்... ......'' என்னும்போதே,

''அதனால் ஒன்றுமில்லை, கொஞ்சநேரத்தில் உணர்வு பெற்றுவிடுவார்கள்'' என்றாள்.

''உங்களுக்குப் பக்ஷபாதமில்லாவிடில் உங்கள் பெற்றோர்கள்மேல் ஏன் இந்தப் பொறுப்பை விட்டுவைக்கக்கூடாது'' என்று கேட்டேன்.

''எனக்கு ஒருவருமில்லை சட்டர்ஜி; எனக்கு நானே பெரியவள். உங்கள்மேல் இந்தப் பொறுப்பை ஒப்படைக்கிறேன். இருவரையும் பரீக்ஷித்து மொகல்சராயில் வண்டி நிற்பதற்குமுன் உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லிவிடுங்கள். ஒரு ரூபாயை உயரப்போட்டு பிடித்து, பூவா? தலையா? பார்த்து முடிவுகட்ட நிச்சயித்தேன். நீங்களிருக்கும்போது அந்தக் கஷ்டம்கூடயில்லை'' என்றாள் துரைசானி.

''நல்ல எற்பாடுதான். எங்கள் சுற்றத்தார்கள் பலபேர்களுக்கு வரன் பேசி முடித்து வைத்திருக்கிறேன். ஆனால் இம்மாதிரி அற்புத வரன்கள் எனக்கெப்பொழுதும் கிடைக்கவில்லை. இருவரும் கோடீசுவரர்கள். இருவரும் குடிவெறியர்கள். ஒருவன் உயரத்தில் எடை அதிகமாகிவிட்டால் ஒருவன் பருமனில் எடை அதிகமாகிவிடுவான். கல்வி கேள்விகளைப்பற்றி ஆராயலாமென்றாலோ இருவரும் குரட்டைவிடுவதில் ஒருவருக்கு ஒருவர் குறைந்தவர்களல்ல. எப்படியோ தொலையட்டும். அவளுக்கே இருவரும் ஒன்றாய்த் தோன்றும்போது. நாம் யாரைச் சொன்னாலென்ன? எவன் பெயரையாவது சொல்லித் தொலைப்போம். அவள் நான் சொல்வதைக் கேட்கிறாளென்று தெரிந்தால்

"அம்மா! லக்ஷ்மி. உன் கூந்தலை இப்பொழுதே கத்திரித்துப் பாழ் செய்துகொண்டாய். மீந்திருப்பதையும் கத்திரித்துத் தொலைத்துவிடு. இவரிருவரையும் துடைப்பத்தால் அடித்து நரகத்திற்கு அனுப்பு" என்றேன்.

பேசிக்கொண்டே ஒன்பதரை ஆகிவிட்டது. வண்டி ஒரு சிறிய ஸ்டேஷனில் நின்றது. அப்பொழுது கவனிக்கவில்லை. 'டீ' சாப்பிட்டபின் பார்த்தால் அவள் உதடு வெளிறி இருந்தது. இது உண்மை நிறமல்ல என்று தெரிந்துகொண்டேன். அவள் ஒரு தங்க டப்பியிலிருந்து சிவப்புக் குச்சியைப் போன்ற மெழுகு ஒன்றை எடுத்து உதட்டில் தேய்த்துக்கொண்டாள். மூக்கின்மேல் கொஞ்சம் பௌடர் பூசிக்கொண்டு முகத்தை மராமத்துச் செய்துகொண்டாள். "சட்டர்ஜி! நான் 'ப்ரேக்பாஸ்ட்' செய்யப்போகிறேன்' 'டிமி' 'பிளாடோ' இங்கே இருப்பார்கள். அவர்களைக் கவனித்துக்கொள்ளுங்கள். அவர்கள் சண்டை போட்டுக் கொள்ளப் போகிறார்கள். உங்களால் சமாதானப்படுத்த முடியாவிட்டால் சங்கிலியைப் பிடித்திழுத்துவிடுங்கள்" என்று சொன்னாள்.

"ஒன்றரை மணிநேரத்திற்குப் பின்தான் கான்பூரில் வண்டி நிற்கும். அதுவரை நான் சாகவேண்டியதுதான். கைத்தடியை சரியாய்ப் பிடித்துக்கொண்டு குலதெய்வத்தை வேண்டிக்கொண்டேன். உயரமானவன் எழுந்து உட்கார்ந்தான். கொட்டாவி விட்டபடியே கண்களைக் கசக்கிக்கொண்டான். விரல்களைச் சொடுக்கிக்கொண்டு என்னை ஒரு முறை பார்த்தான். தடமாடியபடியே எழுந்து பாத்ரூமுக்குள் சென்றான்.

இதற்குள் குட்டையன் எழுந்து தவளைபோல் குதித்து என்னருகிலமர்ந்தான். நான் பயத்துடன் கத்த நினைத்தபோதே என் கையைப் பிடித்துக் குலுக்கி 'குட்மார்னிங் சார்! கிறிஸ்ட்பர் கொலம்பஸ் ப்ளாடோ நான்தான்" என்றான்.

எனக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. "சலாம் ஹுஜூர்" என்றேன். "என்னிடம் பத்துக்கோடி டாலர்களிருக்கின்றன. ஒரு நிமிஷத்திற்கு என் ஆதாயம்......"

"தாங்கள் உலகத்திற்கே பிரபு. நானறிவேன்."

பிளாடோ என் மார்பில் அவன் விரல்களைப் பதித்து "லுக்ஹியர் பாபூ! உனக்கு ஐந்து ரூபாய் பிரஸண்ட் பண்றேன்."

"எதற்கு ஐயா?"

"மிஸ். ஜில்டரை நீங்கள் சரிப்படுத்த வேண்டும். நீங்கள் இருவரும் பேசியதை நான் கேட்டேன். உங்கள்மேல்தான் அவள் ஆதரப்பட்டிருக்கிறாள், நீங்கள் பெண் பக்கம் சேர்ந்தவர். இந்த டிம்டீடோபர் மிகவும் கெட்டவன். அவன் சொத்து முழுவதும் என்னிடம் அடமானம் வைத்திருக்கிறான். மிடாக்குடியன், பாபர், அவனை மணந்துகொண்டால் பாவம் மிஸ். ஜில்டர் அழுது அழுது சாகவேண்டும்." என்று சொல்லி, ப்ளாடோ தேம்பித் தேம்பி அழுதான். ஒரு பாட்டிலில் கொஞ்சம் பிராந்தி மீந்திருந்தது. அதை வாயில் ஊற்றிக்கொண்டு "பாபு! நீங்கள் மற்றோர் பிறவி என்பதை நம்புகிறீர்களா?" என்று கேட்டான்.

"தவறாமல்" என்றேன். அதே சமயம் பாத்ரூம் கதவு திறந்துகொண்டது. ப்ளாடோ எனக்கு ஐந்து விரல்களைக் காட்டியபடியே தன்னிடத்தில் படுத்துக் கொண்டு குறட்டைவிடத் தொடங்கினான்.

டீமீ வந்து தன்னிடத்தில் காலை நீட்டிக்கொண்டு உட்கார்ந்தான். ப்ளாடோ தூங்கி எழுந்திருப்பவன் போல் கொட்டாவி விட்டுக்கொண்டே எழுந்து என்னைப் பரிதாபமாய்ப் பார்த்து, பாத்ரூமுக்குள் நுழைந்தான்.

இப்பொழுது டிமீயின் முறை. ப்ளாடோ சென்றதும், அவன் வந்து என்கையைப் பிடித்துக் கொண்டான். நானே "குட்மார்னிங்" என்று விட்டேன்.

அவன் என் விரல்களை நன்றாய் நசுக்கிவிட்டான்.

"அப்பா!" என்றேன்.

"உன் எலும்புகளை மாவாக்கி விடுவேன்" என்றான் டிமீ.

"எஸ் சார்!" என்றேன் பயந்துகொண்டே.

"மிஸ்ஜோன் ஜில்டரை நான்தான் கலியாணம செய்து கொள்வேன். என் பெயரைச்சொல்லாவிடில் உன்னை உயிருடன் விடமாட்டேன், உன் உயிரின்மேல் அன்பை விட்டுவிடு" என்றான்.

"எஸ் சார்"

"என்னிடம் அளவற்ற பணம் கிடக்கிறது; ஐந்து ஹோட்டல்கள், பத்துக் கப்பல் கம்பெனிகள், இருபத்தைந்து ஆலைகள். ப்ளாடோ விடம் என்ன இருக்கிறது? ஒரு பிராண்டி பாட்டில். அதுவும் திருட்டுப் பொருள். அது கூட என்னுடையது தான். பைத்தியக்காரன், குடிகாரன். குட்டை பாஸ்கரன்..."

ப்ளாடோ எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தான் போல் தோன்றுகிறது. கதவைத் திறந்துகொண்டு வெளியில் இறங்கி 'டிமி'யைக் குத்திவிடுபவன் போல் கையைக்காட்டி ''யாருடா அதிருஷ்ட மற்றவன்? குடிகாரன்?' என்று கூவினான்.

நம் ஹிந்தியில் வைதால் நன்றாயிருக்கிற தென்று நினைக்கிறோம். வசவு புராணத் திற்கு மாத்திரம் மேல் நாட்டு பாஷைதான் உகந்தது. அதிலும் அமெரிக்கன் பாஷை, அந்தப் பாஷையிலிருக்கும் விறு விறுப்பு, தோரணை, அனுகுண்டுதான், காது வழி யாய் நுழைந்து மனதைத் தீய்த்துவிடுகிறது. எனக்கு ஆங்கிலம் வராததால் அவன் வைதது விளங்காவிட்டாலும், தொனியின் வேகம் விளங்கிவிட்டது.

ஒரு விஷயத்தில் துரைகள் நம்மைவிடப் பலஹீனம் படைத்தவர்கள். வாக்குவாதம் அதிகநேரம் செய்யமாட்டார்கள். இரண்டு நிமிஷங்களுக்குள் அவர்கள் கைகலந்தனர். வெறிக்கப் பார்த்துக் கொண்டேயிருந் தேன். வண்டி கான்பூரில் வந்து நின்றது. நான் அதை அறியவில்லை. அவள் வந்து விட்டாள் 'டக் டக்'கென்று. இந்தச் சண் டையைத் தீர்க்க அவளாலும் முடியாது.

''டிமீ, டியர்டோண்ட்! ப்ளாடோ, டார் லிங் டோண்ட்'' என்றாள். லாபம் ஒன்று மில்லை. விவகாரம் முத்திவிட்டதைக் கண்டு நான் வண்டியை விட்டு இறங்கி ஓடினேன்.

முதல் இரண்டு வகுப்புகள் காலியா யிருந்தன. டைனிங்ஹாலில் அமர்ந்து எல் லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். யாருக்குச் சொல்வது? யாரோ ஒரு வெள்ளை யன் 'பிளானல் சூட்' போட்டுக் கொண்டு பிளாட்பாரம் மீது உலாவிக் கொண்டிருந் தான். நான் அலறிப் புடைத்துக் கொண்டு அங்கு ஓடினேன்,

''கம் சார்; லேடி ஈஸ் டேஞ்சர்?'' என் றதும் அவன் 'ஷீக்' அடித்துக் கொண்டே என்பின் ஓடி வந்தான். நாங்கள் போகும் வரை துரைசானி என்கோலால் அவர்களைப் பக்ஷபாதமில்லாமல் அடித்துக் கொண்டிருந் தாள். என்னுடன் வந்த துரை ''ஹல்லோ! ஜான்! என்ன விஷயம்?'' என்றான். அவள் எல்லாவற்றையும் சொன்னாள். அவன் டிமீயை, ப்ளாடோவை சமாதானப் படுத்த முயன்றான். ஆனால் அவர்கள் இவன் மேல் பாய்ந்தனர். புதியவனும் அவர்களுடன் கைகலந்தான். நான்கு குத்து விட்டான். இருவரும் மின் மினிப்பூச்சி கள்போல் வீழ்ந்தனர். டிமீயின் தலை கதவில் மோதுண்டு அவன் அங்கேயே சாய்ந்தான். ப்ளாடோ நிலைமை இன்னும் மோசமாகிவிட்டது. சாணி மொத்தையைப் போல் வீழ்ந்து கிடந்தான். சண்டை முடிந்து விட்டது.

* * *

சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டபின் அவள் புதியவனை எனக்கு அறிமுகம் செய்து வைத்தாள். இவர் புகழ் பெற்ற 'பில் பௌண்டர்' பாக்ஸிங்கில் நல்ல நிபுணர் 'என்று'. இவர்தான் மிஸ்டர் சட்டர்ஜி. ''வெரி டியர் ஓல்ட் பிரெண்ட்'' என்றாள் அவனிடம்.

அவன் என் முகத்தைப் பார்த்து ''ஸம் பியர்ட்'' என்றான்.

அவள் ''தாடியிருந்தாலென்ன? பெரிய மனிதன்'' என்றாள்.

அவன் என் கைகளை நன்றாய்க் குலுக்கி ''ஹா......டு...டு...? குளிர் அதிகமாயிருக் கிறதல்லவா?'' என்றான்.

என் மனதில் சட்டென்று ஒரு எண்ணம் தோன்றியது. அவளிடம் மெள்ள ''மிஸ் ஜான்! நீ இம்மாதிரி சங்கடத்திற்கு ஆளாவானேன்? டிமீ, ப்ளாடோ இருவரும் இப்பொழுது அடிமையாகிவிட்டார்கள். நீ ஏன் 'பில்லை மணந்துகொள்ளக்கூடாது? நல்லவனாக......''

'ரைட்டோ! இதுவரை நான் அதை மறந்தேபோய்விட்டேன். பில்! என்னைக் கலியாணம் செய்துகொள்கிறாயா?''

''உன்னைச் செய்துகொள்ள மாட்டே னென்று சொல்பவர்களும் உண்டா?''

''சிவ, சிவா! வெள்ளைக்கார ஜாதியே வெட்கமில்லாத ஜாதி. இருங்கோ சார்! பெண் பக்கம் பேச நான் இருக்கும்போது என்ன அவசரம்? நான் ப்ரைட் மாஸ்டர், உன் குல கோத்திரமறியாமல் நான் அனுமதி அளிக்கமாட்டேன்'', என்றேன்.

பில் சொன்னான். ''என் பாட்டன் செருப்புத் தைப்பவர். என் தந்தைகூடச் சிறிய வயதில் செருப்புத் தைத்தார்.''

'இதனால் உன் குலம் (ஜாதி) குறைந் ததல்ல. உன் வருமானம் எவ்வளவு?'

'பில்' கொஞ்சநேரம் கணக்குப்போட்டுச் சொல்லத் தொடங்கினான். ''நிமிஷத் திற்குப் பத்தாயிரம். மணிக்கு ஆறு லக்ஷம். ஆனால் பயப்படவேண்டியதொன் றுமில்லை, என் சிறிய தாயார் இறந்த பின் இது இன்னும் அதிகமாகும். அவ ளுக்கு இருபது உப்பளங்கள், ஐந்து பெரிய ஏரிக் கரைகள் இருக்கின்றன. அதில் கணக்கற்ற மீன்கள் இருக்கின்றன.''

''போதும், இன்னும் சொல்லவேண்டாம். எனக்குச் சம்மதம். கொஞ்சம் என்

அருகில் வா? ஆசி கூறுகிறேன். ரியல் ஹிந்து ஸ்டைல்''

ஆனால் அக்ஷதையும் தப்பையும் எங்கிருக்கிறது? ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்து ''ஏ கூலீ! கொஞ்சம் புல்லைப் பிடுங்கிக்கொண்டு வாடா! பணம் கிடைக்கும்'' என்று கத்தினேன்.

''இங்கிலீஷில் ஆசிச் செய்தி கூற எனக்கு வராது. உங்களுக்குச் சம்மதமானால் எங்கள் பாஷையில் கூறுகிறேன்'' என்றேன்.

''அப்படியே செய்யுங்கள்'' என்றார்களிவரும்.

துரையின் தலைமேல் ஒருபிடி புல்லை வைத்து ''சிரஞ்சீவியாயிரு. பணமோ வேண்டியதிருக்கிறது. பிள்ளைகள்கூடப் பிறப்பார்கள். லக்ஷ்மியை உன்னிடம் ஒப்படைக்கிறேன். பத்திரம்டா அப்பா! அதிகமாய்க் குடிக்காதே, பிரம்ம சாபம் பலிக்கும்''.

அவன் மற்றொருமுறை என் கையைப் பிடித்துக் குலுக்கினான். நரம்புகளெல்லாம் துடித்தன. அவளுக்கு ஆசி கூறினேன்.

''அம்மா! லக்ஷ்மீ! உன் உதட்டில் உள்ள குங்குமம் அக்ஷயமாய் இருக்கட்டும். வீர சந்தானங்களைப் பெறவேண்டிய அவசியமேயில்லை. அந்த ஆசி எங்கள் அபலைப் பெண்களுக்கே இருக்கட்டும். நீ இனிமேல் ஏழை இந்தியர்களின் துக்கத்திற்குக் காரணமாகவேண்டாம். அவசர புத்தியும், துஷ்டத்தனமுமில்லாத பிள்ளைகளைப் பெற்றுக் குடித்தனத்தைப் பாங்காய் நடத்திக்கொள்!'' என்னும்போதே அவள் சடாரென்று ஐந்து நாட்களாகத் 'ஷேவ்' பண்ணிக்காத என் முகத்தைத் தூக்கி, என் தாடையில், ''தூ! தூ!'' என்றாள்.

விநோதன்,

''சட்டர்ஜி' மிளகாய்ப் பழம்ருசி...—எப்படியிருக்கிறது?''

''அதில் காரம் ஒன்றுமில்லை. அவர்கள் வழக்கமே அப்படி. யாருக்காவது கௌரவ மரியாதைகள் காட்டவேண்டுமென்றால் அப்படித்தான் செய்வார்கள். இதில் வெட்கமென்ன? பிறகு பார்க்கிறேன். குட்டையனும், நெட்டையனும் முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு இறங்கிப் போய்க்கொண்டிருந்தனர். அவர்கள் சாமான்களைக் கூலிகள் இறக்கிக் கொண்டிருந்தனர். வண்டி அசைந்தது. பில்லும், ஜோனும் கைகளைக் கோத்துக்கொண்டு நாட்டியமாடத் தொடங்கினர்.

''சட்டர்ஜி! இம்மாதிரி ஆனந்த நாளில் இப்படி உட்கார்ந்திருப்பது எனக்கு நன்றாயில்லை. நீங்களும் எங்களுடன் டான்ஸ் ஆடுங்கள்'' என்றாள் ஜோன்.

''தாயே! லக்ஷ்மி! என் முழங்கால் வாத நோயால் இழுத்துக் கொண்டிருக்கிறது. குதிக்கக்கூடாதென்று டாக்டரின் உத்தரவென்றேன்.''

''ஆனால் பாடுங்கள். நாங்கள் 'ஆடுகிறோம்'' என்றாள்.

''என்னசெய்வது? கிறிஸ்துவர்கள் கையில் சிக்குண்டேன். தப்பமுடியுமா? க்ஷேத்திரஞர்பதம், மூவ்வ கோபாலபதம், இவைகளைப் பாடினேன். மொகல்சராய் வந்துவிட்டது. கல்கத்தா சென்றதும் அவர்கள் மணம் முடித்துக்கொள்வதாகவும், மூன்று நாட்களுக்குப் பின் கிராண்ட் ஹோட்டலில் என்னைச் சந்திக்கும்படியும் மிகமிக வேண்டிக்கொண்டாள். ஷேக் ஹேண்ட்ஸ், சலாம் எல்லாம் ரொம்ப ரொம்ப செய்தாள்.

பிறகு நான் காசிபோகும் பெட்டியில் ஏறினேன். இரண்டாம் நாள் கல்கத்தா புறப்பட்டேன்.

* * *

''என்ன சட்டர்ஜி சாமிகளே! உங்க வீட்டுக்காரிக்கு இந்த விஷயங்களெல்லாம் தெரியுமா தெரியாதா?'' என்று கேட்டான் விநோதன்.

''ஏன் தெரியாமல்? முதலில் அவள் பதிவிரதை. இரண்டாவது அவள் வகிடுகூட நரைத்துவிட்டது. இந்தக் காலத்துப் பெண்கள்போல் அறிவற்றவள் அல்ல, ஆம், ஊம், என்பதற்குமுன் முகத்தைத் தூக்கிக்கொண்டு உட்காருவதற்கு. வீட்டுக்கு வந்ததும் எல்லா விஷயங்களையும் சொன்னேன்.

''கேட்டு என்ன செய்தாள்?''

உடனே அம்பட்டனை வரவழைத்து ''ஏய், அய்யர் முகத்தை நன்றாய்ச் சிரைத்துவிடடா! கிறிஸ்துவச்சி தொட்டுவிட்டாள்'' என் விரலிலிருந்த ரத்தின மோதிரத்தை எடுத்து கங்கை ஜலத்தில் அலம்பித் தன் கையில் போட்டுக்கொண்டாள்.

''கலியாண கேக் எப்படியிருந்தது?''

''அடே! இன்னும் அந்த இழவை ஏன் இளப்புகிறாய்? கிராண்ட் ஹோட்டலுக்குப் போய்க் கேட்டால் அங்கு யாருமில்லை என்று தெரிந்தது. இருந்தார்களாம். கலியாணம் ஆன மறுநாளே பாழும் முண்டை ஓடிவிட்டாளாம். துரை அவளைத் தேடப் போயிருக்கானும். பட்லர் சொன்னான்''.

[யதீன்சேன் எழுதிய கதையைத் தழுவியது]

ஏரி காத்த பெருமாள்

(கலாதாஸன்)

செங்கற்பட்டு ஜில்லாவில் மதுராந்தகம் என்ற ஒரு நகரமுண்டு. அது தென்னிந்திய ரயில் பாதையில் ஒரு ஸ்டேஷன். அங்கே "ஏரிகாத்த பெருமாள்" என்ற மூர்த்தியுடைய ஆலயமிருக்கிறது. அது ஸ்ரீராம க்ஷேத்திரம். அதற்கு இந்தப் பெயர் ஆதிமுதலிலிருந்ததில்லை. சுமார் 60, 70 ஆண்டுகளுக்குமுன் நடந்த ஒரு ஸம்பவத்தால்தான் இந்தப் பெயர் அந்த மூர்த்திக்கேற்பட்டது. அந்த ஸம்பவம் பின் வருமாறு.

சுமார் 70 வருஷங்களுக்குமுன் செங்கற்பட்டு ஜில்லாவில் "லையனல் பிரைஸ்" (Lionel Price) என்று பெயருடைய ஒருவர் கலெக்டராயிருந்தார். மதுராந்தகத்தில் ஒரு பெரிய ஏரி இருந்தது. காலாகாலத்தில் மழை பெய்து அந்த ஏரியில் ஜலம் நிறையும். அந்த ஜலத்தைக் கொண்டுதான் மழையில்லாக் காலங்களில் அந்தப் பிரதேசத்தில் எல்லாக் காரியங்களும் நடக்கும்.

நிலங்கள் பயிரிடுவதற்கும் இன்னும் மற்றுமுள்ள அவசியங்களுக்கும் அந்தத் தண்ணீர்தான் உபயோகப்படுத்தப்படும். சாதாரணமாக ஒரு குறைவுமில்லாமல் எல்லாக் காரியங்களும் நடந்தேறும். ஒரு சமயம் சரியான காலத்தில் மழை பெய்யாததால் அந்த ஏரியில் ஜலம் நிரம்பவில்லை. ஜனங்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டது; வயல்கள் காய்ந்தன; பயிர்கள் கருகின.

துர்ப்பிக்ஷமேற்பட்டது. அடுத்த மாரிக் காலத்தில் இதற்கு நேர் விபரீதமாகக் கணக்கு வழக்கில்லாமல் மழை பெய்து, எங்கும் ஜலப்பிரவாக மேற்பட்டு, ஏரியில் நீர் நிரம்பி ஏரி கரை உடைந்தது. அதன் பயனாக எங்கும் ஒரே பிரவாகமுண்டாகி, குடிசைகள், ஆடு மாடுகள், மரங்கள் செடிகள் எல்லாவற்றிற்கும் மிக்க சேதமேற்பட்டது. மழையில்லாததையாவது சகிக்கலாம்போலிருக்கிறதே, இந்தக் கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் நாமென்ன செய்வது என்று குடிகள் ஏங்கினார்கள். உயிர்ச்சேதமுமேற்பட்டது.

பாதி ஜனங்கள் மாண்டார்கள் நிலபுலங்கள் சகலமும் அழிந்தன. ஆடு மாடுகள் பெரும்பாலும் ஜலப்பிரவாகத்திலிழுத்துக் கொண்டு போகப்பட்டன. சில பெரிய வீடுகளைத் தவிர மற்ற வீடுகள், குடிசைகள் எல்லாம் மறைந்தன. மீதி யிருப்பவர்கள் உள்ளதைக் கொண்டு சரிப்படுத்தி, சில குடிசைகளையும் வீடுகளையும் கட்டினார்கள். மணலடித்திருந்த வயல்களைத் துப்புரவு செய்தார்கள். ஆனால் ஏரியோ உடைந்து போயிற்று, அதில் நீர் நிறைந்தால்தான் சாகுபடி செய்ய முடியும். எப்படியோ சிரமப்பட்டு உடைந்து போன ஏரி கரையை மறுபடியும் கட்ட ஏற்பாடு செய்து, ஒருவாறாகக் கட்டி முடித்தார்கள். ஆனால் அடுத்த மழைக் காலம் வந்தபோது அதிகமாய் மழை பெய்ய, அந்தக் கரையுடைந்து எங்கும் மறுபடியும் வெள்ளம் பெருகிற்று. புதிதாகக் கட்டின குடிசைகளில் சில சேதமாயின. திரும்பவும் கஷ்டம்தான் ஜனங்களுக்கு. இப்படி இரண்டு மூன்று தடவை அந்த ஏரி கரையைக் கட்டவும் மறுபடியும் அது மழையில் உடைந்து போகவும் ஏற்பட்டதால் ஜனங்களதை நிறுத்தி விட்டார்கள். முன்னால் ரொம்ப ஸம்ருத்தியாயிருந்த அந்தப் பிரதேசம் கஷ்டத்திற்குள்ளாயிற்று. ஜனங்களும் அந்தக் கஷ்ட காலத்துக்குத் தக்கபடி எப்படியோ ஜீவனம் நடத்தி வந்தார்கள்.

அந்த ஏரிகரையில் ஒரு ஆலயமிருந்தது; ராம லக்ஷ்மண விக்ரஹங்கள் அங்கே பிரதிஷ்டிக்கப்பட்டிருந்தன. அந்த ஆலயம் ஒரு காலத்தில் மஹோன்னதசையிலிருந்து எல்லாராலும் போற்றப்பட்டுவந்தது. உற்சவங்கள் அந்தந்தக் காலங்களில் வெகு விமர்சையாக நடை

பெறும். அந்த விக்ரகங்கள் ரொம்பவும் லக்ஷணமடைந்தவைகள். அலங்காரம் செய்து பார்த்தால் நமது கண்களையே பறிக்கும். அந்த மூர்த்திகளுக்கு நிறைய ஆபரணங்களுண்டு. தினப்படிக்கும் உற்சவ சமயங்களிலும் கோயிலுக்கு வேண்டிய வழிபாடுகளை நடத்த நிறையச் சொத்துக்களுண்டு. ஆனால் நாட்டில் துர்ப்பிக்ஷம் ஏற்பட்டு, நில புலங்கள் உபயோக மில்லாமல் போகவே கோயிலுக்குச் செய்ய வேண்டிய வழிபாடுகள் குறைந்தன. கோயில் கட்டிடத்திற்கு அவ்வப்போது செய்ய வேண்டிய மராமத்து நடத்தக்கூட வழியில்லாமல் போயிற்று. நாலு பக்க முள்ள சுவர்களிடிய ஆரம்பித்தன. செடி கொடிகள் அங்கே படர்ந்தன. ஆனால் தினப்படி மூன்று வேளை பூஜை தவறாமல் நடக்கும். வெளியூர்களிலிருந்து யாராவது வந்து வழிபாடு நடத்தினால் அது நன்றாய் நடத்தப்படும். ஸ்ரீராம நவமி உற்சவத்தின்போது பந்தல் போட்டு ஜோடனைகள் செய்து அதை நன்றாக ஊரார் நடத்துவார்கள்.

இந்த ஸமயத்தில்தான் பிரைஸ் துரையவர்கள் செங்கற்பட்டுக்கு ஜில்லா கலெக்டராக வந்தார். இவர் மற்ற வெள்ளைக்காரர்கள்போல் கர்வம் பிடித்து இந்தியர்களை வெறுப்புடன் நடத்தாமல் எல்லாரிடமும் மரியாதையுடனும் அன்புடனும் நடந்துவந்தார். தாம் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவரானாலும் மற்ற மதங்களிடத்தில் துவேஷமில்லாதவர். ஈச்வரன் ஒரு மதத்திற்கோ ஒரு வகுப்பு மனிதர்களுக்கு மட்டுமோதான் உள்ளவர் என்ற மூட நம்பிக்கையைக் கடந்தவர். இந்தியர்களின் நோக்கத்தையும் பழக்கங்களையும் ஆராய்ந்தறிய வேண்டும் என்ற அவாக் கொண்டவர். அந்தக் காலத்தில் ஒரு சீமை துரை யென்றால் சாதாரணமா? பரம் பொருளை யடைந்தாலும் அடையலாம் துரையின் பேட்டி கிடைக்குமா? அதுவும் கறுப்பு நிறமுடைய ஒருவன் துரையின் பங்களாவில் கால் எடுத்து வைக்க முடியுமா?

துரை இருக்கட்டும், அவரது பொட்லர் (butler) படுத்துகிற பாட்டிற்கு எல்லையுமுண்டா? ஆனால் பிரைஸ் துரை அப்படி அல்ல. அவரைப் பங்களாவில் போய்ப் பார்ப்பது ஒரு சிரமமன்று. தினந்தோறும் சில நேரங்களில் யார் வேண்டுமென்றாலும் தம்மை வந்து பார்க்கலாம் என்று உத்தரவு கொடுத்திருந்தார். ஸ்வாமி வரம் கொடுத்தாலும் பூஜாரி வரம் கொடுக்க வேண்டாமா என்பது போல் பொட்லர் பூஜாரி சும்மா விடுவானா? தன் அந்தஸ்து குறையப் பொறுப்பானா? அவன் வாசலில் நின்றுகொண்டு ஆள்களை உள்ளே விடாமல் தடுத்து வந்தான். இது துரைக்குத் தெரியவரவே அவர் கோபம்கொண்டு அந்தப் பொட்லரை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டார். அது முதல் எந்தப் பொட்லரானாலும் சேவகனானாலும் வந்தவர்களிடத்தில் ரொம்ப மரியாதையாகத்தான் நடந்து கொள்வார்கள். துரையைப்பற்றின இத்தகைய சமாசாரங்கள் எங்கும் பரவின. ஜனங்கள் அவரைப் புகழ்ந்தார்கள்.

இந்தச் சமாசாரங்கள் மதுராந்தகத்துக்கும் எட்டியது. அங்கே சிலர் தமது குறைகளையும் கஷ்டங்களையும் கலெக்டர் துரையிடம் சொன்னால் ஒருவேளை அவர் ஏதாவது நலம் செய்யக்கூடுமென்று ஆலோசித்து, சில பிரமுகர்களை துரையைக் காணுவதற்காகச் செங்கற்பட்டிற்கு அனுப்பினார்கள். அவர்களுமங்கே சென்று துரையைக் கண்டு தங்கள் கஷ்ட நிஷ்டூரங்களை விஸ்தாரமாக எடுத்துரைத்தார்கள். அதைக் கேட்டு, துரையின் மனமிளகிற்று. தம்மாலாவது செய்வதாக வாக்களித்தார். ஸந்தோஷத்துடன் ஜனங்கள் திரும்பி வந்தார்கள். துரையும் அந்த ஜில்லா இஞ்சினீரிடம் இதைப்பற்றிக்கூறி வேண்டியதைச் செய்யும்படி கேட்டுக்கொண்டார். அடுத்த கோடைக்காலத்தில் ஏரிக்கு அணை கட்டுவதற்குவேண்டிய ஏற்பாடுகள் இஞ்சினீர் இலாகாவினால் செய்யப்பட்டன. அணையும் கட்டி முடிந்தது. ஜனங்கள் கொண்ட ஸந்தோஷத்திற்கு அளவே கிடையாது. முன்போல் அணைக்குப் பக்கத்தில் குடிசைகள் கட்டி ஆடுமாடுகளுடன் ஜனங்கள் வசிக்கத் தொடங்கினார்கள். நிலங்களைப் பயிர் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்துவந்தன.

மழைக் காலம் வந்தது. ஏரியில் கொஞ்சம் கொஞ்சமாக ஜலம் நிறைந்து கொண்டு வந்தது. மழை விடாமல் பல



ரெக்ஸோனுவினுல் சரும ஆரோக்கியமேற்படுகிறது ... சரும ஆரோக்கியமே அழகு

அழகான மேனியின் இரகசியம் சரும சுகமே. உங்கள் சருமம் ஆரோக்கிய முடையதாக இருக்காவிட்டால் அழகு ஏற்படாது. கேடில் எனும் மருந்து சேர்ந்ததும், விரைவில் நுரையைத் தருகின்றதுமான ரெக்ஸோனுவின் உதவியை பயன் படுத்திக்கொள்ளுங்கள். இந்த. ஆன்டி ஸெப்டிக்கும், குணமளித்துப் போஷிக்கும் தன்மையுடையதுமான தைலங்கள் சேர்ந்த விசேஷ மருந்தை, ரெக்ஸோனுவின் நுரை சருமத்தின் அடிப்பாகத்திற்கு கொண்டுசேர்த்து, மலினங்களை அகற்றி சுத்தம்செய்து சருமத்திற்கு சுகத்துடன் வனப்பையுமளிக்கிறது. மேனி அழகிற்கு சருமசுகமே அடிப்படை என்பதற்கும், ரெக்ஸோனுவின் மருந்து கலந்த நுரை சௌந்தர்ய மேற்பட உதவுகிறது என்பதற்கும் சந்தேகமே கிடையாது.

ஆடவருக்கு ரெக்ஸோனு: ரெக்ஸோனு பெண்களுக்காகமட்டும் வழங்கப்படும் சோப் பெனக் கருதாதீர்கள். அது ஆடவருக்கும் மிக அவசியமான சோப். ரெக்ஸோனுவிலிருக்கும் கேடில் ஆன்டிஸெப்டிக்கும், குணமளிக்கும் தன்மை வாய்ந்ததுமாதலால் சருமத்தைப் பாதுகாக்கிறது. சரும சுகத்தினுலேற்படும் செழித்த ஆரோக்கியம் ஆடவருக்கு தனிப்பெருமையைக் கொடுக்கும்.

குழந்தைகளுக்கு ரெக்ஸோனு: ரெக்ஸோனுவின் மிருதுவான நுரை குழந்தையின் இளம் சருமத்தைத் தேற்றுகிறது. கேடில் மருந்து சிறு அவையவங்களை எரிச்சல் அரிப்பு முதலானவைகளிலிருந்து காப்பாற்றுகிறது. குழந்தைகளுக்கு மிக உத்தமமான சோப்பே உகந்ததாகும்.

★ ரெக்ஸோனுவிலுள்ள கேடில் சுகமளித்துப் போஷிக்கும் தைலங்கள் சேர்ந்த விசேஷ மருந்து. அது சரும ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமானது.

RP. 30-23 TM

REXONA PROPRIETARY LIMITED

மாகக் கொட்டவே சீக்கிரத்தில் ஏரி நிறைந்தது. ஆனுல் மழையோ நிற்க வில்லே. அதோடு பக்கத்துப் பிரதே சத்துத் தண்ணீரும் இங்கு வந்து சேர, ஏரியின் அணை தாங்கமுடியாமல் படார் என்று இடியின் சப்தத்திற்கு மேல் சப் தம் செய்து கொண்டு உடைந்தது. அப் போது ஏற்பட்ட பிரவாகத்தின் வேகம் பயங்கரமாயிருந்தது. கட்டின குடிசை கள், குடிகள், ஆடுமாடுகள், மரங்கள் முதலியவை இருந்த இடம் தெரியாமல் வெள்ளத்தால் இழுத்துக்கொண்டு போகப்பட்டன. ஜனங்கள் மனமிடிந்து போனுர்கள். இஞ்சினீர் உத்தியோகஸ்தர் களும் வருந்தினுர்கள். பயனென்ன?

இந்தச் சமாசாரம் கலெக்டர் துரைக் குத் தெரிய வந்தது. மதுராந்தகத்திற்கு உடனே வந்து அங்குள்ள நிலேயைப் பார்த்தார். ஜனங்களுக் கேற்பட்ட கஷ்ட நஷ்டங்களேக் கண்டு மனமிளகி இதற்கு எப்படியாவது ஒரு ஏற்பாடு பண்ணவேணு மென்று தீர்மானித்தார். இஞ்சினீரிடம் இதைப்பற்றிக் கேட்ட போது அவர் "இந்த ஏரியின் அணையை ஸாதாரணமாகக் கட்டினுல் போதாது, அதற்குத் தனியாக பிரத்யேக முறைப் படி கட்டினுல்தான் பலமான மழையை யும் வெள்ளத்தின் தாக்குதலேயும் தாங்கி நிற்கும் பலமுண்டாகும். ஆனுல் அதற்கு வேண்டிய செலவு செய்ய எனக்குத் தொகையு மில்லே, அதிகாரமு மில்லே. சென்னே கவர்ண்மெண்டு உத்தரவு கிடைத்தால் என்னுலானதை நான் செய் கிறேன்" என்று சொன்னுர். உடனே பிரைஸ்துரை சென்னே சென்று கவர்ன ரைக் கண்டு விஷயத்தை எடுத்துச் சொல்லி மன்றுடி மேற்கூறியஏற்பாடுகள் செய்ய உத்தரவையும் பெற்றுக்கொண்டு வந்தார். இஞ்சினீருக்கும் இதைக் கேட்டு, சந்தோஷமும் உற்சாகமு மேற் பட்டன. கோடைக் காலத்தில் அணே கட்டுவதற்காகத் தக்க ஏற்பாடுகள் செய் யப்பட்டன. இஞ்சினீரும் தம் மேற் பார்வையிலேயே வேலே நடக்கவேண்டு மென்று மதுராந்தகத்திலேயே முகாம் போட்டார். வேலேயும் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. கலெக்டர் துரையும் அங்கு ஒரு தடவை வந்து இதைப் பார்க்க வேண்டு மென்று சொல்லி ஒரு நாள் முகாம் போட்டார். அன்று வேலே நடக்கும் இடத்தைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தார். கூடவே தாசில்தாரு மிருந்தார். கலெக்டர் வந்திருக்கிருர் என்று தெரிந்தவுடன் அந்த ஊரிலுள்ள சில பிரமுகர்கள் அவரைப் பார்த்து தங்கள் நன்றியறி வைச் செலுத்த வந்திருந்தார்கள். எல் லாருமாகப் பேசிக்கொண்டு சுற்றி வந் தார்கள். தாசில்தார்தான் துரை இங் கிலீஷில் பேசுவதை ஜனங்களுக்குத் தமிழிலும் ஜனங்கள் சொல்லுவதை துரைக்கு இங்கிலீஷிலும் விவரித்துக் கொண்டு வந்தார். அப்படியே சுற்றி வந்து கொண்டிருக்கும்போது ஏரி கரையிலிருக்கும் பாழான கோயில் துரையின் கண்ணில் பட்டது, அது என்ன என்று கேட்டார். ஜனங்களுள் வயது முதிர்ந்த ஒருவர் முன் வந்து அந்தக் கோயிலேப் பற்றி யுள்ள காரியங்களே ஸவிஸ்தாரமாக எடுத்துரைத்தார்.

அது கோயிலென்று கேட்டு துரை ஆச் சரியத்தால் பிரமித்து நின்றுர். பற்பல அழகான, உன்னதமான, என்றும் அலங் கரிக்கப்பட்டிருக்கும் பள்ளிகளே (churches)ப் பார்த்துப் பழகின அவருக்கு இப்படியும் ஒரு கோயில் பாழாய்க் கிடக்குமோ என்று தோன்றிற்று. மேலும் விசாரித்தார். அந்தப் பெரியவர் "இந்த ப்ரதேசத்தில் ஏற்பட்ட துர்ப் பிக்ஷத்தா லிப்படி கோயில் கவனிக்கப்ப டாமல் போய்விட்டது. எங்களுடைய பக் திக்குக் குறைவில்லே, இந்த ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்யமாளாமல் நாங் கள் விட்டுவிட்டாலும் பகவான் கருணு நிதி, வெகுவரப்பிரசாதி, நாம் உண்மை யான சிரத்தையோடு ஏதாவது வேண்டிக் கொண்டால் கட்டாயம் ஸ்ரீராமபிரான் நமது மனுேபீஷ்டத்தை இன்னும் பூர்த்தி செய்வார். நானே என் கண்ணுல் பார்த் திருக்கிறேன் எத்தனே பேர்களிப்படி பிர சாதம் பெற்றிருக்கிருர்களென்று.

இந்தத் தாசில்தாரையே எடுத்துக் கொள்ளுங்கள்' ஸம்ஸாரம் வீட்டிற்கு வந்து 10 வருஷங்களான பிறகுகூட குழந்தை பிறக்கவே இல்லே. போன வருஷம் 'ஸ்ரீ ராமநவமி உற்சவத்தை நிறையப் பணம் செலவுசெய்து வெகுவிமர் சையாக நடத்துகிறேன், ஒரு குழந்தை

யளிக்கவேண்டும் பகவானே' என்று வேண்டிக்கொண்டு, அதன்படியே நடத்தியும் வைத்தார். பாருங்கோ துரைவாள்! கைகண்ட பலம், இப்போ அவர் பத்னி 5 மாதம் கர்ப்பம். வரப்ரஸாதியென்ருல் என் இறைவன் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கே தகும்'' என்று ஆவேசம் வந்தவர்போல் கூறினர். பிரைஸ் துரையும் அதைக் கேட்டுப் பரிஹாஸம் ஒன்றும் செய்யவில்லை, ஏளனம் பண்ணவில்லை. ஏதோ யோசனை செய்பவர்போல் சற்று நேரம் நின்ருர். பிறகு அந்தப் பெரியவரைநோக்கி, "நீங்கள் இந்த ஸ்வாமியைப்பற்றி அவ்வளவுதூரம் சொல்கிறீர்களே! அப்படியானல் நான் ஒரு வேண்டுதலை எடுத்துக் கொள்ளப் போகிறேன். என் மனோ பீஷ்டத்தை இந்த ஸ்வாமி நிறைவேற்றுவாரா என்று பார்ப்போம்'' என்று துரை சொல்ல, அப் பெரியாரும் "துரையே, உண்மையான நம்பிக்கையுடன் பிரார்த்தித்தால் பகவான் கட்டாயம் அதை நிறைவேற்றுவார்'' என்ருர். துரை மறுபடியுமவரை நோக்கி "சரி, இந்தத் தடவை ஏரியின் அணை உடையாமலிருக்கும்படி ஸ்வாமி அனுக்ரஹிக்கட்டும், நான் இந்தக் கோயிலை என் செலவில் உத்தாரணம் செய்து அதற்குவேண்டிய சகல காரியங்களையும் செய்து வைக்கிறேன்'' என்று சத்தியம் செய்தார். ஜனங்கள் கண்டு ஆச்சரியத்தால் திடுக்கிட்டார்கள், ஆனந்தித்தார்கள். துரையைப் பலவாறு வாழ்த்தினர்கள்.

அணைகட்டி முடிந்தது. முறைப்படி மழைக் காலமும் வந்தது. கலெக்டர் துரை இஞ்சினீருடன் மதுராந்தகத்தில் முகாம் போட்டார். ஏதாவது தக்க சமயத்தில் பக்கத்திலிருந்து செய்யவேண்டிய காரியங்களைக் கவனிக்க இஞ்சினீரும் ஸன்னத்தராக இருந்தார். மழையும் தொடங்கிற்று. மழை என்ருல் ஸாதாரண மழையல்ல. இதுவரை இப்படிக் கொட்டினதே கிடையாது என்று ஜனங்கள் சொல்லும்படி அவ்வளவு பலமான மழை. ஏரியில் விஷ மேறுவதுபோல் ஜலம் நிரம்பிக்கொண்டே வருகிறது. இஞ்சினீருக்கு மனதில் பீதி ஏற்பட்டது. கலெக்டரிடமும் இந்த மழைக்கு அணைக்கட்டு தாங்குவது சந்தேகம்தான் என்று மெதுவாக எச்சரிக்கை செய்தார். பிரைஸ் துரைக்கு மிக்க கவலை, இஞ்சினீரும் கவலைகொண்டார். விடாமல் மழை பெய்வதால், இஞ்சினீரால் ஒன்றும் செய்யக்கூட வழி இல்லை. முகாம் போட்டிருக்குமிடத்திற்கும் அணைக்கும் கொஞ்சம் தூரம்தான். அடிக்கடி ஆள்கள் வந்து அணை எப்படி இருக்கிறது, ஜலம் எப்படிப் பெருகுகிறது என்று துரையிடம் தகவல் கொடுத்துக்கொண்டே இருந்தார்கள். பகல் போய் இரவு வந்தது. மழையின் வேகம் குறையவில்லை.

துரைக்கு ஒன்றும் ஓடவில்லை. கூடாரத்துக்குள் அங்குமிங்கும் கூட்டிலடைக்கப்பட்ட புலிபோல் நடந்து கொண்டிருக்கிருர். நடுநிசி, ஒரு ஆள் ஓடிவந்து 'ஏரி அநேகமாக நிரம்பியாச்சு, இனி கரை புரண்டு ஜலம் பிரவாகிக்கும் போல் தோன்றுகிறது' என்று கூறினன். அடுத்த நிமிஷம் ஒரு பெரிய சப்தம்; காதைப்பிளக்கும்படிக்கான ஒரு பேரிடி முழக்கம். அணை உடைந்து போயிற்று; அந்த சப்தம் தானிது என்று இஞ்சினீர் கூறி வருத்தத்தால் தலை குனிந்தார். பிரைஸ் துரையோ ஒரே பாய்ச்சலாகக் கூடாரத்திற்கு வெளியில் குதித்தார். கொட்டுகிற மழையையும் பொருட் படுத்தாமல் அணையை நோக்கி ஓடினர். எல்லாரும் குடைகளுடன் பின் தொடர்ந்தார்கள். கவலையின் மிகுதியால் துரைக்கு ஏதோ புத்தி தடுமாறி யிருக்கிறதென்று சிலர் எண்ணினர்கள். இஞ்சினீரும் மற்றவர்களும் எவ்வளவு வேகமாகத் தொடர்ந்தாலும் பிரைஸ் துரையை அணுக முடியவில்லை. பயித்தியம் பிடித்தவன் போல் துரை ஓடினர். அணையை அடைந்தார். அங்கு அவர் கண்ட காட்சியை என்ன என்று கூறுவது? அணைக்கிருபுறமும் இரண்டு தேஜோ மூர்த்திகள், ஒரு உருவத்தைச் சுற்றி நீல ஒளி, மற்ருெரு உருவத்தைச் சுற்றிப் பத்தரை மாற்றுத் தங்கத்தின் நிறமுள்ள ஒளி. இரண்டு உருவங்களும் கையில் வில்லுடன் புன்னகை புரிந்த வண்ணம் இருபுறங்களிலும் நின்று கொண்டிருப்பதைக் கண்டார்.

எங்கும் சூழ்ந்திருந்த அந்த இருட்டில் இத்தகைய திவ்ய பிரகாசத்துடன்கூடிய மூர்த்திகளைக் கண்டார்; கால் தானுக மண்டிபோட்டது; மெய் மறந்தார், மழை

சொரிவதையும் உணரவில்லை. ஈசனைத் தியானித்தார், தோத்திரம் செய்தார். இதற்குள் அங்கு வந்தவர்கள் இவர் செய்வதைப் பார்த்து "ஓஹோ, புத்தி ஸ்வாதீனமில்லைபோலும்" என்று அனுதாபப்பட்டார்கள். அவரை எழுப்ப முயன்றார்கள். அவர் அவர்களைப் பார்த்து "என்ன! உங்களுக்குக் கண்களில்லையா? என்னைக் குறித்து எதற்காக இவ்வளவு தடபுடல் பண்ணுகிறீர்கள். அதோ பாருங்கள், அந்த மூர்த்திகளின் தேஜஸைப் பாருங்கள், அந்த நீல ஒளியும் தங்க ஜோதியும் என் கண்களைப் பறிக்கின்றனவே. கண்ணாரப் பார்த்து ஆனந்தமடையுங்கள், ஜன்ம ஸாபல்யம் பெறுங்கள், ஆஹா! என்ன சோபை, என்ன ஸௌந்தர்யம், என்ன காம்பீர்யம்! —ஆ, மறைந்தார்கள், மறைந்தார்கள்" என்று எழுந்தார். அப்போதுதான் அங்கு நின்றிருந்தவர்களுக்கு விஷயம் புரிந்தது. ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியும் லக்ஷ்மண ஸ்வாமியும் அங்கு நின்று அணையைக் காத்ததுமன்றி, துரைக்குத் தரிசனமும் அளித்தார்கள் என்ற உண்மை தெரிய வந்தது. அணை உடையவில்லை. ஏரி நிரம்பி, கரைபுரண்டு, தண்ணீர் அணைமீது வழிந்து பள்ளத்தில் ஒரே பிரவாகமாக விழுந்தபோது ஏற்பட்ட இடிபோன்ற சப்தத்தை அணையுடைந்த சப்தமென்று ஜனங்கள் எண்ணினார்கள். துரை தம் கூடாரத்துக்கு வந்தார், தம் சுய உணர்ச்சிவர கொஞ்ச நேரம்பிடித்தது. அதற்குள் சமாசாரம் எங்கும் பரவி ஜனங்கள் கூட்டம் கூட்டமாகத் துரையைக் காண வந்தார்கள். அதில் அந்த வயோதிகருமிருந்தார்.

அவரைக் கண்டதும் பிரைஸ் துரை எழுந்திருந்து அவருக்கு ஸலாம்செய்து அவர் கைகளைப் பிடித்துக்கொண்டு, "ஐயா, நீங்கள் சொன்னது ஸத்தியம். உங்கள் ஸ்வாமி வரப்பிரஸாதிதான். என் வேண்டுகோளுக்கிணங்கி எனக்கு நான் கோரின வரத்தைக் கொடுத்தார். எனக்குத் தரிசனமுமளித்தார், இனி அந்தக்கருணாநிதியாகிய கடவுளுக்குத் தகுதியானபடி கோயில் கட்டிவைக்க வேண்டிய கடமை எனக்கு. நாளைக்கே அதற்கு ஏற்பாடுகள் தொடங்கப்படும்" என்று ஸந்தோஷமிகுதியால் தடுமாறும் குரலில் சொன்னார். எல்லோரும் ஆச்சரியத்தில் மூழ்கியிருந்தார்கள். இப்படியும் இந்தக் கலிகாலத்தில் நடக்குமா என்று திகைத்தார்கள். எந்தக் காலமாயிருந்தாலென்ன, மனது சுத்தமாயிருந்து உண்மையான நம்பிக்கையிருந்தால் பகவான் என்றும் நமக்குக் கருணை புரிவார் என்று சிலர் சொன்னார்கள்.

மறு நாள் முதல் மழையும் குறைந்தது. ஏரியில் முன்போல் நீரும் நிரம்பி நின்றது. தாம் வாக்களித்தபடியே பிரைஸ் துரை அந்தக் கோயிலைக் கட்டி வைத்தார். அது முதல் அந்தக் கோயிலுக்கு "ஏரி காத்த பெருமாள் கோயில்" என்று பெயர் ஏற்பட்டது. அங்கே ஸீதாதேவியின் ஸந்நிதியிலுள்ள ஒரு கல்லில்.

"இந்தத் தருமம் கும்பினி ஜாகீர் கலெக்டர் லயனல் பிரைஸ் துரை அவர்களது" என்று செதுக்கப் பட்டிருப்பதை இன்றும் காணலாம். ஏரியின் அணையின் பக்கத்திலும் இதுபோல் ஒரு சிலாசாஸனம் இருக்கிறது.

அன்புத்தளை.

ஆர்.எஸ்.

இருள் கவிந்து கொண்டிருந்தது. கன்னெஞ்சர்களாகிய கயவர்களின் உள்ளம்போல் ஊரை இருள் மூழ்க அடித்துக் கொண்டிருந்தது. கத்திக்குத்தும் கொலையும் நிறைந்த துன்ப நகரமாக விளங்கிய அந்த நகரத்தின் ஒரு கோடியில் ஒரு சிறு வீட்டில் விளக்கு ஒன்று மின்னிக் கொண்டிருந்தது.

விளக்கைச் சுற்றி நான்குபேர் உட்கார்ந்திருந்தார்கள். சுருட்டுப் புகை சுருண்டு மேலே போய்க்கொண்டிருந்தது. நிசப்தத்தைக் கலைத்துக்கொண்டு எழுந்தது ஒரு ஒலி.

''ஐயோ!''

''நள்ளிரவில்கூடவா கொலையும், குத்தும் நடக்கின்றன?'' என்றான் முபாரக்.

''என்ன, இது இன்றோ நேற்றோ நடக்கும் அதிசயமல்லவே? கடந்த ஒரு ஆண்டுக்கு மேலாக வட இந்தியாவில் சிறப்பாக இந்த நகரத்தின் சுற்றுப்புறத்தில் யாராவது கொலையைக் கண்டு வியந்திருக்கிறார்களா? மேலும், முபாரக்! முக்கியமான விஷயத்தை விட்டு விட்டேனே! நேற்று இந்தச் சீக்கியர்கள் படுத்திய உபத்திரவம் உனக்குத் தெரியுமோ? கிட்டத் தட்ட இருபது முஸ்லிம்களை நபிநாயகத்தின் திருவடிக்கு அனுப்பி யிருக்கிறார்கள். இதைக் கேட்டதிலிருந்து என் உடலில் ஒவ்வொரு நரம்பும் எப்படித் துடிக்கிற தென்று உனக்குத் தெரியுமா? கட்டாயம் நாளைக்கு இருபது சீக்கியர்களையாவது தீர்த்து விட்டுத்தான் சூரிய அஸ்தமனத்தைப் பார்ப்பதென்று தீர்மானித்திருக்கிறேன்.

பேசியவன் ஸலீம். அவன்தான் இந்தப் பயங்கரக் கட்டத்தின் தலைவன். கொலையை சிறப்பாக இந்துக்களைக் கொலை செய்வதைத் தன்னுடைய அன்றாடக் கடன்களின் ஒன்றாகக் கருதியிருந்தான் அவன்.

வேறொருவன் சொன்னான் :

''டல்ஹௌஸி சதுரத்தி லிருந்து நேர் வடக்கே போகும் தெருவின் கடைசியில் ஒருவன் இருக்கிறான். அவன் யாரென்று தெரியவில்லை. கணக்கற்ற சீக்கிய அனாதைகளை அவன் பதுக்கி வைத்திருக்கிறான். அவன் தலையைச் சீவி விட்டால் அவ்வளவு பேரையும் அடக்கித் தீர்த்து விடலாம். அவன் வீட்டுச் சேவகனை எனக்குத் தெரியும். என் வீட்டுக்கு எதிரில்தான் குடியிருக்கிறான். நாளைக்கு அவனை மடக்கி இங்கே கொண்டு வருகிறேன்.''

''சபாஷ்! சையது! அதுதான் சரி! அப்படியே பொறியோடு எலிகளைப் பிடிக்க வேண்டும். நாளைக்குக் காலை அந்தச் சேவகனை இங்கே கூப்பிட்டுக் கொண்டு வர வேண்டும். ஞாபகமிருக்கட்டும்'' என்று முடித்தான் ஸலீம்.

விளக்கு ஆடியாடி அணைந்து கொண்டிருந்தது. அறையில் பரவிய இருளைப் போல் சலீமின் அகத்தில் இருள் கவிந்து கொண்டிருந்தது. கூட்டம் கலைந்தது.

2

காலைக் கதிரொளி மலர்ந்தது. நீரில் நனைந்த நாகணவாய்ப்புட்கள் இருஞ்சிறகு தறி வெளிப்புறப்பட்டன. எவ்வளவோ ஆனந்தமாக இருக்க வேண்டிய நகரம், எண்ணிறந்த மக்களின் மகிழ்ச்சியினால் பொலிந்து குதூகலத்தில் ஆழ்ந்து கிடக்க வேண்டிய நகரம், சகோதர மக்களின் சச்சரவால் துயரத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தது.

சையது அந்தச் சேவகனை தன்னுடன் அழைத்துக் கொண்டு வந்திருந்தான். ஸலீம் வீட்டுக் கதவைத் தட்டினான்.

''வந்துவிட்டேன்''

''உள்ளே வாருங்கள்'' என்று அழைத்துக்கொண்டு போனான் ஸலீம்.

குறுகிய அந்த வீட்டின் நடுப் பாகத்தை அடைந்தவுடன் ஒரு கதவு விலகியது. சமதரையாகத் தெரிந்த இடத்தில் திடீரென்று ஒரு பள்ளம் தென்பட்டது. படிப் படியாக உள்ளே இறங்கிச் சென்றார்கள். கதவு சாத்திக்கொண்டது. இருள் சூழ்ந்த அறை. மேலே இணைக்கப்பட்டிருந்த ஒரு ஜன்னலிலிருந்து லேசாகக் காற்று வந்துகொண்டிருந்தது.

அந்தக் கொலைகாரர்கள் பேசத் தொடங்கினார்கள்.

"என்ன ஐயா? உன் எஜமானர் எந்த எந்த இடங்களில் அந்தக் கொலைகார சீக்கியர்களைப் பதுக்கி வைத்திருக்கிறாரென்று சொல்லமுடியுமா? உண்மையாக நீ அந்த விஷயங்களை அறிந்துகொண்டு இங்கே வந்து இன்று மாலைக்குள் எனக்குத் தகவல் கொடுத்தால் இதோ இந்தப் பை நிறைய பணத்தைச் சுமந்துகொண்டு நீங்கள் வீட்டுக்குப் போகவேண்டியிருக்கும்!" என்று சொல்லிவிட்டு ஒரு பேய்ச் சிரிப்புச் சிரித்தான் அவன்.

"என்ன தங்கள் தயாள குணம் நான் அறியாததா? இன்று மாலைக்குள் உங்களுக்குத் தகவல் கொடுத்து விடுகிறேன். ஆனால் என் பெயரை மட்டில் வெளியில் விட்டு விடாதீர்கள். உங்களுக்குப் புண்ணியமுண்டு அப்புறம் என்கதி அதோகதிதான்! என் சாதிக்காரர்கள் என் கழுத்தை நெறித்துவிட்டு மறுகாரியம் பார்ப்பார்கள்!"

கடைசி வாக்கியத்தைச் சொல்லும் போது அவனையுமறியாமல் அவன் முகத்தில் பயம் படர்ந்தது. ஆனாலும் ஜ்வலித்துக்கொண்டிருந்த அவன் கண்கள் ஆசை ஆழமறியாமல் தேங்கியிருந்தது.

அவர்கள் விடை பெற்றுக் கொண்டார்கள். ஸலீம் வாசல் வரைக்கும் வந்தான். "மறந்து விட்டேனே!"

உங்கள் பெயரென்ன?"

"ராமநாதன்" என்று பதில் வந்தது.

3

அப்துல் கல்கத்தாவிலேயே ஒரு காலத்தில் பெரிய வியாபாரியாக இருந்தவர். செல்வத்தைக் கணக்கில்லாமல் சேர்த்தவர். ஆனால் அளவின்றி வழங்கும் தன்மையும் அவரிடம் நிறைந்திருந்தது. கடந்த ஐந்து ஆண்டுகளாக அவர் வியாபாரத்தை நிறுத்தியிருந்தார். இயந்திரம்போல் தொழில் செய்து தம் மனச்சாந்தியைத் தொலைத்துக் கொண்டு தம் வாழ்வு முழுதும் ஆன்மாவுக்கு அழிவு தேடுவதிலேயே பாழான பிறகு இப்பொழுதுதான் அவர் தம்முடைய ஆன்மா, இந்த உலகில் தான் செய்யவிருந்திருக்கும் அளவற்ற கடமைகள், யாவற்றையும் உணரலானார். வாழ்க்கையின் பெரும் பாகத்தைக் கன் மனச்சித்தையைக் கழித்து விட்டோமே என்று வருந்தினார். பொருள்களை விற்றபோது இளகிய ஹ்ருதயத்தையும் விலை கூறிக்கொண்டிருந்தோமே யென்று உருகினார்.

இளம் வயதிலேயே அவரை விதி தனித்து நிற்கச்செய்து விட்டது. ஆகையால் முதிர்ந்த வயதில் கவலையின்றித் தெய்வ சிந்தனையில் கருத்தைச் செலுத்துவது அவருக்கு எளிதாக இருந்தது.

ஒவ்வொரு நாளும் தொழுகையில் தன்னை மறந்து அமர்ந்திருந்தபோது "என் சுற்றத்தாரையெல்லாம் உன் தாளடியில் சேர்த்துக் கொண்ட பிரபுவே! என்னை ஏன் இன்னும் இந்தப்பாப உலகில் வைத்து வருத்துகிறாய்? நான் யாருக்கு என்ன துன்பம் செய்தேன்?" என்று கண்ணீர் மல்கிப் பிரார்த்திப்பார்.

காந்தி மகானின் பிரசங்கங்களைத் தவறாமல் பத்திரிகைகளில் படிப்பார். அவருடைய பொன் மொழிகளைக்கண்டு உருகிப்போவார். ஏற்கனவே மகாத்மாவிடம் அவருக்கு அளவற்ற பக்தியிருந்தது. சிறப்பாக வட இந்தியாவில் ஏற்பட்ட எண்ணிறந்த மதச்சாவுகளினாலும் கொலைகளினாலும் மகாத்மா நவகாளியில் தன்னந்தனியாய் சிறுகோல் ஊன்றி மெலிந்தகால்களில் தளர் நடை நடந்ததைக் கேட்டபின் அந்தச் சாந்த மூர்த்தியிடம் அவருக்கு ஏற்பட்ட பக்தி மேலும் மேலும் நிறைந்து கொண்டு வந்தது.

ஒருநாள் பத்திரிகையில் "பாரத தேசம் பிரிக்கப்பட்டு விட்டதென்று யார் சொன்னார்கள்? பாகிஸ்தான் ஆனாலும் ஹிந்துஸ்தான் ஆனாலும் அது நமக்கு ஒன்றுதானே? எல்லா இடங்களிலும் நாமும் நம் சகோதரர்களும்தானே வாழ்கிறோம்? அப்படியிருக்க நீங்கள் ஏன் சிந்து மாகாணத்திலிருந்து புறப்பட்டு வருகிறீர்கள்? உண்மையில் உங்கள் சகோதரர்களுக்குப் பயந்தா நீங்கள் இங்கு ஓடிவருகிறீர்கள்? என்னால் நம்ப இயலவில்லையே!" என்று மகாத்மா பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசியது வெளியாகியிருந்தது. அதைப் படித்துவிட்டு அவர் விம்மி விம்மி அழுதார். "நெஞ்சு பொறுக்

குதில்லையே இந்த நிலை கெட்ட மாந்தரை நினைத்துவிட்டால்'' என்று ஏங்கினர்.

4

சச்சரவு வளர்ந்துகொண்டே போயிற்று. துவேஷம் என்ற விஷ விதையை யாரோ அந்த மக்களிடை விதைத்து விட்டார்கள். அது இப்போது செழித்து வளர்ந்து கிளை கம்புகளுடன் பெரும் விஷ விருக்ஷமாக வளர்ந்திருந்தது. உயிர் கொடுத்து உயிர் காக்க வந்த எவ்வளவோ உத்தமர்களின் தியாகத் தீயினாலும் அதை அழித்துப் பொசுக்க முடியவில்லை.

இரவு பத்து மணி யிருக்கும் அப்துல் மெளனமாக உட்கார்ந்திருந்து யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டதும் எழுந்து கதவைத் திறந்தார்.

இது என்ன பரிதாபம்! சுமார் இருபது பேர்கள், வயது முதிர்ந்தவர்கள், பெண்கள், குழந்தைகள் எல்லோரும் ஒடுங்கி நின்று கொண்டிருந்தார்கள். மழையில் நனைந்து குளிரில் நடுங்கி வெயிலில் காய்ந்து அவர்கள் உடல் வறண்டும் பாளமாகக் கீறி யிருந்தது.

'உள்ளே வாருங்கள்' என்று அழைத்தார் அப்துல்,

அவர்களெல்லாம் உள்ளே வந்தார்கள், என்ன உண்மையாக உள்ளே வரவா சொல்கிறீர்கள்? நாயைக்காட்டிலும் கீழாக அவதிப்பட்டு உழன்று உலக வாழ்வைக்காட்டிலும் உயிர் துறப்பதே மேல் என்று எண்ணியிருந்த எங்களை ஆதரிக்கக்கூட யாராவது இருக்கிறார்களா? கொலைக்கும், குத்துக்கும் பயந்து ஒடுங்கி உணவின்றிச் சாகும் தறுவாயிலிருந்து கடைசியில் அலுத்துப் பட்டினியால் சாகும் உயிர் எப்படிச் செத்தால் என்ன என்று துணிந்து வந்த எங்களைக் காப்பாற்றுவதற்குக்கூட ஒருவர் உயிருடன் இருக்கிறாரா? என்று அவர்களுக்குள் ஒருவர் கேட்டார்.

''அப்படி, இன்னும் ஒரு தடவை சொல்லாதீர்கள். நம் எல்லோரையும் வழிகாட்டி அழைத்துச்செல்ல ஒளிவடிவமான அன்பு உருவம் மகாத்மா இருக்கும் நூற்றாண்டில் அப்படிப்பட்ட வார்த்தையை மற்றொரு முறை சொல்லாதீர்கள். பாரத நாட்டில் என்றாவது அன்பும் கருணையும் அபூர்வமானது உண்டா?' என்றார் அப்துல்.

அறையில் அமைதி நிலவியது.

ஸோப்பை வீணாகத் தேய்த்து அதிகப்படி நுரை எழுப்புகின்றவர்கள் என்ன நம்பினும், அதிகப்படியான நுரையால் தேகமோ, ஆடைகளோ ரொம்பவும் சுத்தமோ வெண்மையோ ஆகிவிடமாட்டா. ஒழுங்காகவும் சிக்கனமாகவும் உபயோகித்து உங்கள் ஹமாம், 501 ஸோப்புகளை அதிக நாள் நிற்கச்செய்வதே அதைவிட எத்தனையோ மேலானது.

ஹமாமும் 501 ஸோப்புகளும்

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

"மாடிக்குப்போங்கள் எல்லோரும்" என்றார்.

வெகு சிரமப்பட்டு எல்லோருக்கும் துணிகள் கொடுத்தார். எல்லோருக்கும் வயிறார உணவு கிடைக்கவில்லை. வீட்டிலிருந்த கனிகளையும் காய்களையும் கொடுத்து அவர்கள் பசியை ஒருவாறு ஆற்றினார். புட்டிப் பாலைக் கரைத்துத்தான் குழந்தைகளுக்கு புகட்ட வேண்டியிருந்தது. ஒரு காலத்தில் வியாபாரியாக இருந்ததால் பொருள் சேமித்துவைக்கப் பெரிய அறைகள் கட்டியிருந்தார். மாடியிலிருந்த அந்த அறைகள் அவர்களுக்கு அடைக்கலம் தந்தது.

"உங்களுக்கு எல்லாச் சௌகரியமும் செய்துகொடுத்து விடுகிறேன். ஆனால் நீங்கள் இருப்பது வெளியில் யாருக்கும் தெரியக் கூடாது. தெரிந்தால் உங்களுக்குத்தான் ஆபத்து! பத்திரம்." என்று எச்சரித்து விட்டு மாடிக்கதவை இழுத்துப் பூட்டிக் கொண்டு கீழே இறங்கிவந்தார். எது எப்படியானாலும் சரி, பறவை தன் குஞ்சுகளைக் காப்பதுபோல் இவ்வளவு பேரையும் எந்தக் கொலைகாரர் கண்களுக்கும் தெரியாமல் மறைத்துவைக்க வேண்டியதுதான் என்று தீர்மானித்தார்.

5

வீட்டில் மக்களுடைய எண்ணிக்கை வளர்ந்ததிலிருந்து அவருடைய கவலையும் வளர்த்துக்கொண்டே வந்தது. அவருடைய உடலுக்கும் சிரமம் அதிகமாயிற்று. வீட்டிற்குள்ளேயே எல்லோரையும் மறைத்து வைத்து விட்டு அவர்களெல்லோரையும் சிறு குழந்தையைக் காப்பதுபோல் காப்பாற்ற வேண்டியிருந்தது.

ராமநாதன் அவர் வீட்டு வேலைக்காரன். ஒரு நாள் அவன் கழுகுக் கண்களுக்கு இந்த விஷயம் புலப்பட்டு விட்டது. தகுந்த துப்பறிபவர்களை வைத்து இந்த விஷயத்தை அறிந்துகொள்ளத் தயாரானான் ஸலீம்:

* * *

ராமநாதன் இரண்டு மூன்றுதரம் மாடிச் சாவியைக் கைப்பற்ற முயற்சித்தான். அவன் முயற்சி பலனளிக்கவில்லை. அந்தி நெருங்கிக் கொண்டிருந்தது. மாலை சுமார் ஆறு மணியிருக்கும். மாடியில் சென்று சிறு குழந்தையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தார் அப்துல்.

திடீரென்று கொல்லைப்புறத்திலேயிருந்து "ஐயோ!" என்ற குரல் எழுந்தது.

கருணையே வடிவாய் நின்ற அவர் செவிகளில் இந்தச்சொல் அலைபாய்ந்து எதிரொலித்தது. அன்புக்கடலான அவர் தம் நிலை மறந்தார்.

'யார்' எது, என்ன செய்கிறோம்,' என்ற உணர்வேயில்லாமல் மலை வீழருவியைப் போல் பாய்ந்து கீழே ஓடினார். கொல்லைப் புறம் யாரையும் காணோம்.

மாட்டுக்கொட்டில் வைக்கோல்போர். எல்லாவற்றையும் தாண்டி நின்ற கிணறு அவர் கவனத்தைக் கவர்ந்தது. அங்கே பாய்ந்து ஓடினார்:

கிணற்றுக்குள் குனிந்து பார்த்தார். ஒன்றையும் காணோம். ஆனால் மறு கணம் அவரே.

"ஐயோ!" என்று கத்தினார். முதுகில் யாரோ கத்தியால் குத்தி விட்டார்கள். இரத்தம் பொங்கி வழிந்து அவர் உடலை நனைத்தது. கீழே விழுந்தார்.

மறைவிலிருந்து ராமநாதன் ஓடி வந்தான் அவர் கையிலிருந்த சாவிக்கொத்தைப் பிடுங்கிக்கொண்டு ஓடினான்.

"அட பாவி! நீ என்னை கொலை செய்தாலும் பாதகமில்லை! அவர்களை விட்டு விடு" என்று கதறிக்கொண்டு எழுந்திருக்க முயற்சித்தார்.

மறு நிமிஷம் அவர் கண்கள் முன் கிணற்றடி, வைக்கோற்போர் மாட்டுக் கொட்டில் எல்லாம் சுழன்றன. நினைவிழந்து கீழே விழுந்தார்.

6

ஓடிவந்த ராமநாதனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தன்னையும் தன் சூழ்நிலையையும் மறந்து தலைகால் தெரியாமல் ஓடினான்.

தலைதெறிக்க ஓடிக்கொண்டேயிருந்தான். டல்ஹௌஸி சதுரத்திற்கு வந்தாகி விட்டது. மேலும் ஓடினான். இதோ இந்தச்சந்துதான் ஸலீம் வீட்டுக்கு எதிரே வந்து நின்றான். ஸலீம் வீட்டில் யாருமில்லை. உள்ளே நுழைந்து சந்து பொந்து விடாமல் எங்கெல்லாமோ தேடினான். எங்கும் ஸலீமைக் காணோம்.

மணி ஏழு இருக்கும். மழைக்காலமானதால் முன்நேரத்திலேயே இருட்டுச் சூழ்ந்து கொண்டிருந்தது. வெளியே வந்தான். சந்தின் முனையில் ஏதோ சண்டை நடந்து

கொண்டிருந்தது. வர வர அது அதிகமாகியிருந்தது. அவன் வீட்டுக்குள் நுழையும் பொழுது அங்கே யாரோ பத்துப்பேர் இருந்தார்கள். இப்போது அங்கே ஐம்பது பேர் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். போலீஸ்காரர்கள்வேறு வந்து கொண்டிருந்தார்கள்.

ஸலீம் ஒருவேளை அங்கே யிருப்பானே?

அவன் விழுந்தடித்துக்கொண்டு ஓடினான். கண் முன் எல்லாம் பறந்தன. வர வர அவன் வேகம் அதிகரித்துக் கொண்டே வந்தது.

முன் நின்ற பொருள்கள் யாவும் மங்கி இருண்டன.

“பட்!”

லாந்தர்கம்பத்தில் மோதிக்கொண்டான். மண்டை உடைந்து இரத்தம் பெருகியது. அவனைப் பிடித்துக்கொள்ள கூட்டத்திலிருந்து ஒருவன் ஓடிவந்தான். அவன் தான் ஸலீம், “இந்தா சாவி” என்று நீட்டினான். அதே சமயத்தில் ஸலீமை நோக்கி ஒரு கத்தி பறந்து வந்தது. இருவரும் பள்ளத்தில் உருண்டுபோய் விழுந்தார்கள்.

சுமார் ஒரு மணி நேரத்தில் ஒரு ஆம்புலன்ஸ் கார் வந்து அடிபட்டவர்களை ஏற்றிக்கொண்டு போயிற்று.

* * *

இருபத்து நான்கு மணி நேரம் கழிந்தது. இருளில் ஒளி வீசிக்கொண்டு ஜ்வலிக்கும் ஸ்தூபியில் ஒரு சிவப்புச் சிலுவைக் கண்களைப் பறிக்கிறதே, அதுதான் வைத்தியசாலை.

நகரிலேயே பெரிய வைத்தியசாலை அது தான். அடுத்தடுத்து அதில் மூன்று படுக்கைகள் நம் கவனத்தைக்கவருகின்றன. மூன்றுபேரும் நமக்கு அறிமுகம் ஆனவர்கள்தான்.

முதல் படுக்கையில் படுத்திருப்பவன் ராமநாதன். அவன் பக்கம் வெளிச்சம் அவ்வளவாகப்படவில்லை. அடுத்த படுக்கையில் படுத்திருப்பவன் ஸலீம். அதற்கடுத்த படுக்கையில் படுத்திருப்பவர் அப்துல்.

மூன்று பேருக்கும் பலத்த அடி. இவ்வளவு நேரம் கழித்து இப்போதுதான் அவர்களுக்கு நினைவு வந்திருந்தது. அவர்களுள் அப்துல் மட்டும் வீட்டிலிருந்து அடிபட்டுக்கொண்டு வரப்பட்டவரானதால் அவரிடம் மட்டும் வாக்குமூலம் வாங்கப் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் வந்திருந்தார். தேவையான மற்றவர்களும் வந்திருந்தார்கள்.

“உங்களை யார் கொலை செய்தது? கத்தி பாய்ந்த வடு மிகவும் பலமாக இருக்கிறதே” என்று கேட்டார்.

அப்துல் அமைதியுடன் பதில் சொன்னார். “யார் என்னைக் கொலை செய்ததென்பதை நான் பார்க்கவில்லை, அவனுடைய அங்க அடையாளங்களைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நான் இறந்து போன பிறகாவது இது போன்ற கொலைகள் கல்கத்தாவில் குறைய வேண்டும். அதுவே நான் விரும்புவது.”

டாக்டர் உள்ளே பிரவேசித்தார். “வாக்குமூலம் ஒன்றும் இனி தேவையில்லை.” என்றார் ஸப் இன்ஸ்பெக்டர்.” அப்படியானால் இந்த நிலையில் அவரை அதிகம் தொந்தரவு செய்யாதீர்கள் என்றார் டாக்டர்.

* * *

மறு நாள் காலை ஐந்து மணியிருக்கும் கதிரொளி உள்ளே இன்னும் பாயவில்லை. கங்கை நீரில் மூழ்கி மரங்களைத் தழுவிவரும் நீர்த்துளிகள் காற்றின் மீது மிதந்துவந்தன. கதிர் ஒளி காண்பதற்கு முன்பே பறவைகள் கீதம்பாடி வெளியே பறந்தன.

ஸலீம் வெகு நேரமாக விழித்துக்கொண்டிருந்தான். அவனுடையமனச்சாட்சிஅவனை உறுத்திக்கொண்டே யிருந்தது. “நானும் ஒரு முஸ்லிம், அப்துலும் ஒரு முஸ்லிம், இருவருக்கும் எவ்வளவு வித்தியாசம்? நான் ஹிந்துக்களை அழிப்பதில் எவ்வளவு வெறி பிடித்து நிற்கிறேனே அவ்வளவு தூரம் அவர் ஹிந்துக்களைக் காப்பதில் முனைந்திருக்கிறார். தான் கத்தி தேடியபோதெல்லாம் அவர் கைகொடுத்து உதவி செய்தார்.”

அவர் உடல் சிரமத்தைப் பார்ப்பதில்லை. உள்ளம் வருந்துகிறார். அவர் வீட்டில் அவ்வளவு பேர் இருப்பது யாருக்கும் தெரியக் கூடாது என்பதற்காக என்னென்ன காரியங்கள் செய்திருக்கிறார்? எவ்வளவோ தடவைகள் சிரமப்பட்டுக் கிடைக்காமல் அரிதாகக் கிடைக்கும் உணவை அவர்களுக்குக் கொடுத்து விட்டுத் தாம் பட்டினிகிடந்திருக்கிறார். ராமநாதனுக்குத் தெரியக் கூடாது என்பதற்காக அவர்களுடைய துணிகளையெல்லாம் தம் கையால் இரவெல்லாம்

தோய்த்து உலர்த்தியபின் படுக்கைக்குச் செல்கிறார்.

ஸலீமினால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. எழுந்து அப்துலின் படுக்கையிடம் ஓடிவந்தான். அவர் தாள்களை பிடித்துக் கொண்டான்.

"என்ன, என் கால்களை ஏன் பிடிக்கிறாய் அப்பா! நீ எனக்கு என்ன கெடுதல் செய்தாய்?"

"உங்களுக்கல்ல! ஒரு சமூகத்திற்கே கேடிழைத்து விட்டேன்! ஹிந்து சமூகத்தில் எவ்வளவு பேரைக் கொன்று விட்டேன்?"

"இல்லையப்பா நீ, நம் சமூகத்துக்குத்தான் கேடிழைத்துவிட்டாய். நம் சகோதரர்களுக்குக் கேடு விளைவித்து, நமக்கே பழி தேடிக்கொண்டாய். துவேஷத் தியை அணைக்காமல் அதில் எண்ணெயை ஊற்றினாய். இன்று உன் தவற்றை நீ உணர்ந்து விட்டாய். தன் தவற்றைத் தானே உணர்ந்து திருந்துபவனைக் காட்டிலும் உத்தமன் யாரும் இல்லை. காலையிளஞ் சூரியன் உதிப்பதற்கு முன் நம்மைப் படைத்தவனிடம் மன்னிப்புக்கேட்டுக்கொள். உன்னைப்போல் எல்லோரும் தவற்றை உணர்ந்து திருந்திவிட்டால் பாரத தேசத்தை உய்விக்க வந்த மகானுக்கு வேறு என்னகுறை?" அவரால் மேலே பேச முடியவில்லை. கண்ணீர் மல்கியது. திடீரென்று ராமநாதன் எதிர்ப்பட்டான்.

"எஜமான்! எஜமான்! என்னை அன்புத்தளையில் சிறைப்படுத்தி விட்டீர்கள். நான் உங்களைக் குத்தினேன் என்பது உங்களுக்குத் தெரியும். நான் துரோகி!

"என்னை நீங்கள் காட்டிக்கொடுத்து தூக்கு மேடைக்கு அனுப்பி இருக்கக் கூடாதா? உங்களுக்குத் தெரியாது, என்று சொன்னீர்களே! உங்கள் அன்புச் சுமையை என்னால் தாங்க முடியவில்லையே!

"எஜமான்! நீங்கள் ஒரு முஸ்லீம்! நீங்கள் ஹிந்துக்களை வைத்துக் காப்பாற்றுவதற்காக உயிரைக் கொடுக்கக் கூட தயாராக இருந்தீர்கள்! குத்திக் கீழே விழுந்தபோது கூட,

"என்னைக் குத்து, பரவாயில்லை! அவர்களை ஒன்றும் செய்யாதே!" என்றல்லவா சொன்னீர்கள்? உங்களுக்கு இருந்ததில் ஆயிரத்தில் ஒரு பங்கு எனக்கு விவேகம் இல்லையே! இந்தப்பாவியை மன்னிப்பீர்களா!" என்று கதறினான்.

"அப்பா உன்னால் ஆவது ஒன்றுமில்லை. இந்தத் துவேஷத்தீ எல்லோரையும் பொசுக்குகிறது. இது அணைய வேண்டுமென்று பிரார்த்தனை செய்! பாரதத்தாயின் கால் விலங்குகள் முறிந்தன! ஆனால் இது காறும் நம்மைப் பூட்டியிருந்த அன்புத்தளை சிதறலாமா? சகோதரர்களை யாரால் பிரிக்க முடியும்? இதை என்று நம் சகோதரர்கள் உணர்வார்கள்?" இத்துடன் அவர் பேச்சு நின்றது.

வெளியே தமிழ் மாணவர்களின் படை, ஆம்புலன்ஸ் காருக்குப்பின் போய்க்கொண்டிருந்தது.

"உடன் பிறந்தவர்களைப் போல்—இவ்
வுலகில் மனிதரெல்லோரும்
இடம் பெரிதுண்டு வையத்தில்—இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்?

உடன் பிறந்தவர்களைப் போலே—இவ்
வுலகில் மனிதரெல்லோரும்
திடம் கொண்டவர் மெலிந்தோரை
இங்குத் தின்று பிழைத்திடலாமோ?

தம்பி சற்றே மெலிவானால்—அண்ணன்
தானடிமை கொள்ளலாமோ?
செம்புக்குங் கொம்புக்குமஞ்சி மக்கள்
சிற்றடிமைப் படலாமோ?"

கோஷம் மெல்ல மடிந்து கொண்டிருந்தது. மூன்று உயிர்கள் மெல்ல மடிந்து கொண்டிருந்தன.

"மண்ணிலே ஆகர்ஷண சக்தியை விதைத்தவன் நம் மக்களிடை ஒற்றுமையை விதைக்க வேண்டும்; அன்புத்தளையிலேயே என்றென்றும் அனைவரும் பகைமை நீங்கிக் கட்டுப்பட வேண்டும்" என்ற தியானத்துடன் மூன்று உயிர்களும் காற்றில் கலந்தன.

இந்திய விஞ்ஞானம் அன்றும் இன்றும்.

ரா. ஸ்ரீ. சிந்தாமணி

இந்திய நாகரிகம், எகிப்திய, சுமேரிய நாகரிகங்களுக்கு முற்பட்டதில்லையெனினும், அவைகளுக்குச் சமகாலத்தது என்பதில் யாதொரு ஐயமுமில்லை. கிறிஸ்துவப்தத்திற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பேயே சிந்து நதிக்கரையில் சிறந்ததொரு பண்பாட்டையுடைய ஒரு சமூகம் வாழ்ந்து வந்ததை நாம் அறிந்துள்ளோம். இத்தகைய சிறந்த ஒரு வாழ்வு விஞ்ஞானத்தின் உதவியின்றி நிலவியிருக்க முடியாதென்பதே அறிஞர்கள் கருத்து. மேலை நாடுகளில் விஞ்ஞானம் முறைப்படிக் கற்கப்படுமுன்னமே சிந்து கங்கைக் கரைகளில் வாழ்ந்து வந்த மக்கள் கணிதம், வான சாஸ்திரம், ரசாயனம், உலோக சாஸ்திரம், மருத்துவம், பௌதிகம், தாவர சாஸ்திரம் முதலிய கலைகளில் குறிப்பிடத் தக்க முன்னேற்றமடைந்திருந்தனர்.

கணிதத்துறையில் நம் நாடு புகழேணியின் உச்சியில் ஏறி விட்டது. க்ஷேத்திர கணிதத்தில் கிரேக்கர்கள் எவ்வளவு புகழ் பெற்றிருந்தனரோ அதுபோன்று இந்தியரும், பல நூற்றுண்டுகள் வரை எண்மானம், குறியீடு, வான சாஸ்திரம் முதலிய துறைகளில் முன்னேறியிருந்தனர். இப்பொழுதுள்ள எண் குறியீடுகளைக் கணிதத்தில் புகுத்தியவர்கள் இந்தியக் கணித நிபுணர்களே. பூஜ்யத்திற்கு முழு உருவம் கண்டதும், தசாம்ச முறையைக் கண்டதும் இந்திய விஞ்ஞானிகளே. எதிர்மறையளவுகளின் (negative quantities) உண்மையைக் கண்டதும் நம்நாட்டு நிபுணர்கள்தாம்.

ஆர்யபட்டர் (கி. பி. 5-ஆம் நூற்றுண்டு), வராஹமிரர் (6-ஆம் நூற்றுண்டு), பிரம்மகுப்தர் (7-ஆம் நூற்றுண்டு), பாஸ்கரர் (12-ஆம் நூற்றுண்டு), முதலியோர் வான சாஸ்திரத்தில் மலையிலிட்ட விளக்கென விளங்கினர். இரசாயனப் பகுதியில் "காணுகர்" கண்ட உண்மைகளை விஞ்ஞான உலகம் புறக்கணித்துவிட முடியாது. பொருள் உடைக்கப் படாதது என்றும் அணுக்களால் தொகுக்கப் பெற்றதென்பதையும் கண்டார். இவர் தாம் வேதாந்தத்தில் "வைசேஷிக" முறையைக் கண்டவர். இரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த நாகார்ஜுனர் "இரசாயன சாஸ்திரத்தின் பிதா" என்று சொல்லும் படியான பெருமை வாய்ந்தவர். இவர் கண்டு பிடித்த காஜ்வலி என்ற மெர்க்குரிக் ஸ்ல்பைட் முக்கியமான இரசாயனப் பொருளாகும். காக்ஷபுதந்த்ர, ரஸரத்னகர, ஆரோக்ய மஞ்சரி என்ற நூல்களின் மூலம் அழியாப் புகழை எய்தி விட்டார்.

இந்தியர்கள் உலோக சாஸ்திரத்திலும் சிறப்புற்றிருந்தனர் என்பதற்கு டெல்லியில் உள்ள குதுப்மினர் இரும்புத் தூபியே போதிய சான்றுகும். கிறிஸ்து வப்தத்திற்கு வெகுகாலத்துக்கு முன்னே தொகுக்கப் பெற்ற ரிக்வேதத்தில் மருத்துவ மூலிகைகள் செடிகளைப் பற்றிப் பிரஸ்தாபிக்கப் பட்டுள்ளது. சரகரின் ஆயுர்வேதமும், சுச்ருதரின் மருத்துவநூலும் இந்தியருடைய வைத்ய மேதைக்கு இலக்காக உள்ளன. சரகர் மருந்துகளைப் பற்றியே விரிவாகக் கூறியிருக்க, சுச்ருதர் சஸ்திர சிகித்சையைப்

பற்றியும், உடற்கூற்றைப் பற்றியும் கூறியுள்ளது கவனிக்கத் தக்கது. இவர்களுடையகாலத்தினின்று கி. பி. 1,200ஆம் ஆண்டுவரை இந்தியா வைத்தியத் துறையில் மிகவும் முன்னேறி யிருந்தது. இவ்வளவு சிறந்தோங்கி யிருந்த விஞ்ஞானக் கலைக்கு 12ஆம் நூற்றாண்டுக்குப் பின் க்ஷீண தசை உண்டாயிற்று.

ஆராய்ச்சியில் மனம் ஈடுபடவில்லை. அரசசபைகளை அலங்கரித்த ஹிந்து முஸ்லிம் அறிஞர்களுக்கு என்றும் குறைவேயில்லை; ஆயினும், 12ஆம் நூற்றாண்டிற்குப் பின் முதல்தர நூல்கள் வெளிவரவில்லை யெனத் தெரிகிறது.

இத்தகைய மந்தம் ஏற்படக் காரணமாக இருந்தது அக்காலத்து நாட்டில் நிலவியிருந்த அரசியல் நிலையே. அந்நிய நாட்டின் படையெடுப்புக்கள், உள்நாட்டுக் குழப்பங்கள் முதலியன சமூகத்தின் கோப்பைக் குலைத்து, கலை, சாஸ்திர வளர்ச்சிக்குப் பெரிதும் தடையாக இருந்தன. ஆனால் நாம் செய்த அதிர்ஷ்டவசத்தால் இன்று மறுபடியும் விஞ்ஞானம் முதலிய துறைகளில் தலையெடுத்து விட்டோம். நம் பெருமை இன்று புதுப்பிக்கப்பட்டு வருகிறது. பௌதிகம், இரசாயனம், கணிதம், தாவரவியல். பூமி சாஸ்திரம், புதை பொருளாராய்ச்சி, மனிதர் வரலாறு முதலிய விஞ்ஞானத் துறைகளில், சென்ற ஐம்பது ஆண்டுகளாக நிகழ்ந்த விளைவுகள், இந்தியாவின் பெருமை குன்றிவிடவில்லை என்பதையும், இந்திய அறிவு மழுங்கிவிடவில்லை என்பதையும், அது காலத்துடன் போராடி வந்திருக்கின்றதென்பதையும் காட்டுகின்றது. அனேக இந்திய விஞ்ஞானிகள் இன்று உலகம் புகழும் பெருமை பெற்றுள்ளனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் புகழ் பெற்றுள்ளனர். இனி இன்றைய இந்தியாவில் உள்ள விஞ்ஞானத்தின் நிலையை ஆராய்வோம்.

முதன் முதலாக 1784ல்தான், ஐரோப்பியமுறையில் விஞ்ஞான அறிவின் வளர்ச்சிக்கு வித்திடப்பட்டது. கல்கத்தா வில்லியம் கோட்டை நீதிபதியும், கீழ்த்திசைக் கலா நிபுணருமான சர் வில்லியம் ஜோன்ஸ் என்பார், "ஏஷியாடிக் சொசைட்டி ஆஃப் பெங்கால்" என்ற கழகத்தை நிறுவினர். வல்லார் பலரைக் கூட்டி, கலை சாஸ்திரங்களை வளர்ப்பதே அக் கழகத்தின் நோக்கமாயிருந்தது. அக் கழகத்தின் முதல் தலைவரான அவர், கழகத்தின் நோக்கத்தைப் பற்றிப் பின் வருமாறு கூறியுள்ளார்.

"ஆராய்ச்சி விசாரணைகள், ஆசியாக் கண்டத்தின் எல்லைக்குள் மனிதன் அல்லது இயற்கையின் விளைவுகளைப் பற்றியதாயிருக்கும்." இக்கழகத்தின் ஆதரவில் "ஆசிய ஆராய்ச்சிகள்" (Asiatic Researches) என்ற பெயரில் சுமார் இருபது நூல்கள் வெளியாயின. 1936 ல் அரச சாசனம் அளிக்கப் பெற்று இராயல் ஏஷியாடிக் சொசைடி எனப் படுகின்றது. பௌதிக இரசாயனத் துறையில் இக்கழகம் அதிகமாக ஈடுபட வில்லை என்றாலும், இந்தியன் சயன்ஸ் காங்கிரஸ் அஸோஸியேஷனையும், நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயன்சையும் தோற்றுவித்த பெருமை இதைத்தான் சாரும்.

இந்திய விஞ்ஞானக் கழகம்: கல்கத்தாவில் இருந்த பிரபல வைத்திய நிபுணரான டாக்டர் மகேந்திரலால் சர்க்கார் 1876ல் விஞ்ஞான வளர்ச்சியின் பொருட்டு "இந்தியன் அசோஸியேஷனைத்' தோற்றுவித்தார். தொழில் முறையில் வைத்தியராயினும் டாக்டர் சர்க்கார் பௌதிகத்துறையில் நுணுகிய ஆராய்ச்சிகளைச் செய்து வந்தார். ஏழுவருட காலம் போராடியும், கிளர்ச்சி செய்தும் முயன்றதன் விளைவாக, மேனாட்டு முறையில் விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம் ஒன்றை எளிய முறையில் நிறுவினர். 1870-ல் அவர் வெளியிட்டுள்ள பிரகடனத்தின்படி, 'இந்தியர்களை அழைத்துப் பலதுறைகளிலும் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதே" அதன் நோக்கமாம்.

அவருடைய தீர்க்கதரிசனம் இன்று உண்மை யாயிற்று. விஞ்ஞானத்தின் பெருமையை அறியாத நிலையில் நாடு இருந்தபோது, அதன் தேவையை உணர்ந்து, வேண்டுவன செய்தார். பௌதிகம். இரசாயனம், தாவரவியல். விலங்கியல் சம்பந்தமானவைகளைப் பற்றி முறையாகச் சொற்பொழிவுகளும்

சோதனைகளும் நடத்தப் பட்டு வந்தன. பின்னர் ஆராய்ச்சித் துறைகள் வகுக்கப் பட்டன. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தான், உலகப்பிரசித்தி பெற்ற சர் சி. வி. இராமன். Dr. K. S. கிருஷ்ணன் முதலியோர், இச் சங்கத்துடன் தொடர்பு கொண்டனர். "இராமன் விளைவு" என உலகப் பிரசித்தி பெற்ற ஒளியின் சிதறல் பற்றிய ஆராய்ச்சி வேலைகள் இச்சங்கத்தின் சோதனைக் கூடத்தில்தான் நடைபெற்றன. இங்கே தான் டாக்டர் கிருஷ்ணனும் ஸ்படிக பௌதிகம், ஸ்படிக காந்தம் பற்றிய ஆராய்ச்சிகள் செய்து அரசியல் கழக உறுப்பினர் பதவியைப் பெற்றார். சர் லாரன்ஸ் ப்ராக் என்பாரின் மாணவரும், இப்பொழுது மகேந்திரலால் சர்க்கார் பெயரில் உள்ள பௌதிக சாஸ்திரப் பேராசிரியருமான Dr. K. பானர்ஜி என்பார் எக்ஸ்-ரே ஸ்படிக தத்துவத்தில் நிபுணரானவர்.

இலண்டனில் உள்ள இம்பீரியல் காலேஜ் ஆ'ப் ஸயன்ஸ் அண்ட் டெக்னலஜியைப் பின்பற்றிய முறையில் 1914-ஆம் வருஷம் கல்கத்தாவில் ஸயன்ஸ் அண்ட் டெக்னலஜி யூனிவர்சிடி காலேஜ் நிறுவப் பட்டது. இந்திய விஞ்ஞான வளர்ச்சியில் இது ஒரு முக்யகட்டமாகும். இச் சமயம் கணிதத்தை விரும்பிப் படித்த ஒரு சட்ட நிபுணர் விஞ்ஞான அபிவிருத்தியில் ஈடுபட்டார். கல்கத்தா பல்கலைக் கழகத்து மாணவரத்தினமான சர். ஆஸுடோஷ் முகர்ஜி கணிதத்தால் கவரப்பட்டார். தாம் கண்ட கணித முடிவுகளை (differential equation-ஐப் பற்றியது). ஏஷியாடிக் சொசைடியின் பத்திரிகை மூலம் வெளியிட்டார். ஆராய்ச்சிகள் செய்யப் போதிய வசதிகளின்மையால், வருமானமிக்க தம் தொழிலை மேற்கொண்டு கல்கத்தா நீதி மன்றத்தில் ப்யூனி ஜட்ஜ் பதவியை ஏற்றார்.

சர். ஆஸு டோஷ் கல்கத்தா சர்வகலாசாலையின் துணைத் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்ட சமயத்தில், அப் பல்கலைக்கழகம் வெறும் பரிட்சைக் கூடமாக இருந்ததேயன்றி, மேல் படிப்பு, ஆராய்ச்சி முதலியவற்றிற்குப் போதிய வசதிகளின்றியே யிருந்தது. ஆயினும், ஒருமுகமான முயற்சியில் ஈடுபட்டுப் பல கஷ்டங்களை எதிர்த்துப் போராடி, ஒரு விஞ்ஞானக் கல்லூரியை நிறுவினார்.

கல்கத்தாவில் இருந்த பிரசித்திபெற்ற சர். தாரகாநாத் பாலிட், சர். ராஷ் பெஹாரி கோஷ் இவர்களால் அளிக்கப் பட்ட பெரும் நன்கொடையின் பலத்தால் தான் இக்கழகம் நிறுவப்பட்டது. "பாலிட்" அவர்களின் பெயரால் பௌதிக ரசாயனப் பேராசிரியர் பதவி உருவாக்கப்பட்டது. "கோஷ்" பெயரில் ரசாயனம், பௌதிகம், சார்புக் கணிதம், தாவர சாஸ்திரத் துறைகளுக்கும் பேராசிரியர் பதவிகள் சிருஷ்டிக்கப் பட்டன.

கைராவைச் சேர்ந்த குமார குருப்பிரசாத் சிங்கின் சொத்துக்களைப் பரிபாலனம் செய்யும் தர்மகர்த்தாக்கள், பௌதிகம், இரசாயனம், எழுத்தியல், இந்திய நுண் கலைகளுக்குப் பேராசிரியர் பதவிகளைச் சிருஷ்டித்தனர். ஆனால் இந்திய சர்க்காரோ வருஷத்திற்கு ரூ. 12,000 மட்டுந்தான் அளித்தனர். இது ஒரு பேராசிரியர் பதவிக்கும் போதாது.

இன்று புகழேணியில் ஏறிக் கொண்டிருக்கும் இந்திய விஞ்ஞானிகள் அநேகமாக மேற்கூறப்பட்ட கழகத்தில்கொஞ்சகாலமாவது இருந்து ஆராய்ச்சி செய்திருக்கின்றனர்.

நாளடைவில் பம்பாய், மதராஸ், அலஹாபத், லாஹூர், டெல்லி, ஆந்திரா, டாக்கா சர்வகலாசாலைகளிலும் விஞ்ஞானத்துறை தனிப்பட்ட முறையில் வகுக்கப்பட்டது. எங்கும் விஞ்ஞானம் தேச முக்கியத்துவம் வாய்ந்தது என்ற உணர்ச்சி பரவிற்று. முயற்சிகள் வெற்றிபெறவே விஞ்ஞான ஆராய்ச்சிகளின் இலட்சியங்கள் முன்னேறின. தனிப்பட்டவர்கள், முதலாளிகள், வியாபாரிகளின் ஆதரவும் கொண்டே வெற்றி பெற்றது. ஆனால் இன்று நம் சர்க்காரும் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு ஆதரவளித்து வருவது வரவேற்கத் தக்கதாகும். பம்பாய்ப் பல்கலைக் கழகத்தில் இரசாயனத் தொழிற்பகுதி விஸ்தரிக்கப்பட்டு, பலபதவிகள் சிருஷ்டிக்கப் பட்டுள்ளன. இதற்காகப் பம்பாய் ஆலை முதலாளிகள் 15. 6 லக்ஷம் ரூபாய்

நன்கொடை அளித்துள்ளனர். ஆனால் சர்க்காரின் மான்யம் மட்டும் ரூ 50,000 என்ற அளவிலேயே நின்று விட்டது. பெங்களூர் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஸயன்ஸ், கல்கத்தா போஸ் ஆராய்ச்சிக் கூடம், பம்பாயில் உள்ள ராயல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஸயன்ஸ், டாடாவின் அடிப்படை ஆராய்ச்சிக் கழகம் முதலியவைகளைப்பற்றி இன்று தனிப்பட்ட முறையில் அறிய அவசியம் உண்டாய் விட்டது.

1911-ல் சார்பு விஞ்ஞானம் ஆராய்ச்சி முதலியவைகளைப் பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இன்டியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஸயன்ஸ், ஜெம்ஷெட்ஜி டாடாவின் தீர்க்கதரிசனம், அபரிமிதமான நன்கொடைக்குச் சான்ருக இருக்கின்றது. காலஞ் சென்ற மைசூர் திவான் ஸர் சேஷாத்ரி 5-லட்சம் ரூபாய் அளித்துள்ளார். முதன் முதவில் Dr. மாரிஸ் ட்ராவர்ஸ் இக்கழகத்தின் அதிபராயிருந்தார். பௌதிகம், இரசாயனம், மின்சாரம் முதலிய துறைகளில் ஆராய்ச்சி செய்து வந்த இக்கழகம், யுத்தம் ஆரம்பித்த முதல் ஆகாய விமானத் தொழிலிலும் தன் கவனத்தைச் செலுத்திற்று. மேலும் உலோக தத்வம், Internal Combustion Engines (உள் எரி இயந்திரம்) பற்றிய ஆராய்ச்சிகளும் நடைபெறுகின்றன. வைரங்களைப் பற்றிய ஆராய்ச்சிகளை இன்று நடத்திவரும் சர் C. V. இராமன், ட்ராவர்ஸ்க்குப்பின் இக்கழகத்தின் தலைவர் பதவியை ஏற்றனர். புரபஸர் மேகநாத் ஸாஹாவைத் தலைவராகக் கொண்ட நிபுணர் குழு, "ஹைவால்டேஜ் என்ஜினீரிங் லபாரடரி" ஒன்று நிறுவத் திட்டம் வகுத்து வருகிறது. இம்மாதிரியான பெரிய திட்டங்களைத் தைரியமாக எடுத்து உருவாக்கும் Sir J. C. கோஷ் என்னும் வங்காளிதான் இன்று இக் கழகத்தின் தலைவராகப் பணியாற்றுகின்ருர்.

சர். ஜகதீச சந்திரபோஸ் பெயருடன் இணைக்கப்பட்டுள்ள போஸ் ஆராய்ச்சிக் கூடம் சர்க்கார் மான்யம் பெற்று வருகின்

ஆயுர்வேத வித்வான் 'B.V. பண்டிட்' அவர்களின்
சத்வைத்யசாலை:-நஞ்சன்கூடு.
"நஞ்சன்கூடு பல்பொடி"
I.D.L நெ 61, மெடிகேடட் [பல் உபாதைகளுக்கு]
குழந்தைகளுக்கு
காஸ்மஸ் — கஸ்தூரி மாத்திரை
கர்ஜன் — கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ் — பேதியாக மாத்திரை
ஜ்வரேக் [எவ்வித ஜ்வரங்களுக்கும்]
ஜிர்சிப் [அஜீர்ண பித்த சமனி]
கூலெக்ஸ் [உஷ்ண சமன ஸ்நான தைலம்]
கவனிப்பு:- மாதர்களுடைய சூதக, கெர்ப்பாசய உபாதைகளுக்கு விபரம் எழுதி சிகிச்சை பெறலாம்
ஸான்டலக்ஸ் நறுமண சரும ரக்ஷிணி முகப்பரு, புண், சொறி குணமடைய.
காஷ்மீர்-குஸும் கூந்தல் செழிப்புக்க நீங்களே தைலம் செய்ய உதவுகிறது.
மைசூர் "பிரேமலீலா" உயர்தர ஊதுபத்திகள்
'அகர் ஸ்பெஷல், ஜவாது, ஜெயலக்ஷ்மி'
யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர் தெரு, மதறஸ்.

றது. அதிதீவிரகிரணம், தாவர உடற்கூறு, தாவர உணர்ச்சி, நார் ஆராய்ச்சி முதலிய துறைகளில் முன்னேறி வருகின்றது.

இரண்டு வருடத்திற்குமுன் டாடாவின் பெயரால் நிறுவப் பட்ட டாடா அடிப்படை ஆராய்ச்சிக் கழகம் Dr. H. J. பாபாவைத் தலைவராகக் கொண்டு முன்னணிக்கு வந்து விட்டது.

சமீபத்தில் விஞ்ஞான ஆராய்ச்சித் துறையில் ஒரு புரட்சி உண்டாயிற்று. நாட்டின் பல பாகங்களில் இருந்து கொண்டு தனிப்பட்ட முறையில் ஆராய்ச்சி செய்யும்முறை மாறி ஆராய்ச்சிக் கூடங்களில் பலர் ஒன்றுகூடி ஆராய்வது இன்றைய திட்டமாய் விட்டது. ஆனால், பல சிறந்த உண்மைகளைக் கண்டு பிடித்த பெருமை தனிப்பட்ட நிபுணர்களையே சாரும் என்பதை மறுக்க முடியாது.

எல்லாச் சாஸ்திரங்களையும்விடக் கணிதத்திலும் பௌத்திகத்திலும் தான் அதிக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தியனுடைய மூளை கண்ணுக்குத் தெரியாத பொருள்களை ஆராய்வதில் தான் ஈடுபடுகின்றது. கணித மேதை இராமனுஜத்தை யாரால் மறக்க முடியும்? கலாசாலை அல்லது பல்கலைக் கழகப் படிப்பு இல்லாமலேயே உழைத்து உழைத்து ஓய்ந்த இராமானுஜத்தின் கணித மூளை, அவரை உலகுக்கறிவித்த ஹார்டி அவர்களையே பிரமிக்கச் செய்தது. அவருடைய கலப்பற்ற கணித ஆராய்ச்சிகள் கணித உலகத்திற்குப் புதிராக விளங்குகின்றன. இராமானுஜம் போன்ற மற்றொரு கணித நிபுணரை நம் நாடு தோற்றுவிக்க வில்லை என்றாலும் நிபுணர்களுக்குப் பஞ்சமில்லை. கல்கத்தா, காசி, பெங்களூர் டாக்கா, முதலிய இடங்களில் கணித நட்சத்திர மண்டலங்களை இன்றும் காணலாம். கணேஷ் பிரசாத், விஜயராகவன், K. S. K. அய்யங்கார், மாதவராவ், N.R. சென், S. சிவசங்கர நாராயண பிள்ளை. முதலியவர்கள் இன்று நாட்டின் கொடியைத் தாங்குபவர்களாக உள்ளார்கள்.

M. N. சஹா, Prof. S. N. சென், Dr. H. J பாபா, Prof. சந்திரசேகரன் Dr. D. S. கோதாரி போன்றவர்கள் கணித பௌதிகத்தில் சிறந்துள்ளனர்.

சாஹா கண்டறிந்த (thermal inoisation) வான சாஸ்திரத்துக்கு வழிகாட்டுவதாக உள்ளது.

"வான பௌதிக ஆராய்ச்சியில் கலிலியோ காலத்தினின்று வெளியான பத்து உண்மைகளில் ஸாஹா கண்டறிந்ததும் ஒன்றாகும்" என்று Sir ஆர்தர் எட்டிங்டன் கூறுகின்றார். சமீப காலத்தில் அவர் கண்டுபிடித்த பௌதிகப் பேருண்மை உலகத்து அறிஞர்கள் பலருடைய கவனத்தை ஈர்த்துள்ளது. சூரியனுடைய பரப்பின்மேல் உள்ள பொருக்கைப் பற்றிய (solar corona) இக் கொள்கையின்படி யூரேனியத்திலுள்ளதுபோல் அணுப்புரட்சி சூரியனிலும் நடந்து வருகின்றதாம். இக் கொள்கை வான பௌதிகத் துறையில் பல ஐயங்களைப் போக்குகின்றதாம்.

கல்கத்தா விஞ்ஞானக் கல்லூரியின் ஆதரவில் கட்டப்பட்டுள்ள அணு ஆராய்ச்சிச்சாலை இந்தியாவில் சிறந்த முறையில் கட்டப்பட்டுள்ளது. சமாதான காலத்தும் யுத்த காலத்தும் பெரிதும் பயன்பட்டு வந்த cyclotrone என்னும் அணுவுடைப்பான் இங்கேதான் இருக்கின்றது. இது Prof. E. O. லாரன்ஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தினின்று இக்கருவி பரமாணு, வைத்திய ஆராய்ச்சிகட்கும் அணுகுண்டு உற்பத்திக்கும் பயன்பட்டு வருகின்றது. ஜனரல் மக் ஆர்தரின் ஆணைப்படி நாசம் செய்யப்பெற்ற ஐந்து ஜப்பானிய அணு உடைக்கும் கருவிகளுக்குப்பின் இன்று கிழக்கு நாடுகளில் இருக்கும் அணுவுடைப்பான் கல்கத்தாவில் உள்ளதேயாம். கல்கத்தா காலேஜ் ஆப் சயன்ஸ்ஸில் கைரா பௌதிக ஆசிரியரான S. N. போஸ் புதிய புள்ளி விவரக் கணக்குகளை எடுத்தார். இதை அறிஞர் ஈன்ஸ்டின் விரிவு படுத்தினர். மாக்ஸ்வெல்—போல்ட்மன் கண்ட பேரணு, ஃபெர்மி—டிரக் கண்ட எலக்டிரான் ஆராய்ச்சிகளைப் போன்று போஸ்—ஈன்ஸ்டின் புள்ளி விவரங்கள்

புரோடான்களைப் பற்றி விவாதிக்கின்றன.

அதிதீவ்ரகிரணங்கள் (Cosmic Rays) அடிப்படைப் பொருட் தத்துவத் துறைகளில் ஆராய்ச்சி மூலம் Dr. H. J. பாபா இன்று உலகம் புகழும் பிரசித்தி அடைந்துள்ளார். பாபா பெரிதும் மேற்கு நாடுகளிலேயே தம் ஆராய்ச்சிகளைச் செய்து வந்ததால் அவரை மேற்கத்திய மூளை என்று அழைப்பது பொருந்தும். இந்திய மூளைக்குத்தக்க வசதியளிப்பின், அது எவ்வளவு சிறந்த வேலையைச்செய்யும் என்பதையே இது காட்டும்.

யெர்க்ஸ் வான கூடத்தில் இன்று வானபௌதிகக் கூட்டுப் பேராசிரியராக உள்ள Prof S. சந்திரசேகரன், வானபௌதிகத்தில் பல முக்கியமான உண்மைகளைக் கண்டுபிடித்துள்ளார். (Introduction to stellar structure) என்னும் நூல் அவருடைய ஆராய்ச்சிகளில் ஒரு கூறுகும். விண்மீன்கள் மீன்கொத்துக்கள், சுழல் நெபுலிக்களைப் பற்றிய ஆராய்ச்சிகளின் மூலம் பிரபலம் அடைந்த இவ்வறிஞர்க்கு, பிறந்த நாட்டிலேயே தக்க பதவியும் வசதியும் கிடைக்காதது வருந்தத் தக்கதாம். அவரைத் தாய் நாட்டிற்குத் திருப்பியழைத்து வானசாஸ்திரக் கூடங்கள் நிறுவ முயற்சிகள் நடைபெறுகின்றன.

Dr. D. S. கோதாரி, Dr. R. G. மஜூம்தார் முதலியவர்களும் வான சாஸ்திர நிபுணர்கள். Dr. M. N. சாஹா நட்சத்திரங்களின் உட்கிடைப் பொருள், சக்தி, உற்பத்திபோன்ற ஆராய்ச்சிகளைச் செய்துள்ளார். சோதனை முறைப் பௌதிகத் துறையில் Dr. D. M. போஸ் காந்தம் உப்புக்களின் நிறம், தீவிர ஒளிக்கதிர் முதலியவைகளைப் பற்றியும், Prof. S. K. மித்ரா, (ionosphere) தீவ்விர வெடியுப்பு அமிலம், இரவில் வானமண்டலம் முதலியவைகளைப்பற்றியும் ஆராய்கின்றனர். காலஞ்சென்ற Prof. B. B. ரேயின் (x-ray) ஒளி யாராய்ச்சியும், Dr. S. பகவந்தின் ஒளிமாலை யாராய்ச்சியும் Dr. R. N. கோஷ். Dr. S. C. சர்க்கார் முதலியவர்களுடைய ஒளி யாராய்ச்சிகளும் சிறந்தவைகளாம். புள்ளி விவரங்களைப்பற்றிய விஞ்ஞானம் நம் நாட்டிற்கே புதியதாகும். அதற்காக இந்திய புள்ளி விவரக் கழகத்தைத் தக்க முறையில் நிறுவி அத்துறையில் சிறந்த கோஷ்டியை நிறுவிய பெருமை Prof. P. மஹலாநோபிஸ் என்பவரைச் சேரும். இரசாயனத் துறையில் Sir P. C ரே செய்த ஆராய்ச்சிகளையும், அதற் கிலக்காக அவருடைய Hindu Chemistry-யையும் யாரால் மறக்க இயலும்? Sir J. C. கோஷ், Sir S. S. பாட்நகர், Dr. J. M. முகர்ஜி Dr. K. வெங்கடராமன், Dr B. C. குஹா முதலியவர்களையும், தாவர ஆராய்ச்சியில் Prof. பிர்பால் ஸஹானியையும் விஞ்ஞான மாணவன் மறக்க இயலாது. பஞ்சாப் உப்புத் தொடரின் வயதைக் குறித்து அவர் ஸஹானி, செய்துள்ள ஆராய்ச்சி உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

விஞ்ஞான ஆராய்ச்சியில் இந்தியா இன்று தன் உரிய நிலையில் நிற்கின்றது. நம் நாடு அளித்த விஞ்ஞான அறிவை உலகமே அங்கீகரித்துள்ளது. அமெரிக்கா ஐரோப்பா போன்ற அளவுக்கு ஆராய்ச்சிகள் செய்யவில்லை என்பது உண்மை. அவைகளுக்கு முன்னுல் ஒளி பெறவில்லை என்பதையும் புறக்கணிக்க முடியாது. காரணம், விஞ்ஞான ஆராய்ச்சிக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் போதிய அளவுக்கு இல்லாமையே. மேலும் இன்று வரை அடிமைகளாகத் தானே கட்டுண்டிருந்தோம்.

விஞ்ஞான ஆராய்ச்சி என்பது ஆசிரியர்கள் மட்டும் விரும்பும் ஆசைப் பொருள் அல்ல. இன்று தேசீய, சமூகத் தேவையாக நிற்கின்றது. சமூகமும் அரசும் இதை உணருமானுல் இந்திய விஞ்ஞானம் சிறந்து ஒளிவிடும் என்பதில் ஐயமில்லை. இச் சமயம் இடைக்கால சர்க்கார் தம் பொறுப்பை உணர்ந்து நேஷனல் கெமிகல் லெபாரடரியையும், நேஷனல் பௌதிக லெபாரடரியையும், அணு ஆராய்ச்சிக் கூடங்களுக்கான முயற்சிகளையும் எடுத்து உழைத்து வருவதைப் பெருமையுடன் சிந்திப்பது அவசியமாகும்.

—X—

ஆர்டிக் வீரன் அமண்ட்ஸன்

[1872—1928]

யோகி சுத்தானந்த பாரதியார்

ஒரு நாடு பெருமைபெற வேண்டுமானால் வீரதீரர்களை உண்டாக்க வேண்டும். உலகம் போற்றும் புதுமைகளைக் காணவேண்டும். சும்மா பாசி பிடித்த பழம்பசலிக் கொள்கைகளையே பற்றிக் கொண்டிருக்கக்கூடாது. காலத்திற்கேற்றபடி தைரியமாக முன்னேற வேண்டும்.

இந்த முன்னேற்ற வீறு வெள்ளைக்காரரிடம் அதிகம். அதனாலேதான் அவர்கள், பல நாடுகளிலும் சிவப்புமை தீட்டி உரிமையுடன் ஆளுகிறார்கள். நமது சுதந்தர இந்தியா இன்று பாகிஸ்தான் வீசும் கொடிய இரத்தப்புயலில் தத்தளித்தாலும், நாளை, சிங்கம்போல் எழுந்து வீரப் பொதுநலங்களைச் செய்ய வேண்டும். அப்போதே அதை உலகம் மதிக்கும்.

சுதந்தர நாட்டின் வியன்செயல்களில் யாத்திரைக் காண்பு ஒன்று. அதாவது வீரர்கள் உலக யாத்திரை செய்து இதுகாறும் காணாத நாடுகளைக் கண்டு, அங்கே தேசக்கொடியை நாட்டி, சுதேசத்தை விசாலமாக்குதல். லிவிங்கஸ்டன், காப்டன் குக் முதலியோர் இத்தகைய யாத்திரைக் காண்புகளில் சரித்திரப் புகழ் பெற்றனர்.

சென்ற பல ஆண்டுகளாகத் துருவ முனைகள் வெள்ளைக்காரர் வீரயாத்திரைக்கு இலக்கா யிருக்கின்றன. துருவங்களில் கொடி நாட்ட முயன்றவர் பலர். அவருள் அமண்ட்ஸன் மிகப் பெரிய வீரர்.

அமண்ட்ஸன் வாழ்வெல்லாம் பனிப் புயலுடன் போர் புரிந்தவர். சாவை அலட்சியம் செய்தவர். உடம்பைவிடத் தம் உயிர்ப்பணியே இனிதெனக் கருதிய தீரர்.

அவர் 1872-ல் ஆஸ்லோவில் பிறந்தார். நார்விக் பாஷையில் பெரும் புலமை பெற்றார். அவர் தந்தை படகு கட்டும் தொழிலாளி. பரம ஏழை. அமண்ட்ஸன் பிள்ளைப் பிராயத்திலேயே துடுப்புப்பிடித்து மீன்படகு தள்ளிக் கொண்டே கடலில் வெகு தூரம் போவான். குளிர்காற்று வாடை என்றால் அவனுக்குக் கொண்டாட்டம். பனிக்கும் தனக்கும் ஏதோ உறவு இருப்பதாக அவன் நினைத்தான். பையன் படிக்கத் தெரிந்ததும், பிரயாண வீரர் நூல்களையே ஆவலாகக் கற்றான்.

தகப்பனார் திடீரென்று இறந்து போனார். அப்போது அமண்ட்ஸெனுக்கு வயது பதினான்கே. தாயார் அவனை டாக்டருக்குப் படிக்கவைத்தாள். வெகு பாடுபட்டுச் சம்பளந் தந்தாள். ஆனால் வாலிபனுக்கு அந்தப் படிப்புப் பிடிக்கவில்லை. அம்மாளுக்காகவே படித்தான். அவன் கவனமெல்லாம் கடலில் இருந்தது. எவ்வளவு குளிர் பனியையும் வைராக்கியமாகத் தாங்கப் பழகினான். அடிக்கடி வீட்டுக்குத் தெரியாமலே பனி மலைகளில் ஏறித் திரிந்தான். தன் சகாக்களுக்கெல்லாம் வட துருவத்தையும் தென் துருவத்தையும் கண்டு அதில் நமது தேசக் கொடியை நடவேண்டும் என்று சொல்லி வந்தான். அவர்களை அடிக்கடி மலையேறி அழைத்துச் சென்று அங்கே குகைகளிலும் கணவாய்களிலும் சுற்றித் திரிந்து வருவது அவனுக்கு விளையாட்டாயிருந்தது. ஒருதரம் ஆஸ்லோவிலிருந்து மலையேறி, கரடுமுரடான பாறைகளின் வழி தப்பி அபாயமான இடுக்குகளில் அகப்பட்டுக்கொண்டான். அந்த அபாயத்தைக் கண்டு தோழர் அஞ்சினர்.

அமண்ட்ஸன் 'வீரனுக்கு எங்கும் வழியுண்டு......' என்று சுற்றிப் பார்த்து ஒரு காட்டு வழிகண்டு நண்பரை அழைத்துக்கொண்டு பெர்ஜன் என்ற ஊருக்கு வந்துவிட்டான். அங்கே ஒரு செல்வரிடம் தன் வீரத் துணிவைச் சொன்னன். அச்செல்வர் மிக மகிழ்ந்து அவனையும் நண்பரையும் ஆஸ்லோவுக்கு அனுப்பினர்.

தாயார் இறந்ததும் அமண்ட்ஸன் வைத்திய வேலையை விட்டான். அதில் அவன் ஊன்றிக்கொண்டிருந்தால் பெரிய பணக்காரனுகி யிருக்கலாம். எனக்குப் பணம் தேவையில்லை. ஆர்டிக் நாடுதான் தேவை என்றுன் வாலிபன். டாக்டருக்குப் படித்தவன் படகோட்டியானுன். படகு செய்வது முதல் ஓட்டுவது வரையில் எல்லாம் கற்ருன். 1897-ல் ஜெர்லாஷ் என்பவர் ஒரு படகு கட்டித் தென்முனைக்குப் பயணமானுர். அதில் அமண்ட்ஸனும் சேர்ந்து தன் வாழ்வின் பெருங் கனவை நிறைவேற்றப் புறப்பட்டான். ஆர்டோவ்ஸ்கி என்ற யாத்திரைப் புலவனிடம் எஸ்கிமோ பாஷை நடையுடைகளைக் கற்ருன். படகு டெரடெல் ப்யூகோ தாண்டியதும் பனி மலைகள் சூழ்ந்தன. மேலே செல்ல முடியவில்லை. ஒரு பனித் தீவில் சரண்புகுந்தான். அப்போது ஆர்டிக் இரவுகண்டது. முகமறியாத பனித் தீவில் நிராதரவாய் ஓராண்டு தவித்தான் வீரன். உண்ண மீன், உடுக்க வெண் கரடித்தோல். பனிக் கட்டிகளை அடுக்கி அவற்றிடையே படுத்தான். வெண்கரடி போலவே அவனும் வாழ்ந்தான். ஆனுல் இந்தக் கொடிய அனுபவத்தால் தென்முனைகாணும் உறுதி வந்தது.

மறுபடியும் புறப்பட்டான் அமண்ட்ஸென். தைரியமுண்டு; பணமில்லை, ஆள் கட்டில்லை. அரசாங்க உதவியில்லை. சுகவாசிகள் சிரித்தனர். 'போடா பைத்தியமே, நீயாவது அதைச் செய்யவாவது' என்றனர். வீரன் கலங்கவில்லை, எப்படியோ படகோட்டிக் கொஞ்சம் பணம் சம்பாதித்து, ஐம்பது டன் உள்ள ஒரு சிறு கப்பலைச் செய்து கொண்டான். ஒருநண்பனுடன் இரகசியமாகப் புறப்பட்டான். அவனைத் தடுக்கப் பல நண்பர்கள் வந்தனர். ஆனுல் ஆள் நள்ளிரவில் தப்பிவிட்டான். கிரீன்லாந்தைத் தாண்டி, மிகவும் கடினமான பனிப்பாதைகளைத் தாண்டி, பசிபிக் கடலை எட்டினுன். இடையே அமெரிக்காவில் இறங்கி ஸான்பிரான்ஸிஸ்கோவில் பிரசங்கம் செய்து, போதிய பணம் சம்பாதித்துக்கொண்டான். ஸான்பிரான்ஸிஸ்கோ கோல்டன்கேட் பார்க்கில் இன்னும் அவன் உருவம் உள்ளது. அங்கேதான் அவன் தனது பிரயாண அனுபவங்களைச் சொற்பொழிந்தான்.

இப்படியெல்லாம் வருந்தித் தன் இலட்சியத்தை அடையப்போகும் தறுவாயில் கமாண்டர் பெரி என்பவன் போட்டி போட்டுத் தென்முனைக்குச் சென்றுன். அவன் தென்முனையில் கொடிநாட்டி விட்டதாகவும் செய்தி வந்தது. அமண்ட்ஸன் மனந்தளர்ந்து திரும்பினுன். எனினும் மறுமுறை யாத்திரைசெய்து புதிய இடத்தில் கொடிநடுவதென்று முனைந்தான். இச் சமயம் நார்வே அரசாங்கம் அவனுக்குச் சிறிது உதவி செய்தது.

யாரிடமும் சொல்லாமல் ஸ்காட் என்ற நம்பிக்கையுள்ள நண்பனுடன் அமண்ட்ஸன் படகேறிப் புறப்பட்டான். அவன் பேரிங் முனைக்குப் போவதாகவே பலர் கருதினர். நெடுந்தொலை சென்ற பிறகுதான் அவன் மனதைவிட்டுப் பேசினுன்.

"நண்பர்களே, உலகில் போட்டி பொருமைகளால் நான் கஷ்டப்பட்டவன். நான் மேற்கொண்ட காரியத்தைக் கூட வெளியே சொல்ல முடியாதபடி பொருமைப் புஞ்சங்கள் என்னைத் தொல்லைசெய்தன. அதனுலேதான் இவ்வளவுதூரம் வருமட்டும் மௌனம் சாதித்தேன். இனி நம்மைத் தடுப்பாரில்லை.

"இலட்சியம் கைகூடுமட்டும், நாம் உறுதிகொண்டு காலப்புயலை எதிர்த்துப் போராடவேண்டும். நமது தேசக்கொடியைத் தென் துருவத்தில் நாட்டிய பிறகுதான் நாம் மனிதர். காலம் பொன்னினும் அரியது. ஒரு மூச்சுக்கூட வீணுகாமல் நாம் கொண்ட காரியத்தை நிறைவேற்றி நமது தேசத்திற்குப் புகழ் தருவோம்."

இதைக்கேட்ட நண்பர் மனவுறுதி பன்மடங்கு அதிகமானது. பனிப்பாறைகளில் தத்தளித்தும் மனந்தளரவில்லை. திமிங்கிலங்கள் அங்காங்கும் அஞ்சாமல் திசையறிந்து படகோட்டினர். குறித்த நேரத்தில் குறித்ததைச் செய்தனர். இவ்வளவு சிரமத்தோடும், அமண்ட்ஸன் காலை மாலை தொழுகையை விடவில்லை. அபாயம் வரும்போதெல்லாம் கடவுளை நினைத்துவணங்கினான்.

14—12—1911 ஆர்டிக் வட்டம் காலைக் கதிரொளியால் மின்னுகிறது; அமண்ட்ஸன் "எமக்கு வழிகாட்டிய கடவுளே, உன் பெருமை விளங்க, எனது நார்வேத்தாயே உன் புகழ் ஓங்குக" என்று தேசீயக்கொடியைத் தென் துருவத்தில் நட்டான். அந்தக் காட்சியைப் படம் பிடித்திருக்கிறார்கள். அதைக் கண்டால் யாருக்கும் புதிய ஆவேசம் உண்டாகும். நார்வேயில் சிலுவைக் கொடி தன் இலட்சிய உலகில் பறந்த பிறகுதான் அமண்ட்ஸன் நிம்மதியுற்றான். "நண்பர்களே, மனிதவாழ்வு ஒரு லட்சிய விதானம். அரிய லட்சியங்களை அடைந்த வாழ்வே வாழ்வு. சிறுவயது முதல் நான் கண்ட யாத்திரைக்கனவு இன்றே நிறைவேறியது, இந்த நமது கொடியைச் சுற்றி ஒரு ஆர்டிக் அரசு ஏற்பட்டு நான் கண்குளிரக் காண்பேன்." என்றான் வீரன்.

அப்போது இன்பம் உண்டானால் துன்பமும் உண்டு என்று ஒரு பனிப்புயல் எழுந்தது. பனி மழை கொட்டியது. நண்பர் வழுக்கி விழுந்தனர். அவர்களைப் பனிக்கட்டிகள் மூடின. அமண்ட்ஸன் தன் உயிரை மதிக்காமல் நண்பருக்குக் கைகொடுத்தான். ஆனால் தன்னுயிரினும் அரிய நண்பன் ஸ்காட். பனிக்கடலில் தள்ளப்பட்டு மறைந்தான். அவனை நீந்திப் பிடிக்க அமண்ட்ஸன் குதித்து எவ்வளவோ முயன்றும் பயனில்லை.

இந்தத் துக்க சம்பவம் அமண்ட்ஸன் வாழ்வையே மாற்றியது. அவன் வேதாந்தியானான். உலக வாழ்வு அநித்தியம்; இதில்வரும் பொன்னும் புகழும்

நிலையற்றன; மனித வாழ்வின் பயன் பக்தி பரோபகாரம் இரண்டே என் பதை உணர்ந்தான் வீரன்.

அமண்ட்ஸன் ஆஸ்லோவுக்கு வந்ததும் ஏக உபசாரம். முன்னே அலட்சியம் செய்த அரசாங்கம் இப்போது பட்டம் பதவி வழங்கியது. "ஞானவீரன் ஐயா, எனக்குப் பட்டம் பதவி தேவையில்லை. ஒரு சாண் வயிற்றைக் கழுவ எனக்கு ஏன் இவ்வளவு சொத்து" என்று எல் லாம் தர்மம் செய்தான். பூகோளச் சங்கம் தங்கப் பதக்கம் அளித்தது. பதக்கத்தை மாட்டிக்கொண்டு நான் அழகு பார்க்கவா பிறந்தேன் என்று அதையும் திருப்பி அனுப்பினான். புகழ் மொழிகள் வந்து குவிந்தன. எல்லாம் கிழித்துக் காற்றில் தூவினான். முகத் துதி செய்யும் திருவாளர்களை ஒதுங்கித் தனியே வாழ்ந்தான்.

கைசர் அவனுக்குப் பரிவட்ட மனுப்பி னார். "ஐயா நீர் மண்வெறியர்; உம்மிடம் நான் பரிசு வாங்குவது பாபம். என் எளிய வாழ்வே எனக்குப் போதும்" என்றான். தன் மட்டுக்கு வறுமையில் லாது பிழைக்கவும், மறுபடியும் தென் முனைக்குப்போய் நிலத்தை வளைத்துத் தாய்நாட்டிற்குத் தரவே சிறிது பணம் சேர்த்து வைத்தான். 1922-ல் புறப்பட் டான். துருவத்தை அணுகும்போது அவன் கப்பல் முழுதும் பனியில் உறைந்து போனது. கஷ்டப்பட்டுத் திரும்பினான்.

நீண்டகாலம் சிந்தித்தான்; ஒரு விமா னம் அமைத்தான். அதுவும் பனி நாடு களில் சரியான வேலை செய்யவில்லை. பிறகு மிகவும் லேசான விமானம் செய்து கொண்டு புறப்பட்டான். லிங்கன் எல்ஸ் வொர்த் என்ற அமெரிக்கனும் அவனுடன் வந்தான். எப்படியாவது வட துருவத் தில் கொடிநாட்டவே கிளம்பினான். ஆனால் அதற்குப் பிரைட் என்ற அமெரிக் கன் அங்கே கொடி நாட்டியதாகச் செய்தி வந்தது.

நான் மற்றோரிடம் கொடி நடுவேன் என்று புறப்பட்டான் வீரன்.–18–6–1928; ஒரு லேசான விமானத்தில் நான்குபேர் இருந்தனர். எல்லாரும் வீர உறுதியர். இயற்கையை வெல்லும் வைராக்கியப் புலிகள். அமண்ட்ஸன் "வட துருவத்தில் நான் கொடி நாட்டாது திரும்பேன். என் காரியம் நிறைவேறாவிட்டால் இதுவே எனது கடைசி யாத்திரை" என்றான். அப்பா! கடும் பனி; இப்போதுகிளம்பாதே என்றனர் சிலர். "ஐயா, என் இலட்சியப் பாதையில் நடப்பதே வாழ்க்கை; அதில் இறப்பதே மோட்சம்" என்று சென்ற வீரன்........சென்றதுதான்.........மறுபடி அவனைப்பற்றி யாரும் எதுவும் அறிய வில்லை......

ஆனால் அமண்ட்ஸன் உறுதியும் உழைப் பும் நாட்டன்பும் நார்வேக்கு அளவற்ற பெருமை யளித்தன. தென் துருவத்தில் இன்று நார்வேக் கொடி அவர் பெயரைச் சொல்லி ஆடுகிறது......

இந்தமாதிரி சுதந்தர இந்திய வாலிபர் புதிய நிலங்களைக் கண்டுபிடிக்க வேண்டும்.

காவேரி சந்தா விகிதம்

சந்தா விபரம்	உள்நாடு			ஸிலோன் பர்மா & மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு		
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப்பிரதி ஒன்றுக்கு	0	8	0	0	10	0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், காவேரி,
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

கொலையாளி

க. கணபதி

இரவு நெடுநேரமாகி விட்டது.

ஒரு பிரஞ்சு ராணுவ அதிகாரி கோட்டையின் மதிலில் சாய்ந்தபடி ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். எதிலும் பிடிப்பற்று, ஒருவித அலட்சியத்துடன் ஆயாசமாக வாழ்க்கை நடத்தும் ராணுவ அதிகாரி ஆழ்ந்த சிந்தனையிலீடுபட்டிருப்பது அசாதாரணந்தான். எனினும், வாலிப வயது. நிசப்தமான இரவு. பக்கத்தில் ஒரு ஆரஞ்சு மரம் சிங்காரமாகப் பூத்துக் குலுங்கியது. மேலே நிர்மலமான நீல வானம். எதிரே அழகிய சமவெளிப் பிரதேசம் குளு குளுவெனப் பொழியும் வெண்ணிலவில் குளித்துக்கொண்டிருந்தது. அந்தக் கோட்டை ஒரு உயரமான பாறையில் கட்டப்பட்டிருந்தது. சுமார் நூறு அடிக்குக் கீழே மென்டா நகரம் வாடைக்காற்றின் வேகத்திலிருந்து தப்புவதற்கு அந்தப் பாறையை வலுவில் அணைத்துக் கொள்வது போலக் காட்சியளித்தது. சற்றே திரும்பினான். சந்திரனின் ஒளி வெள்ளத்தில் பூரித்துக் கிளர்ந்தெழும் கடலலைகள் அந்தக் காட்சிக்கு வெள்ளிச் சட்டம் போட்டது போல மின்னின. இந்த ரஞ்சிதமான சூழ்நிலையில் அவன் மெய் மறந்திருந்தது வியப்பல்ல.

கோட்டையிலிருந்த அரண்மனையின் ஜன்னல்களில் இந்நேரத்திலும் விளக்கு வெளிச்சம் தெரிந்தது. விருந்தும் கேளிக்கைகளும் இன்னும் முடிந்தபாடில்லை. இடையிடையே வயலின் நாதமும், ஆண், பெண்களின் வெண்கலச் சிரிப்பொலியும் கடலொலியுடன் கலந்து காற்றில் மிதந்து வந்தன. மென்டாக் கோட்டை ஒரு ஸ்பானிய பிரபுவினுடையது. அவர்தான் இப்போது அதில் தம் குடும்பத்துடன் வசித்து வந்தார். பிரபுவின் மகள் கிளாரா நல்ல அழகி. அன்று மாலை அந்தச் சுந்தரி ராணுவ அதிகாரியைப் பார்த்த பார்வைதான் அவன் நிம்மதியைக் குலைத்து, நிலைகலங்க வைத்து, தற்போது கனவுலகிலாழ்த்தியது. அவள் தான் மூத்தவள். அவளுக்கு ஒரு தங்கையும் மூன்று சகோதரர்களும் இருந்தாலும், லெகான் பிரபுவுக்கு ஏராளமான சொத்து இருந்ததால், அவளுக்குச் சீதனமாக நிறையச் சொத்துக் கிடைக்கும். ஆனால் ஸ்பெயினிலேயே மிக உயர்ந்த குடும்பம் என்று பெருமையடித்துக் கொள்ளும் லெகான் பிரபு, பாரிசில் மளிகைக்கடை வைத்திருப்பவன் மகனாகிய விக்டருக்கு—ராணுவ அதிகாரிக்கு—தன் மகளை மணம் செய்து கொடுப்பாரா! மேலும் பிரஞ்சுக்காரர்களென்றாலே அவர்களுக் கெல்லாம் தீராத வெறுப்பு. பிரஞ்சுக்காரர்களுக்கு எதிராக லெகான் பிரபு நாட்டில் கிளர்ச்சி செய்வதாகச் சந்தேகம் ஏற்பட்டதனால் தான் அந்த மாகாண கவர்னர் அங்கே விக்டரின் தலைமையில் ஒரு பட்டாளத்தை அனுப்பியிருந்தார். எனினும் பிரபுவுக்கு அந்தப் பிரதேசத்தில் அளவற்ற செல்வாக்கு உண்டு. அத்துடன் அவர் பிரிட்டிஷ் மந்திரி சபையுடன் தொடர்பு வைத்துக்கொண்டிருப்பதாயும், அதன் பலனாக எந்த நேரத்திலும் ஆங்கிலேயக்கப்பற்படை அவருடைய உதவிக்கு வரலாமென்றும் ரகஸ்ய செய்தியும் கிடைத்திருந்தது. இங்கிலையில் விக்டர் வந்தபோது ஸ்பானியர் அவனுக்குப் பிரமாதமான வரவேற்பு அளித்த போதிலும் அவன் வெகு ஜாக்கிரதையாகவே அவர்களிடையே காலத்தைக் கழித்து வந்தான்.

மென்டா நகர மணிக்கூண்டில் 12 அடித்தது.

சற்று இங்கு மங்கும் உலாவினான். தன் கண் காணிப்பிலுள்ள பிரதேசங்களைப் பார்த்தான். ஊரின் தோற்றம் வெகு அமைதியாகவே இருந்தது. அவனுக்குத் தெரிந்த வரையில் லெகான் பிரபு அவனிடம் அளவற்ற பிரியமாகவே இருந்தார். ஆனால் அவனுடைய தலைமைக் காரியாலயம் மட்டும் எல்லாவற்றையும் சந்தேகக்கண் கொண்டு நோக்கி, எங்கும் ஆபத்து மறைந்திருப்பதாகவே கருதியது. அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

அன்று ஏதோ உத்ஸவதினம். எனினும் கோட்டையைத் தவிர்த்து மற்ற இடங்களில் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு விளக்கொளி இருக்கக் கூடாது என்று கண்டிப்பாக உத்தரவிட்டிருந்தான். ஆனால் கவனித்துப் பார்த்ததில் நகரமுழுவதும் கொஞ்சம் அதிகமாகவே விளக்குகள் தென்

பட்டன. அத்துடன் இங்கு மங்கும் துப்பாக்கியும் பைனட்டும் நெரிந்தன. எனினும் நகரின் அமைதி குலையவில்லை. அன்று முன் ஜாக்கிரதையாகக் கொஞ்சம் அதிகமாக ரோந்து சுத்தும்படியாகக் கூட தன் ஆட்களுக்கு உத்தரவிட்டிருந்தான். அப்படியிருந்தும்......? யோசிக்க யோசிக்க மூளை தான் குழம்பியது. வாலிப முறுக்கில், அங்கிருந்தபடியே தாவிக் குதித்து, குறுக்கு வழியாகப் போய் சமீபத்திலிருக்கும் ராணுவக் காரியாலயத்தையடைய எண்ணி ஒரு அடி யெடுத்து வைத்தான். பக்கத்தில் ஏதோ அரவம் கேட்டது, கப்பி போட்ட சாலையில் ஒரு பெண் மெதுவாக நடப்பது போல. திரும்பினான். யாருமில்லை. எதிரே சமுத்திரந்தான் வெள்ளித் தகடெனத் தகதகாய்த்தது. அடுத்த கணம் அவன் நெஞ்சம் திடுக்கிட்டது. கண்களையே நம்ப முடிய வில்லை. எனினும் பட்டப் பகல் போல நிலவெறிக்கும் போது மாறாட்டத்திற்கு இடமில்லை. கடலில் வெகு தூரத்தில் கூட்டங் கூட்டமாக அணிவகுத்து நிற்கும் கப்பல்களின் காட்சி தான் அவனைத் திடுக்கிடச் செய்தது. திடீரென்று மின் சாரத்தால் தாக்குண்டவனைப் போல, அதிர்ச்சியுற்று நிலை கலங்கி நின்றான். இந்நிலையில் ஒரு சிப்பாய் மெதுவாக அவனிடம் வந்து, காதோடு காதாக,— "நகரில் நடமாட்டம் அதிகமாக இருக்கிறது. நம்மை இன்றிரவே ஒழித்துவிட ஏதோ சூழ்ச்சி நடக்கிறது. நமக்கு அருகாமையிலேயே.. ...". அவன் முடிப்பதற்குமுன்பே எங்கிருந்தோ 'படார்' என்ற வெடிச்சப்தம்! 'பளீர்' என்று ஒரு வெளிச்சம்! அடுத்த விநாடி சிப்பாயின் தலையில் ஒரு குண்டு!... அவன் பிணமாகி விட்டான்.

திடீரென்று அரண்மனையில் சங்கீதம் ஓய்ந்தது. எங்கே பார்த்தாலும் சொக்கப் பானையைப் போலதீ மூட்டப்பட்டது. சற்று நேரம் எங்கும் அமைதி. பிறகு பலத்த பீரங்கிகளின் முழக்கம். விக்டர் விதிர் விதிர்த்து நின்றான். அவன் முகமெல்லாம் வியர்த்தது. அவனிடம் துப்பாக்கியுமில்லை ஒரு கத்தி கூட இல்லை. அவனுக்கும் அவனுடைய பட்டாளத்திற்கும் முடிவு காலந்தான்: இன்னும் சிறிது நேரத்தில் ஆங்கிலேயர் திரள் திரளாக வந்திறங்கி விடுவார்கள். அவனுடைய பட்டாளத்தினர் இரக்கமின்றிக் கொல்லப்படுவர். அவனும் ராணுவ கோர்ட்டின் முன் நிறுத்தப்படுவான். அது வரையில் உயிரோடிருந்தால்... அவமானந்தான், எனவே கீழேயுள்ள பள்ளத்தாக்கில் அவன் கவனம் சென்றது. அதில் குதித்து.........,

அடுத்த கணம் கிளாராவின் கை அவன் கையை இறுகப் பிடித்தது.

"என் தம்பிகள் உன்னைப்பிடிக்க வருகிறார்கள். பாறையின் அடிவாரத்தில் ஒரு குதிரை இருக்கிறது. ஓடு" என்று படப்புடன் சொன்னாள்.

அப்பொழுதுங் கூட என்ன செய்வதென்றறியாத நிலையில் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான். "போ, போ, ஓடு, நிற்காதே!" என்று கெஞ்சினாள்; பிடித்துத் தள்ளினாள்.

அவள் காட்டிய பாதையில் விடுவிடென்று இறங்கி, ஆடுகளைத் தவிர மனிதனே நடந்தறியாத பாறைகளினூடே தாவித்தாவிச் சென்றான். இடை இடையே— 'அதோ ஓடுகிறான், துரத்துங்கள், பிடியுங்கள்'—என்ற கிளாராவின் கூக்குரலும், வேகமாகப் பின் தொடர்பவரின் காலடியோசையும் கேட்டன, சில குண்டுகள் கூட அவன் காதோரமாக உரசிச் சென்றன. எனினும் குறிப்பிட்ட இடத்தில் குதிரையைக் கண்டான். ஏறிக்கொண்டு மின்னலைப் போலத் தாவிப் பறந்தான்.

சில மணி நேரத்தில் தலைமைக் காரியாலயத்தை யடைந்து பரபரப்புடன் கதையைச் சொன்னான்.

"......ஸ்பானியர்களின் அக்கிரமங்களுக்காக உன்னைப் பழிவாங்குவதில் பலனில்லை. உன்னை மன்னித்து விடுகிறேன்" என்று தலைமை அதிகாரி சொன்ன வார்த்தைகள் அவனுக்கு உற்சாக மூட்டுவனவாயில்லை.

"அரசர் காதில் விழுந்தால்......உன்னைச் சுட்டு விடும்படியாகத்தான் உத்தரவிடுவார். ஆனால்...... பார்க்கலாம். இப்பொழுது அதைப்பற்றிப் பேசவேண்டாம். ஸ்பானியர்கள் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டதற்காக நாமும் கோரமாகப் பழிக்குப்பழி வாங்கி அவர்களைக் கதிகலங்க வைக்க வேண்டும்." என்று உறுமினார்.

சற்று நேரத்திற்கெல்லாம் அவர் தலைமையில் ஒரு பெரிய சைன்யம் மென்டா நகரத்தை நோக்கி வேகமாகச் சென்றது. விக்டரும் அவருடன் சென்றான். தங்கள் சகபாடிகளுக்கு நேர்ந்த கதியைக் கேள்வியுற்றதும் சிப்பாய்களின் ஆத்திரம் கட்டுக்கடங்கவில்லை. வழியிலுள்ள கிராமங்கள் ஈவு இரக்கமின்றி நாசமாக்கப்பட்டன.

கடலில் காணப்பட்ட ஆங்கிலேயக் கப்பல்கள் இன்னமும் அதே இடத்திலேயே இருந்தது வியப்பையளித்தது. அவை

யுத்த தளவாடங்களை மட்டும் ஏற்றிக் கொண்டு வந்தவென்றும், கப்பற் படையை விடச் சற்று வேகமாக வந்து விட்டதால், அவைகளும் வரும் வரையில் அங்கேயே நின்று விட்டதாகவும் பின்னால் தெரிய வந்தது. ஆங்கிலேயர் உதவியை எதிர் பார்த்திருந்த மெண்டா நகரவாசிகள் அதை நம்பி அவசரப்பட்டு கலகத்திற்குக் கிளம்பி விட்டனர், அந்த உதவி கடைசி வரையில் கிடைக்காதது அவர்களுக்கு ஏமாற்றத்தையே அளித்தது.

பிரஞ்சுத் தளபதியின் முரட்டுச் சுபாவம் அவர்கள் அறியாததல்ல. அவர் மெண்டா நகர் முழுவதையுமே சுட்டுப் பொசுக்கி மக்கள் அனைவரையும் கொலை செய்து விடுவதற்கும் தயங்க மாட்டார் என்பது எல்லோருக்கும் தெரியும். எனவே வேறு வகையின்றி நிபந்தனையின்றிச் சரணடைந்தனர். ஊர் முழுவதற்கும் கூட்டபராதம் விதிக்கப்பட்டது. அதற்குப் பணயமாக சில முக்கியஸ்தர்கள் கைது செய்யப்பட்டனர். அரண்மனையைப் பிரஞ்சுப்படை ஆக்கிரமித்துக் கொண்டது. லெகான் பிரபுவின் குடும்பத்தினர் அனைவரும் அரண்மனையிலேயே ஒரு அறையில் சிறைப்படுத்தப் பட்டனர். சுமார் இருநூறு ஸ்பானிய முக்கியஸ்தர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்; இன்னும் அநேகரைத் தூக்கிலிடுவதற்காக ஆயத்தங்கள் செய்யப்பட்டன.

இதற்கிடையில் விக்டர் தன் பிரதம தளபதியை அணுகி,

“ஒரு அவசர விண்ணப்பம்...” என்று தயங்கி நின்றான்.

“என்ன—உனக்குக் கூடவா?”

“லெகான் பிரபு அவரையும் அவர் குடும்பத்தையும் மட்டும், தூக்கிலிடாமல், சிரச்சேதம் செய்து விடும்படியாக மிக மிகக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறார்.”

“அப்படியே ஆகட்டும்.”

“அவர்கள் தப்பியோட மாட்டோம் என்று உறுதி கூறுகிறார்கள். அவர்கள் கால் கைகளிலுள்ள தளைகளை அவிழ்த்து...”

“சரி, ஆனால் அதற்கெல்லாம் நீ தான் பொறுப்பு.........”

“அவர்.........தம் இளைய மகனை மட்டும் காப்பாற்றி விட்டால் தம்முடைய சொத்து பூராவையும் உங்களுக்கே கொடுத்து விடுவதாக......”

“சொத்துக்களா.........! அவைகளெல்லாந்தான் பறிமுதலாகி அரசாங்க சொத்தாகிவிட்டதே! ஆனால்...” சற்று தாமதித்தார். பிறகு-“லெகான் பிரபு தம் சந்ததி அழியாமல், தம் குடும்பப் பெயர் என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டுமென்று தானே விரும்புகிறார். தாராளமாக அந்தப்பெயர் வழங்கட்டும். ஆனால் அந்தப் பெயரைக் கேட்டதுமே அவர் நமக்குச் செய்த துரோகமும் அதற்காக அவருக்குக் கிடைத்த தண்டனையும் யாவர் நினைவிலும் என்றென்றும் இடம் பெற வேண்டும். ஆகவே அவருடைய பிள்ளைகளுக்குள் யார் பிழைத்திருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறாரோ அவன் மற்றெல்லாரையும் சிரச்சேதம் செய்யவேண்டும், இதற்குமேல் இந்த விஷயத்தைக் குறித்து என்னிடம் வராதே.—”

அத்துடன் ராணுவ அதிகாரிகள் அனைவரும் உணவருந்தச் சென்றனர். ஆனால் விக்டருக்குச் சாப்பாட்டில்கூட மனம் செல்லவில்லை. என்ன செய்வதென்றறியாமல் திகைத்து நின்றான்.

எதிரில் லெகான் பிரபுவின் அரண்மனை சோபையிழந்து கிடந்தது, நேற்று இரவு தான் இதே அரண்மனையின் அறைகளில் யுவர்களும் யுவதிகளும் குதூகலமாக ஆடிப் பாடிக் களித்திருந்தனர். அந்த யுவதிகளும் அவர்கள் சகோதரர்களும் இன்று கொலைவாளுக்குப் பலியாகப் போகின்றனர். வாலிபம் ததும்பும் இக்காலத்தில் இயல்பான இன்பங்களில் ஈடுபட்டு மகிழ்வெய்தாமல், கொலை வாளுக்குப் பலியாக...
......

மெல்ல நுழைந்தான். தாய், தந்தை, குழந்தைகள், வேலைக்காரர்கள், எல்லோரும் அவரவர் அமர்ந்திருந்த நாற்காலிகளுடன் பிணைக்கப்பட்டிருந்தனர். இன்னும் சற்று நேரத்தில் அத்தனை பேரும் உயிரை இழக்கப்போகிறார்கள். பாவம், அவர்கள் ஒருவரையொருவர் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டது அவன் இதயத்தைத் தைத்தது. தோல்வியும் ஏமாற்றமுமே அவர்கள் முகத்தில் பிரதிபலித்தது. ஆனால் அவன் நுழைந்ததும் எல்லோருடைய முகமும் ஆவலினால் பிரகாசமடைந்தது. உடனே அவர்களுடைய கட்டுகளை அவிழ்த்து விடும்படி உத்திரவிட்டான். கிளாராவின் கைகளைத் தானே அவிழ்த்து விடுத்தான். ஆவலுடன் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். அவளுடைய சோகந்ததும்பும் முகத்திலும் லேசாகப் புன்னகை தவழ்ந்தது. இந்த நிலைமையிலும், அவளால் அவளுடைய மிருது

விவசாயிகள் கஷ்டம் நீங்க
உணவு நெருக்கடியைத் தவிர்க்க

BMB

PLOW-MATE 6 h. p.
Light Tractor.

டிராக்டர்களை உபயோகியுங்கள்!

குறைந்த ஆட்கள்! குறுகிய நேரம்!
அதிகப்படி தானியம்!! சிக்கன சிலவு!!
— நிரந்தர விளைச்சல்!!! —

நிலத்தை உழுதல், செம்மைப்படுத்துதல்
விதை விதைத்தல், அறுவடை செய்தல்
இவைகள் **B. M B.** டிராக்டர்களினால் சுலப
— மாகச் செய்யப்படுகின்றன! —



Distributors:

SIMPSON & Co., Ltd.,
MADRAS 2.

Apply to:

TANJORE MOTOR TRADES,
PENNINGTAN ROAD,
TANJORE.

வான கைகளைப் பற்ருமலிருக்க முடியவில்லை. அவளுடைய கன்னங்கரிய கூந்தலின் அழகையும், வளமும், வனப்புமிக்க உருவ அமைப்பையும் சிலாக்கிக்காமலிருக்க முடியவில்லை. ஸ்பானியருக்கே இயல்பான நிறம். ஸ்பானியக் கருவிழிகள். அவள் முழுக்க முழுக்க ஸ்பானியப் பெண்மையின் அமர வடிவமாக விளங்கிஞள். தீராத பசியுடன் தன் விழிகளால் விழுங்கியபடி நின்ருன்.

"போனகாரியம் .... ஜயந்தானு?" என்ற அவளுடைய மெல்லிய குரலொலியிலுங்கூட அவள் குமரியுள்ளத்தின் குழைவும் பெண்மையின் நளினமும் இயல்பாக மிளிர்ந்தன. விக்டருக்குத் தன் இதயக்குமுறலை அடக்க முடியவில்லை, அவளுடைய தம்பிகளைப் பார்த்தான். அயலைப் பார்த்தான். மீண்டும் அந்த ஸ்பானிய வீர இளைஞர்களைப் பார்த்தான். மூத்தவன்—ஜ்வானிட்டோவுக்கு முப்பது வயதிருக்கும். கட்டையான உருவம். ஆனல் எடுப்பான தோற்றம். ஸ்பானிய பாரம்பரியத்திற்கேற்ற மிடுக்குடனும் செருக்குடனும் கம்பீரமாக நின்ருன். அவனுக்கு இளையவன் பிலிப். இருபது வயதிருக்கும். உருவத்தில் கிளாராவைப் போன்றவன். கடைசிக் குழந்தை மானுவேலுக்கு எட்டு வயதிருக்கும். கிழட்டுப்பிரபு நரைத்து வெளுத்து போய் முரில்லோ எழுதிய சித்திரத்தைப்போலக் காட்சியளித்தார்.

விக்டர் ஒவ்வொருவரையும் கவனித்தான். தன் தளபதி சொன்ன நிபந்தனைகளை இவர்களில் யாராவது ஒப்புக்கொள்வார்களா? அதை அவர்களிடம் தெரிவிக்கக்கூட அவனுக்கு நாவெழவில்லை. எனினும் துணிந்து மெதுவாகக் கிளாராவை யணுகி, திக்கித் திணறிச் சொன்ஞன்.

க்ஷண நேரம் அந்த ஸ்பானிய வீரமணியின் உடலும் மனமும் பதறின. அடுத்தகணம் தந்தைக்குமுன் மண்டியிட்டு, "அப்பா, நீங்கள் ஜுவானிட்டோவுக்கு இடும் கட்டளைகளை நிச்சயம் நிறைவேற்றுவதாக உறுதி தரச் சொல்லுங்கள்......"என்ருள்.

பிரபுவின் மனைவி சிறிது நம்பிக்கையுடன், நடுநடுங்கிக்கொண்டு மகளின் பக்கத்தில் வந்தாள். ஆனல் இந்தச் செய்தியைக் கேட்டதும் மூர்ச்சித்து விழுந்தாள்.

ஜுவானிட்டோ கூட்டிலடைபட்ட சிங்கமெனக்குமுறிஞன். உள்ளம் வெதும்பிஞன். தவியாய்த் தவித்தான்.

விக்டர் அங்கே கைதியாயிருந்த வேலைக்காரர்களைக் கொலைக்களத்திற்கு அனுப்பிவிட்டு அரண்மனையைப் பாதுகாத்துவந்த சிப்பாய்களையும் வெளியே அனுப்பிவிட்டான். விக்டரைத்தவிர வேறு அன்னியர் எவரும் அங்கே இல்லை. லெகான் பிரபு எழுந்தார்.

"ஜுவானிட்டோ"

பதிலுக்கு அவன் தலைகுனிந்தான் முடியவே முடியாது என்ற பாவத்தில். பிறகு பக்கத்திலிருந்த நாற்காலியில் தடாலென்று விழுந்து தன் வறண்ட விழிகளால் தந்தையையும், தாயையும் மாறிமாறிப் பார்த்தான்.

கிளாரா அவனிடம் ஓடிப்போய் அவன் மடியில் உட்கார்ந்தபடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவன் கண்களை முத்தமிட்டாள். பிறகு உற்சாகமும் உணர்ச்சியும் ததும்பும் குரலில்,—

"ஜுவானிட்டோ. உன் கையால் மரணமடைவது எனக்கு எவ்வளவு இன்பமாக இருக்கும் தெரியுமா? நீ அதைக் கொஞ்சங்கூட உணரவில்லையே! எவஞே ஒரு இரக்கமற்ற கொலையாளி தன் அருவருக்கத்தக்க கைகளால் என்னைத் தொடுவதை நீ இதன் மூலம் தவிர்த்துவிடலாமல்லவா! உயிருடனிருந்தால் இன்னும் என்னென்ன துன்பங்கள் தொடருமோ? அதினின்றும் ஒரேயடியாக நீ என்னை விடுவிக்கலாமல்லவா! அன்புள்ள ஜுவானிட்டோ என்னை இன்னெருவனுடையவளாகக் காண உன் மனம் சகிக்குமா? சொல்லு........."

அவன் வெல்வெட் விழிகளால் விக்டரைக் கனல் கக்குவதைப்போலப் பார்த்தான். ஜுவானிட்டோவின் இதயத்தில் பிரஞ்சுக்காரர் மீதுள்ள வெறுப்பை இன்னும் அதிகமாகக் கிளறிவிட வேண்டுமென்றே விரும்பிஞள்.

"அதைரியப் படாதே. அரச பரம்பரையில்வந்த நமது வமிசம் பூண்டற்றுப் போய்விடும். அதை நினைத்துப்பார்." என்ருன் அவன் தம்பி பிலிப்.

கிளாரா எழுந்தாள். மற்றவர்களும் விலகிவிட்டார்கள். தந்தையும் அவர் சொல்லைத் தட்டி நிற்கும் தனயனுமாக எதிரெதிரே நின்றனர்.

"ஜுவானிட்டோ. நான் உன்னைக் கட்டளையிடுகிறேன்." என்ருர் கிழப்பிரபு, வெகு கம்பீரமாக. அதற்கும் அவன் சளைக்க

வில்லை. உடனே அவர் அவன்முன் மண்டியிட்டார். கிளாரா, பிலிப், மானுவேல் முதலியோரும் அவரைப்போலவே மண்டியிட்டு — தந்தையின் சொற்படி நடந்து நமது வமிசம் நாசமாகாமல் காப்பாற்று— என்று கெஞ்சும் பாவனையில் கையேந்தி நின்றனர்.

ஸ்பானிய ரத்தம் உன் உடலில் துடித்து ஓட வில்லையா! அது எழுப்பும் உணர்ச்சியும், உத்வேகமும் உன்னை ஆகர்ஷித்து ஆட்கொள்ளவில்லையா? உன் கடமைகளை நீ கொஞ்சங்கூட உணரவில்லையா? என் மகனாகப் பிறந்து என்னை இன்னும் எவ்வளவு நேரந்தான் உன்முன் மண்டியிட்டிருப்பதைப் பார்த்துக்கொண்டிருக்க போகிறாய்? உன் வாழ்க்கையும், உன் மனத்துயர்களையும், பரதவிப்புகளையும் மட்டுமே நினைத்துக் கொண்டிருக்க உனக்கு உரிமை ஏது?" உள்ளமுருக உணர்ச்சி ததும்பக் கேட்டார். பிறகு தன் மனைவியிடம் திரும்பி,—" இவன் என் மகன்தானா?" என்று குமுறினார்.

"அவன் சம்மதித்து விடுவான்' என்று அவன் அன்னை உள்ளக் கொதிப்பை அடக்கமாட்டாமல் கதறினாள். ஜுவானிட்டோ லேசாக நெற்றியைச் சுருக்கியதை அவள் கண்டாள். அவன் தாயுள்ளம் மட்டும் அதைப் புரிந்துகொண்டது.

இரண்டாவது பெண் மேரிக்குவிட்டா அன்னையின் பக்கத்தில் மண்டியிட்டு அவளை இறுகத் தழுவிக்கொண்டிருந்தாள். அவள் கண்களிலிருந்து புலபுலவென்று கண்ணீர் வழிந்தது. அதைக்கண்ட சிறுவன் மானுவேல் அவளைக் கடிந்து கொண்டான்.

இந்நிலையில் அரண்மனைப் பாதிரி வந்தார். எல்லோருமாக ஜுவானிட்டோவிடம் சென்றனர். விக்டருக்கு இனிமேலும் இந்தப் பரிதாபக் காட்சியைக் கண்கொண்டு பார்க்கத் துணிவில்லை. கிளாராவிடம் மட்டும் சைகையால் தெரிவித்துவிட்டு, இவர்களுக்கு இன்னும் ஏதாவது உதவி செய்வது சாத்தியமா என்ற இறுதி முயற்சியில் புறப்பட்டான். ராணுவ அதிகாரிகள் இன்னும் சாப்பிட்டுக் கொண்டும், குடித்துக் கொண்டும் கொட்டமடித்தபடி இருந்தனர். தளபதிக்குக் கோபம் தணிந்ததாகத் தெரியவில்லை.

ஒருமணிநேரம் சென்றது. லெகான் பிரபுவின் குடும்பம் தண்டிக்கப்படும் காட்சியைக் காண அழைக்கப்பட்டிருந்த நகரவாசிகள் திரள்திரளாக கூடிவிட்டனர். தூக்கு மேடையில், பிரபுவிடம் விசுவாசமாயிருந்த வேலைக்காரர்களின் பிணங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. அதற்கு முப்பது தப்படிக்கப்பால் கொலைக்களம் தயாரிக்கப் பட்டிருந்தது. அங்கே ஒரு பெரிய கொடுவாள் பயங்கரமாக மின்னிக்கொண்டிருந்தது. பக்கத்தில் ஒரு கொலையாளி — ஒருசமயம் கடைசி நேரத்தில் ஜுவானிட்டோ மறுத்து விட்டால்—காரியத்தை முடிப்பதற்காகக் காத்திருந்தான். எங்கும் அமைதி நிலவியது.

சற்று நேரத்தில் சிப்பாய்களின் கனத்த காலடியோசை, ஆயுதங்களின் ஒலி, அத்துடன் ராணுவ அதிகாரிகள் விருந்தில் குடித்துவிட்டு அட்டகாசமாகச் சிரித்துக் கொக்கரிக்கும் சப்தமும் கலந்து ஒலித்தன.

எல்லோருடைய கண்களும் அரண்மனையைத் துழாவின.

பிரபுவின் குடும்பத்தினர் சாவை வரவேற்க, கம்பீரமாக—ஆனால், வெகு அடக்கமாக, அமைதியாக, வந்துகொண்டிருந்தனர். எல்லோருடைய முகத்திலும் சாந்தி நிலவியது. ஆனால் ஒருவன் மட்டும், மெய் சோர்ந்து, தளர்ந்து தள்ளாடி நடந்து, பக்கத்தில் வரும் பாதிரியின்மேல் சாய்ந்து கொண்டு வந்தான். உயிரோடிருக்கும்படியாகத் தண்டிக்கப்பட்ட அவனுக்குப் பாதிரியார் தமக்குத்தெரிந்த தர்ம நியாயங்களையும், மதானுபவ கருத்துக்களையும், சொல்லி ஆறுதலளிக்க முயன்றார். அந்தக்காட்சியைக் கண்ணுற்றதுமே அங்கேயிருந்த கொலையாளியும், பொது மக்களும் அவன் கொலையாளியாயிருக்கச் [ஒருநாளைக்குமட்டும்] சம்மதித்து விட்டான் என்பதையறிந்தனர்.

பிரபு, அவர் மனைவி, கிளாரா, மேரிக்குவிட்டா, பிள்ளைகளிருவர் எல்லோரும் தனித்தனியாக மண்டியிட்டனர். பாதிரி மெதுவாக ஜுவானிட்டோலை நடத்திச் சென்றார். பலிபீடத்தில் ஏறி நின்றதும் வழக்கமாக அங்கே இருக்கும் கொலையாளி அவன் கையைப் பிடித்துத் தனியாக அழைத்துக் காதோடு ஏதோ சொன்னான். ஒரு சமயம், அவன் தொழில் முறையின் நுணுக்கங்களைத் தெரிவித்திருக்கலாம்— ஒருவர் மற்றவர் கொலையிடப்படுவதை நேர் முகமாகக் காணாதவிதத்தில் அவர்களைத் தனித்தனியாகப் பாதிரியார் இருக்கச் செய்தார். அவர்கள் எல்லோரும் நிர்ப்பயத்துடன் நிமிர்ந்து நின்றனர். என்ன இருந்தாலும் ஸ்பானியர்களல்லவா?

கிளாரா மற்றவர்களையெல்லாம் முந்திக் கொண்டு—ஜுவானிட்டோ, எனக்கு மனம்

தாளவில்லை. என்மேல் இரங்கி என்னை முதலில் தீர்த்துவிடு என்று கெஞ்சினாள். அவள் பேசி முடிப்பதற்குள் விக்டர் வெகு வேகமாக ஓடிவந்தான். கிளாரா மண்டியிட்டப்படி தலை குனிந்திருந்தாள். அவள் அழகிய கழுத்து கத்தியைத் தன்மேல் சீக்கிரமாக வந்து விழும்படி மன்றாடிக் கெஞ்சுவது போல இருந்தது.

விக்டருக்குக்கால்கள் தள்ளாடின. எந்த க்ஷணமும் மயங்கிக் கீழே விழுந்துவிடுவான் போல இருந்தது. எனினும் மிகவும் சமாளித்துக் கொண்டு,

"கிளாரா........," என்று தயங்கினான்.

பதிலில்லை.

"நீ என்னைக் கலியாணம் செய்து கொள்ள உடன்பட்டால் தளபதி உன்னை மன்னித்து விடுவார்......." என்று தன் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஈனஸ்வரத்தில் முணகினான். அந்த ஸ்பானிய வீரவனிதை வெகு அலட்சியமாக அவனை ஏறிட்டுப்பார்த்தாள்.

"சரி ஜுவானிட்டோ. சீக்கிரம்..." என்றாள், சற்றுகூட கலக்கமோ, தயக்கமோ இல்லாத குரலில். அவள் தலை விழுந்து உருண்டது விக்டரின் காலடியில்.

பிறகு பிலிப்பின்முறை. அன்னை கண்டாள். பெற்ற வயிறு பதறியது. தாய்மையுள்ளம் குமுறியது, உடல் நடு நடுங்கியது. எனினும் அந்த வீராங்கனையும் தன் அக உணர்ச்சிகளை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாமல் அடக்கிக் கொள்ள முயன்றாள்.

ஜுவானிட்டோ அண்ணா—நான் சரியாக நிற்கிறேனா?—என்றான் குழந்தை மானுவேல். அடுத்தபடியாக அவன் தங்கையின் முறைவந்தபோது—"ஐயோ! மேரிக்கு விட்டா-நீ அழுதுகொண்டிருக்கிறாயா?" என்றான் ஜுவானிட்டோ.

"ஆமாம் அண்ணா. உன்னைப்பற்றி நினைத்துக் கொண்டுதான். நாங்களெல்லோரும் போனபிறகு நீ தன்னந்தனியாக எவ்வளவு துக்கத்துடன் தவித்துக்கொண்டு..." என்று தேம்பினாள். பிறகு கிழப்பிரபுவின் வாட்ட சாட்டமான கம்பீரமான உருவம் நெருங்கியது. தம் குழந்தைகளின் ரத்தம் சிந்திய இடத்தைப் பார்த்தார். எதிரில் நிசப்தமாக அசைவற்று நிற்கும் கூட்டத்தைப் பார்த்தார். கைகளை ஜுவானிட்டோவிடம் உயர்த்தியபடி, "ஸ்பானியர்களே! ஒரு தந்தையின் ஆசியை என் அருமை மகனுக்கு அளிக்கிறேன். சரி பிரபு. நிர்ப்பயமாக வெட்டு; இதனால் உனக்கு அவதூறு எதுவுமே கிடையாது'.

அவனுடைய அருமை அன்னை பாதிரியின் கையைப் பிடித்துக் கொண்டு அவனைச் சமீபித்தது-"ஐயோ-எனக்குப் பாலூட்டி வளர்த்த அன்னையையா......" என்று கதறினான். கூட்டத்திலிருந்த ஒவ்வொருவரின் இதயமும் இளகிக் கண்கலங்கினர். குடித்துவிட்டுக் கும்மாளமடித்துக் கொண்டிருந்த ராணுவ அதிகாரிகளின் கூச்சல்கூட இதைக்கேட்டதும் நின்று விட்டது.

மகனைப்பார்த்தாள், அவன் மன நிலையையுணர்ந்தாள். அவன் திட புத்தியும் தைரியமும் அவனைக் கைவிட்டு விட்டதையும், அவன் நிலை கலங்கி நிற்பதையும் அவன் தாயுள்ளம் அறிந்தது. ஒரு தாவுத் தாவினாள்...... செங்குத்தான பாறைகளுக்கிடையேயுள்ள பள்ளத்தாக்கில் விழுந்து அந்த வீரத்தாயின் உடல் சுக்கு நூறாகச் சிதறியது. கூட்டத்திலிருந்தவர் அனைவரும் பிரமித்து நின்றனர். ஜுவானிட்டோ மயக்கமடைந்து விழுந்தான்.

[பால்ஸாக் (1799-1850) என்ற பிரபல பிரஞ்சு எழுத்தாளரின் Executioner என்ற கதையின் சுருக்கம்.]

198088

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauvei Colour Press, Besant Road, Kumbakonam.

தீபாவளி ரிலீஸ்
இவள்
காதலை
இருவர்
விரும்பி
னர்...
...காசாசையால்
காதலைத் தியாகம்
செய்தான் குஞ்சன்,
கடைசியில்
அக்காசும்
அவனைக்
கைவிட்டது!
குஞ்சன்
தயாரிப்பு. C.A. அய்யாமுத்து
டைரக்ஷன்: C.A. அய்யாமுத்து, T.R. கோபு
மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்கள்
புதுக்கோட்டை சமஸ்தானம், விநியோக உரிமையாளர்கள்;
ராயல் டாக்கி டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் மதுரை
ஜூபிடர் பிக்சர்ஸ் சர்க்யூட்
மதராஸ் &
திருப்பூர்..

டி எஸ். ஆர்.

தைலங்களுக்கு நிகரில்லை என்பது எல்லோருக்கும் கைகண்ட அனுபவம்.

வாசனைத் திரவியங்களுக்கோ கேட்பானேன். சுதந்திர இந்தியாவில் கோகுல் அம்பர் ஊதுவத்தி மணக்காத மாளிகையுமுண்டோ!

T. S. R. & Co.

கும்பகோணம்.